ருப்பனந்தாட் காசிமடத்து வெளியீடு

MADRAS
968

செந்திலாண்டவன் துணை

மதுரை

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

குமரகுருபர சுவாமிகள் இயற்றியது

MATURAI MINATCIYAMMAI PILLAIT TAMIL

இது

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்

எழுதிய குறிப்புரையுடன்

KUMARAKURUPARA CUVAMIKAL

அவர்கள் குமாரர்

S. கலியாணசுந்தரையரால்

Comm by CAMINATAIYAR (U V)

திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி

அருணந்தித் தம்பிரான் சுவாமிகளவர்கள் விரும்பியபடி

சென்னை, கபீர் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப் பெற்றது.

உரிமைபதிவு

வியய௵ தை மீ
1947

முகவுரை

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் திருச்செந்தூரிலிருந்து மதுரைக்கு வந்து தங்கியிருந்த பொழுது இயற்றி அக்காலத்தில் அங்கே அரசாண்டு கொண்டிருந்த திருமலை நாயக்கருடைய முன்னிலையில் அரங்கேற்றப்பெற்ற தென்பர். இதனை அரங்கேற்றுகையில் ஸ்ரீ மீனாட்சியம்மையே குழந்தையுருவாக எழுந்தருளி வந்து கேட்டு மகிழ்ந்தனரென்றும், குமரகுருபரர் முத்தப் பருவத்தை அரங்கேற்றிக் கொண்டிருக் கையில் தம் திருக்கழுத்திலிருந்து முத்துமாலை ஒன்றை எடுத்து இவருக்கு அணிந்துவிட்டு மறைந்தனரென்றும் கூறுவர்.

இந்நூல் குமரகுருபர சுவாமிகளுடைய மற்றப் பிரபந்தங்களோடு 1939-ஆம் வருஷம் பதிப்பிக்கப்பெற்றது. அப்பிரபந்தங்கள் மறுமுறை அச்சாகிவரும் நிலையிலுள்ளன. அவை வெளி வருவதற்குச் சில மாதகாலம் ஆகுமாதலாலும், இந்நூல் சில பரீட்சைகளுக்குப் பாடமாக வைக்கப்பெற்றிருத்தலாலும் மாணாக்கர்களின் நலன் கருதி இப்போது இது தனியே பதிப்பிக்கப் பெறலாயிற்று.

இப்பிரபந்தத்தில் இந்த நூலாசிரியர் வாக்கிலிருந்து மேற்கோளாகக் காட்டப்பெற்ற செய்யுட்களின் எண்கள் மொத்த எண்களாகும்.

இந்த நூலின் அருமை பெருமைகளையும் நூலாசிரியர் வரலாறு முதலியவற்றையும் குமரகுருபர சுவாமிகள் பிரபந்தங்கள் எல்லாம் அடங்கிய புத்தகத்தால் அறியலாம்.

மாணாக்கர்களுடைய பயன்கருதி இதனைத் தனியே அச்சிட்டு உதவ முன்வந்த ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித்தம்பிரான் சுவாமிகளவர்களுடைய பெருந்தகைமை மிகவும் பாராட்டற்குரியது.

இதனை அச்சிடுங்காலத்தில் ஒப்பு நோக்குதல் முதலிய உதவி புரிந்த, சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் ஹைஸ்கூல் தலைமைத் தமிழாசிரியர் ம-ா-ா-ஸ்ரீ வி. மு. சுப்பிரமணிய ஐயர், B.O.L. அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன்.

இங்ஙனம்

S. கலியாணசுந்தரையர்.

5 - AUG 1947
MADRAS

இப்பதிப்பில் எடுத்துக்காட்டிய நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி.

அகநா - அகநானூறு
அடியார் - அடியார்க்கு நல்லாருரை
ஐங்குறு - ஐங்குறுநூறு
கந்தர்கலி - கந்தர்கலி வெண்பா
கம்ப - கம்பராமாயணம்
கல் - கல்லாடம்
சிலப் - சிலப்பதிகாரம்
சிவஞா. சித்தி - சிவஞானசித்தியார்
சிவஞான - சிவஞானபோதம்
சிறுபாண் - சிறுபாணாற்றுப்படை
சீவக - சீவக சிந்தாமணி
சூடா - சூடாமணி நிகண்டு
சேது - சேது புராணம்
தக்க - தக்கயாகப்பரணி
தமிழ்நா - தமிழ் நாவலர் சரிதை
தமிழ்விடு - தமிழ்விடு தூது
தனிப் - தனிப்பாடல்
திருச்சிற் - திருச்சிற்றம்பலக் கோவையார்
திருநா - திருநாவுக்கரசு நாயனர்
திருவரங்கத்தந் - திருவரங்கத்தந்தாதி
திருவா - திருவாசகம்
திருவிளை - திருவிளையாடற்புராணம்
தே - தேவாரம்
தொல் - தொல்காப்பியம்
ந - நச்சினர்க்கினியருரை
நாலடி - நாலடியார்
நான்மணிக் - நான்மணிக்கடிகை
பரி - பரிபாடல்
பரிமேல் - பரிமேலழகருரை
பி - ம் - பிரதி பேதம்
புறநா - புறநானூறு
பெரியநாயகி ஆசிரிய - பெரியநாயகியம்மை ஆசிரிய விருத்தம்
பெருங் – பெருங்கதை
பெரும்பாண் - பெரும்பாணாற்றுப் படை
பேர் - பேராசிரியருரை
மணி - மணிமேகலை
மதுரைக் - மதுரைக் காஞ்சி
முருகு - திருமுருகாற்றுப்படை
மூத்த - திருவிரட்டை - மூத்தபிள்ளையார் திருவிரட்டை மணிமாலை
விநாயக - விநாயக புராணம்
வி-பா - வில்லிபுத்தூராழ்வார்பாரதம்

6 - AUG 1947
MADRAS

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துத் தலைவர்களாக இருபதாம் பட்டத்தில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகளவர்கள் மனமுவந்தமைத்திருக்கும்

பேரறங்களும்

பரிசுகளும் :

I. ஸ்ரீ அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் சிவஞான சித்தியார் உபந்நியாசக் கட்டளை (1944-ஆம் ஷ அண்ணமலை ஸர்வகலாசாலையாருடைய அங்கீகாரம் பெற்றது.)

சைவசித்தாந்த சாஸ்திரங்களின் பயிற்சி பெருகும்பொருட்டு ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சுவாமிகளவர்கள் ஞாபகார்த்தமாக 1944-ஆம் வருஷம் ஏற்படுத்தியது. இதன் மூலதனம் ரூ. 15,000.

இதன் வட்டித்தொகையிலிருந்து அலகபாத்து சர்வகலாசாலையிலும், காசி ஹிந்து சர்வகலாசாலையிலும் இந்தக்கட்டளையை ஏற்படுத்தியவர்கள் சம்மதத்தின்மேல் வேறு சர்வகலாசாலைகளில் உபந்நியாசங்கள் செய்யும்பொருட்டு மாற்றினலன்றி ஆண்டுதோறும் நான்கு உபந்நியாசங்களுக்கு ரூ. 400 சம்மானம் அளிக்க வேண்டும்; சம்மானத் தொகை போக மிஞ்சுவதை மூலதனத்தோடு சேர்க்கவேண்டும்.

எந்த வருஷத்திலேனும் ஸிண்டிகேட்டார் உபந்நியாசம் செய்யத் தகுதியுள்ளவர்களில்லையென்று கருதினல் அதனல் கொடுபடாமல்சேரும்தொகை மூலதனத்துடன் சேர்க்கப்படவேண்டும்.

நான்கு உபந்நியாசங்களுள் மூன்று காசி ஹிந்து சர்வகலாசாலையிலும் ஒன்று அலகபாத்து சர்வகலாசாலையிலும் சர்வகலாசாலையார் குறிப்பிடும் இடங்களில் செய்யவேண்டும். உபந்நியாசம் சைவசித்தாந்தத்தின் கொள்கைகளை விவரமாக விளக்கக்கூடியவாறு இருக்கவேண்டும். உபந்நியாசகராக அண்ணமலை சர்வகலாசாலையின் ஸிண்டிகேட்டார் தம் சர்வகலாசாலையிலுள்ள ஹிந்து ஆசிரியர்களையோ சைவசித்தாந்த சாஸ்திரத்தில் நல்ல பயிற்சியுள்ள வேறு ஹிந்துக்களையோ நியமிப்பார்கள். ஒரு வருஷம் உபந்நியாசம் செய்தவர் 12 வருஷங்களுக்குப் பிறகே இரண்டாம் முறை

உபந்யாசம் செய்ய வரலாம். உபந்யாசகர் எந்த ஜாதியின ராகவோ ஆண்பாலாராகவோ பெண்பாலாராகவோ இருக்கலாம். உபந்யாசங்கள் செய்த ஒரு மாதத்திற்குள், உபந்யாசங்களை அண்ணாமலை சர்வகலாசாலைக்கும் இந்தக் கட்டளையை ஏற்படுத்திய வர்களுக்கும் அவர்களுடைய வார்சுகளுக்கும் அனுப்பவேண்டும். ஸிண்டி கேட்டாருடைய நோக்கம்போல் இந்த உபந்யாசங்களை அச்சிடலாம்.

சிவஞானசித்தியார் பரபக்கம் சுபக்கம் என்னுமிவற்றின் சூத்திரங்களிலும் இவற்றிற்குரிய அறுவருரைகளிலும், ஸ்ரீ உமா பதி சிவாசாரியாருடைய சிவப்பிரகாசத்திலும் ஆழ்ந்த பயிற்சியும் ஆராய்ச்சியும் இருத்தலை உபந்யாசங்கள் காட்ட வேண்டும்.

காசி ஹிந்து சர்வகலாசாலையாரையும் அலகபாத்து சர்வகலா சாலையாரையும் கலந்துகொண்டு தசராவிடுமுறைக்கு முன்போ பின்போ உபந்யாசங்களை நடத்த ஏற்பாடு செய்யவேண்டும்.

உபந்யாசங்களை முடித்துவிட்டு உபந்யாசகர் திரும்புகை யில் சிதம்பரத்திலுள்ள ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் அபிஷேகத் துக்காக ஒரு குடம் கங்காதீர்த்தத்தைக் கொண்டு வருவதோடு அந்த விவரத்தை இந்தத் தருமஸ்தாபகரவர்களுக்கு உபந்யாசப் பிரதி அனுப்பும்பொழுது தெரிவிக்கவேண்டும்.

சம்மானம் ரொக்கமாகவோ உண்டியல் வடிவமாகவோ அளிக் கப்படும். ஒவ்வொரு வருஷ முடிவிலும், உபந்யாசம் செய்தவ ருடைய பெயரையும் விலாசத்தையும் சம்மானத் தொகையையும் எந்த வருஷத்திலேனும் உபந்யாசம் நடைபெறுவிட்டால் சேர்ந் திருக்கும் தொகையையும் ஸிண்டிகேட்டார் தெரிவிக்கவேண்டும். கணக்குகளைப் பிரபலமான தினசரி ஆங்கிலப் பத்திரிகையிலோ தமிழ்ப் பத்திரிகையிலோ பிரசுரிக்க வேண்டும்.

II. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சுவாமிகளவர்கள் ஞாபகார்த் தமாகக் கும்பகோணம் முனிஸிபல் எல்லைக்குள் கோட்டையூரில் ஒரு லோயர் ஸெகண்டரி பாடசாலையை அமைக்க **1945**-ஆு பிப்ரவரி மாதத்தில் ஏற்படுத்தி யது ; மூலதனம் ரூ. **11,500.** இந்தத் தொகையில் ரூ. **10,000 3½%** வட்டி யுள்ள சர்க்கார் கடன் பத்திரமாகவும், ரூ. **1500** ரொக்கமாகவும் உள்ளன.

முதல் மூன்று பாரங்களையோ, அல்லது அவற்றிற்குச் சம மான வகுப்புக்களையோ கொண்ட ஒரு பாடசாலையை நடத்தக் கும்பகோணம் நகர பரிபாலன சபையார் வசம் ரூ. 10,000 இருக் கும். அவர்கள் அதனைப் பரிபாலித்து வட்டியைக் கொண்டு பாடசாலையை நடத்தவேண்டும். இந்தத் தொகையை வேறு காரி யத்திற்கு உபயோகப்படுத்தலாகாது. 1947-ஆம் ஆு ஆகஸ்டு

மார்தம் முதல் தேதிக்குள் பாடசாலையை ஆரம்பிக்காவிட்டால் மூலதனத்தையும் அந்தத் தேதிவரை சேர்ந்திருக்கும் வட்டித் தொகையையும் சேர்த்து இந்தத் தருமஸ்தாபகரவர்களிடமாவது அவர்கள் வார்சுகளிடமாவது முனிஸிபாலிடியார் சேர்ப்பிக்க வேண்டும்.

ரொக்கமாகவுள்ள ரூ. 1,500-ஐ முனிஸிபாலிடியார் பள்ளிக்கூடம் கட்டுவதற்காக ஒரு மனையை வாங்க உபயோகிக்க வேண்டும். பள்ளிக்கூடம் அந்தக் கட்டிடத்தில் நடைபெறவேண்டும். மூன்று வருடங்களுக்குள்ளாகவோ யுத்தம் முடிந்த உசிதமான ஒரு காலத்திற்குள்ளாகவோ கட்டிடத்தைக் கட்ட ஆரம்பிக்க வேண்டும்.

குறிப்பிட்ட காலத்திற்குள் அவ்வாறு செய்யாவிட்டால் இந்த ரூ. 1500-ம் தருமஸ்தாபகரவர்களையோ அவர்கள் வார்சுகளையோ சார்ந்துவிடும்.

பள்ளிக்கூடத்தின் வருஷ நிருவாக அறிக்கையை முனிஸிபாலிடியார் திருப்பனந்தாள் காசிமடத்து ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஸ்வாமிகளவர்களுக்கு அனுப்பவேண்டும்.

III. திருவாங்கூர் மஹாராஜா அவர்கள் தேவாரப் பரிசு.

திருவாங்கூர் மஹாராஜாவாகவும், தருமசீலர்களாகவும், தாராள சிந்தையுள்ளவர்களாகவும், பக்திமான்களாகவும், ராஜ்ய பரிபாலனத்தில் உதாரண புருஷர்களாகவும், திருவாங்கூர் சர்வ கலாசாலையின் சான்ஸலராகவும், சீர்திருத்தத்தில் விசேஷ ஊக்கம் உள்ளவர்களாகவும், தமிழ்மொழியிலும் சங்கீதத்திலும் அபிமானமுள்ளவர்களாகவும் விளங்கும் மேன்மை பொருந்திய ஸர் பாலராமவர்மா, G.C.S.I., D. Litt., அவர்கள் பெயரால் 1946-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஏற்படுத்தப்பட்டது இது.

தேவாரத்தில் பயிற்சியும், தேர்ச்சியும் திருவாங்கூர் ராஜ்யத்தில் பரவும் பொருட்டு இப்பரிசு ஏற்படுத்தலாயிற்று. இப்பரிசு திருவாங்கூர் மஹாராஜா அவர்கள் பெயரால் வழங்கப்பெறும்.

இதற்கு ஏற்படுத்திய மூலதனம் ரூ. 5,000. இதனைத் திருவாங்கூர் சர்வகலாசாலையார் பரிபாலித்துவருவர். இதன் வட்டியிலிருந்து வருஷந்தோறும் தேவாரத்தை மிகத் திறமையாக ஓதும் ஒருவருக்கு ரூ. 100 (நூறு) அளிக்கப்படும்.

நான்கு வருஷங்களுக்கு ஒருமுறை சர்வகலாசாலையார் மூவர் தேவாரங்களிலிருந்து பண்கள் எல்லாம் அமைந்த 75 தேவாரங்களைப் பொறுக்கி எடுத்து அரும்பதவுரையுடன் ஒரு புத்தகரூபமாக அச்சிட்டு வெளியிட ஏற்பாடு செய்யவேண்டும். அடுத்த

நான்கு வருஷங்களில் இவையல்லாத வேறு தேவாரங்களைப் பொறுக்கி எடுக்கவேண்டும்.

பரிசுத் தொகை போக மிஞ்சும் தொகையை அப்புத்தகத்தைப் பதிப்பித்து வெளியிட உபயோகிக்தலாம். பரிசுக்காக வருபவர்களுக்கு அப்புத்தகத்தின் பிரதிகளை இலவசமாக வழங்க வேண்டும்.

இப்பரிசுக்குத் திருவனந்தபுரம் சர்வகலாசாலைக்குச் சம்பந்தப்பட்ட காலேஜ்களிலுள்ள மாணுக்கர்கள் ஜாதி வேறுபாடின்றி ஆண்பாலர்களாயினும் பெண்பாலர்களாயினும் அபேட்சகர்களாக வரலாம்.

பொறுக்கி எடுத்த 75 தேவாரங்களையும் ஏற்பட்ட பண்களில் பாராமல் நல்ல இசையோடு ஒப்பிக்கக் கூடியவர்களே பரிசுக்கு வரத்தகுதியுள்ளவர்கள்.

எந்த வருஷத்திலேனும் இருவரோ மேற்பட்டவர்களோ பரிசுபெறத் தகுதியுடையவர்களென்று கருதப்பட்டால் திருவுளச் சீட்டுப்போட்டு, யார்பேருக்குச் சீட்டு விழுகிறதோ அவருக்கே பரிசை வழங்கலாம். சர்வகலாசாலையின் கான்வகேஷன் காலத்தில் பரிசு வழங்கப்பெறும். அச்சமயம் பரிசுபெறுபவர் வரமுடியாவிட்டால் சர்வகலாசாலையார் அவருக்குப் பரிசுத் தொகையை அனுப்பிவிடலாம். பரிசு பெறுபவர் பரிசு வழங்கப்படுவதற்குமுன் காலஞ்சென்றுவிட்டால் பரிசுத் தொகை அவருடைய வார்சுக்குச் சேர்க்கப்படவேண்டும். ஒரு முறை பரிசு பெற்றவர் மறுமுறை பரிசுபெற அருகரல்லர்.

எந்த வருஷத்திலேனும் ஒருவருக்கும் பரிசு வழங்காவிட்டால் அத்தொகை மூலதனத்தோடு சேரும். எந்தக் காலத்திலேனும் மூலதனத்தோடு சேரும் தொகை மிகவும் அதிகரித்தால் சர்வகலாசாலையார் உசிதப்படி பரிசுத்தொகையை அதிகப்படுத்தவோ அதிகமான பரிசுகளை வழங்கவோ ஏற்பாடு செய்யலாம். ஒவ்வொரு வருஷத்திலும் பரிசுபெறுவோருடைய பெயரையும், விலாசத்தையும் தரும ஸ்தாபகரவர்களுக்கும் அவர்கள் வார்சுகளுக்கும் தெரிவிக்கவேண்டும்.

IV. சேரமான் பெருமாள் தேவாரப் பரிசு. (Under the approval of the Cochin Government.)

கொச்சி மன்னரர்கவும் தமிழிற் பெரும்புலவராகவும், சுந்தரமூர்த்தி நாயனரிடத்துப் பேரன்பு பூண்டவராகவும் அவருடைய பேருதவியாலும் அவருடனும் திருவஞ்சைக்களத்திலிருந்து ஆடிச் சுவாதி நன்னளில் கைலையை யடைந்து திருக்கைலாய ஞானவுலா

வைத் தமிழிலியற்றியவராகவும் விளங்கிய சேரமான் பெருமாள் நாயனுர் ஞாபகார்த்தமாக இப்பரிசு அமைக்கப்பட்டது. சுந்தர மூர்த்தி நாயனுருடைய தேவாரப் பயிற்சியும் தேர்ச்சியும் கொச்சி ராஜ்யத்தில் பரவும் பொருட்டுச் சேரமான் பெருமாள் நாயனுர் பேரால் இது நிறுவலாயிற்று.

2. இதற்கு ஏற்பட்ட மூலதனம் ரூபாய் 5,000. கொச்சி அரசாங்கத்தார் நியமிக்கும் ஒரு சபையார் இந்த மூலதனத்தைப் பரிபாலிப்பார்கள். மேற்படி சபையில் காலேஜ் தலைவர்கள் இருப்பார்கள். அந்த ராஜ்யத்திலுள்ள கல்வியிலாகா தலைமை யதிகாரியே அச்சபைக்குத் தலைவராக இருப்பார். அப்போதைக் கப்போது மேற்படி சபையார் மூலதனத்தை வட்டி அதிகமாக வரக்கூடிய வேறு இனங்களிற் போடலாம். அந்த வட்டித் தொகையிலிருந்து ரூபாய் 100 மிகவும் திறமையாகத் தேவாரம் ஓதும் ஒருவருக்கு ரொக்கமாக வழங்கப்பெறும்.

நான்கு வருஷங்களுக்கு ஒருமுறை அச்சபையார் சுந்தரர் தேவாரத்திலிருந்து பண்கள் எல்லாம் அமைந்த ஐம்பது தேவாரப் பாசுரங்களைப் பொறுக்கி எடுத்து அரும்பதவுரையோடு புத்தகமாக வெளியிடவேண்டும். பொறுக்கி எடுக்கும் பாசுரங்கள் நான்கு வருஷங்களுக்கு ஒருமுறை மாறும். ஆனுல் ஒவ்வொரு முறையிலும் “பித்தா”, “தானெனை” என்னும் பதிகங்கள் விடாமல் சேர்ந்திருக்க வேண்டும். பதிப்பின் செலவிற்கு, பரிசுத் தொகை நூறு ரூபாய்போக வட்டியில் மிஞ்சும் தொகையிலிருந்து எடுத்துக்கொள்ளலாம். காலேஜில் படிக்கும் ஹிந்துக்களே ஆண்பாலாராயினும் பெண்பாலாராயினும் பரிசுக்குவர உரியவர்கள்.

தமிழில் ஐம்பது தேவாரப் பாசுரங்களையும் பண்ணுேடு நல்ல இசையில் பாராமல் ஒப்பிக்கக் கூடியவர்களே இந்தப் பரிசுக்கு வரத் தகுதியுள்ளவர்கள். மேலே சொன்ன சபையாரே பரீக்ஷையை நடத்துவார்கள்.

பரீக்ஷை இரண்டு பிரிவுகளை யுடையது: (1) பொறுக்கி எடுத்த ஐம்பது தேவாரப் பாசுரங்களையும் பாராமல் ஒப்பித்துப் பாசுரங்களின் பொருளையும் தாற்பரியத்தையும் தெரிவித்தல்; இதற்குரிய அம்சம் 50; (2) பொறுக்கி எடுத்த ஐம்பது தேவாரப் பாசுரங்களிலிருந்து குறிப்பிடும் எவற்றையேனும் நல்ல இசையுடன் உரிய பண்களில் பாசுரங்களின் பொருள் நன்ருக விளங்கும்படி பாடுதல்; இதற்குரிய அம்சம் 50; எவர் அதிக அம்சங்களைப் பெறுகிருரோ அவரையே பரிசுக்குரியவரென்று அச்சபையார் நிச்சயிப்பர்.

எந்த வருஷத்திலேனும் இருவரோ மேற்பட்டவர்களோ பரிசுக்குரியவரென்று கருதப்பட்டால் திருவுளச் சீட்டுப் போட்டு அதில் எவர் பெயர் அகப்படுகிறதோ அவரே பரிசுக்குரியவராவர். ஒருமுறை பரிசு பெறுபவர் மறுமுறை பரிசுபெற அருகரல்லர்.

திருவஞ்சைக்களத்திலுள்ள சிவாலயத்தில் சுந்தரர், சேரமான் பெருமாள் சந்நிதியில் ஆடிச்சுவாதி விழா நடக்கையில் பரிசு வழங்கப்பெறும்.

எந்த வருஷத்திலேனும் பரிசுக்குரியவர் வரமுடியாமல் இறந்து போய்விட்டால் பரிசுத்தொகை அவருடைய வார்சுக்குக் கொடுக்கப்படும். பரிசு பெறுபவர் நேரில் வர இயலாவிட்டால் பரிசுத் தொகை அவரிருப்பிடத்துக்கு அனுப்பப்பெறும்.

V. மூவர் தேவாரப் பரிசு. இதற்கு ஏற்படுத்திய மூலதனத் தொகை ரூ. 10,000.

தென்னிந்தியாவில் விளங்கிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் என்னும் மூன்று நாயன்மார்களுடைய தேவாரங்களைப் பயில்வதை ஊக்குவதற்கும் அதனல் தெய்வபக்தியை மக்களிடையே எழுப்பி அவர்களை நன் மக்களாகச் செய்வதற்கும் இப் பரிசு அமைக்கப்பட்டது. அந்நாயன்மார் மூவரும் பரம்பொருளைப் புகழ்வனவும் பக்திச்சுவை மிக்கனவும் ஆகிய பாடல்களால் இந்நாட்டை அலங்கரித்தும், ஸ்தல யாத்திரை செய்தும், எலும்பைப் பெண்ணுக்கியதும், கல்லைத் தெப்பமாக மிதப்பித்ததும், முதலையுண்ட பாலனை அழைத்ததும் இவை போன்ற பிறவுமான அற்புதச் செயல்கள் புரிந்தும் மக்களின் முன்னேற்றத்திற்கு உழைத்துள்ளார்கள்.

2. இக்கட்டளைத்தொகை ரூ. 10,000 மதிப்புள்ள ஸர்க்கார் ஜாமீன் பத்திரங்களாக உள்ளது. இதன் பரிபாலனம் திருப்பனந்தாளிலுள்ள காசிவாசி சாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரியின் நிதியை நிர்வகிக்கும் கமிட்டியார் வசம் இருக்கும்.

3. மூலதனத்திலிருந்து வருஷந்தோறும் கிடைக்கும் வட்டியிலிருந்து ரூ. 200 சீகாழி, திருவாரூர், திருவையாறு, திருப்பனந்தாள் என்னும் முக்கியமான இடங்களிலிருந்து பரிசு பெறுபவர் ஒவ்வொருவருக்கும் ரூ. 50 வீதம் பரிசு அளிக்க உபயோகிக்கப்படும். எஞ்சிய வட்டித்தொகை தேவாரத்திரட்டை அச்சிடுவது முதலிய செலவுகளுக்கும் பரிசுக்கு முதல் மூன்று ஊர்களிலிருந்து வருபவர்களுடைய பிரயாணச் செலவுக்கும் உபயோகிக்கப்பட வேண்டும். செலவாகாமல் மிஞ்சிய தொகை மூலதனத்தோடு சேர்க்கப்பட வேண்டும்.

4. சீகாழி, திருவாரூர், திருவையாறு என்னும் ஊர்களிலுள்ள ஹைஸ்கூல்களில், 4, 5, 6-ஆம் பாரங்களிலோ அவற்றுக்குச் சமமாக அமைக்கப்படும் வேறு எந்த வகுப்புக்களிலோ படிக்கும் மாணுக்கர்களும், திருப்பனந்தாள், காசிவாசி சாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரியில் யூனிவர்ஸிடி பரீக்ஷைக்குப் படிக்கும் மாணவர்களும் இப்பரிசுக்கு வரத் தகுதியுடையவர்கள். அவர்கள் கமிட்டியாரால் வெளியிடப்படும் புத்தகத்திலுள்ள தேவாரங்களிலிருந்து, ஒவ்வொரு பதிகத்திற்கும் குறைந்தது ஒரு பாசுரம் வீதம் ஒவ்வொரு நாயனுர் தேவாரத்திலிருந்தும் 15 பாசுரங்களுக்குக் குறையாமல் மொத்தம் 50 பாசுரங்களை மனப்பாடம் பண்ணிச் சரியான பண்ணுேடு நல்ல இசையில் பாடவேண்டும்.

5. பரிசு அளிப்பதற்குரிய விதிகள் வருமாறு:—

(a) பரிசு ஜாதி வேற்றுமை யில்லாமல், ஆண்பாலாருக்கும் பெண்பாலாருக்கும் அளிக்கப்படும்.

(b) பரிசுப் போட்டிக்கு வருவோர், மேலே 4-ஆம் பாராவில் சொல்லியபடி வெளியிடப்பட்ட தேவாரங்களின் தாற்பரியம் விளங்க அவற்றை மனப்பாடம் பண்ணிச் சரியான பண்ணுேடு பாடவேண்டும்.

(c) அபேட்சகர்கள் தம் தம் விண்ணப்பங்களைத் தத்தம் கலாசாலைத் தலைமை யாசிரியர் மூலமாக ஒவ்வொரு வருஷமும் ஜூலைமீ 31உ க்குள் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியின் பிரின்ஸிபாலவர்களுக்கு அனுப்பவேண்டும்.

(d) சீகாழி, திருவாரூர், திருவையாறு, திருப்பனந்தாள் என்னும் ஊர்களிலுள்ள கலாசாலை யதிகாரிகள் தத்தம் கலாசாலைகளில் ஒரு பூர்வாங்கப்பரீக்ஷையை நடத்தி ஒருகலாசாலை யிருந்தால் மூவரையும், ஒன்றுக்கு மேற்பட்ட கலாசாலைகள் இருந்தால் அவற்றிலிருந்து மொத்தமாக நால்வரையும் பொறுக்கி எடுத்து, ஒவ்வோராண்டிலும் டிஸம்பர் மாதத்திற் குறிப்பிட்ட ஒரு தேதிக்குள் திருப்பனந்தாளுக்கு அனுப்பவேண்டும். செந்தமிழ்க் கல்லூரியின் பிரின்ஸிபாலும், கமிட்டியாரால் நியமிக்கப்படும் அவருடைய உதவியாசிரியர்கள் இருவரும் சேர்ந்து பொறுக்கி அனுப்பப்பட்டவர்களுக்கு முடிவுப் பரீக்ஷையை நடத்திப் பரிசுக்குத் தகுதியுள்ள சிறந்தவரை ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் தீர்மானிக்கவேண்டும்.

(e) செந்தமிழ்க் கல்லூரி மாணவர்களைப் பரீக்ஷிக்க முடிவுப் பரீக்ஷைக்கு நியமிக்கப்படும் உதவியாசிரியர் இருவரும் பூர்வாங்கப் பரீக்ஷைக்கு நியமிக்கப்பட்டவரல்லாத அன்னியராக இருக்கவேண்டும்.

முக்கிய குறிப்பு :—ஏதேனும் ஒரு காரணத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்கள் திருப்பனந்தாளில் நடைபெறும் முடிவுப் பரீக்ஷைக்கு வரத் தவறினல் பரிசுத் தொகையும், அவர்களுக்கு உரிய பிரயாணச் செலவு தொகையும் மூல தனத்தோடு சேர்க்கப்பட வேண்டும்.

(f) ஒருமுறை பரிசு பெறுவோர் மறுமுறை பரிசுக்கு வர அருகரல்லர்.

(g) செந்தமிழ்க் கல்லூரியின் பிரின்ஸிபால், தரும ஸ்தாபகரவர்களுக்கும் அவர்களுடைய வார்சுகளுக்கும் பரீக்ஷையின் முடிவுகளைத் தெரிவிக்கவேண்டும்.

6. பரிசு பெறுவோருக்குரிய பரிசுத்தொகை கமிட்டியாரால் பரிசு பெறுவோர் பெயரால் உண்டியல் மூலம் சம்பந்தப்பட்ட அவ்வக் கலாசாலை யதிகாரிகளுக்கு அனுப்பப்படும்.

7. சீகாழி, திருவாரூர், திருவையாறு என்னும் ஊர்களிலிருந்து போட்டிக்கு வருபவர்களுக்கு (ஒரு கலாசாலை இருந்தால் மூவருக்கும், ஒன்றுக்கு மேற்பட்டவை இருந்தால் நால்வருக்கும்) திருப்பனந்தாளுக்கு வந்து போவதற்குரிய செலவு ஒவ்வொருவருக்கும் ரூ. 4 வீதம் அளிக்கப்படும். (மேலேயுள்ள 5-d பாராவைப் பார்க்க.)

8. மூலதனத்தின் வரவு செலவுகளுக்குக் கமிட்டியார் ஒழுங்கான கணக்கு வைத்திருக்கவேண்டும். பரிசுகளும், வெளியூரிலிருந்து வருவோர்க்குப் பிரயாணச் செலவுகளும் கொடுத்த பிறகு மிஞ்சும் தொகையைக் கமிட்டியார், பரிசுக்கு வருவோர்க்கு உதவியாக மூவர் தேவாரத்திலிருந்தும் பொறுக்கி எடுக்கப்படும் பாசுரங்களைப் புத்தகமாக அச்சிடுவதற்கு உபயோகிக்கலாம்.

ஒவ்வொரு வருஷத்திலும் பரிசு பெறுவோர் பெயர்களையும் அளிக்கப்பட்ட பரிசுத் தொகையையும் பிரபலமான இங்கிலீஷ், தமிழ்த் தினசரிகளில் வெளியிடவேண்டும். வருஷச் செலவு முழுவதும் அடங்கிய கணக்கு தரும ஸ்தாபகரவர்களுக்கும் அவர்கள் வார்சுகளுக்கும் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

9. கட்டளைத் தொகையை ஸ்தாபகரவர்களுடைய நோக்கத்துக்கு மாருன வேறு எந்தக் காரியத்துக்கும் உபயோகப்படுத்தலாகாது.

VI. காசி ஹிந்து சர்வகலாசாலைக்கு அளித்த சைவசித்தாந்தக் கட்டளை ரூ 60,000.

காசியில் காசிமடத்தை ஸ்தாபித்த மூலபுருஷராகிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஆதி குமரகுருபர ஸ்வாமிகள் ஞாபகார்த்த

மாகச் சைவசித்தாந்த சாஸ்திரத்தில் ஒரு பேராசிரியர் ஸ்தானத்தை அமைப்பதற்காக 1946-ஆம் வருஷம் ஜனவரி மாதம் ஏற்பட்டது இது.

இந்த மூலதனமாகிய ரூ. 60,000-த்தைச் சர்வகலாசாலையார் நல்ல வட்டி வரக்கூடிய இனங்களில் போடலாம்.

இந்தக் கட்டளையின் பரிபாலனம் காசி ஹிந்து சர்வகலாசாலையாரைச் சேர்ந்தது.

எந்தச் சர்வகலாசாலையிலேனும் டிகிரிபெற்றுத் தமிழிலும் ஆங்கிலத்திலும் பயிற்சியுற்றுத் தமிழிலும் சைவசித்தாந்தத்திலும் ஆசிரியராக இருக்கத் தகுதியுள்ள ஒருவரைச் சர்வகலாசாலையார் ஷை ஸ்தானத்துக்கு நியமிக்கலாம். அவர் சைவசித்தாந்தத்தில் அழுத்தமான பற்றுடையராகவும் அதைப்பற்றிக் காலேஜ் மாணவர்களுக்குத் தமிழில் உபந்நியசிக்கக்கூடிய திறமையுடையவராகவும் இருக்கவேண்டும்.

கட்டளைத் தொகையின் வருஷவட்டியிலிருந்து இரண்டாயிரத்துக்கு மேற்படாத ஒரு தொகையைப் பேராசிரியருடைய சம்பளத்துக்கு உபயோகிக்கலாம்.

சம்பளம் போக எஞ்சிய வட்டித் தொகை மூலதனம் லக்ஷ ரூபாய் ஆகும் வரையில் மூலதனத்தோடு சேர்க்கப்படும். அதன் பிறகு சர்வ கலாசாலையாருடைய உசிதப்படி பேராசிரியருடைய சம்பளத்திற்கு ரூ. 2000-க்கு மேற்பட்ட தொகையை உபயோகிக்கலாம். அப்பாலும் தொகை மிகுதிப்பட்டால் சைவசித்தாந்த சாஸ்திர சம்பந்தமான புத்தகங்களைத் தமிழிலும், ஹிந்தியிலும் இங்கிலீஷிலும் அச்சிட்டு அவற்றை இலவசமாக எல்லாச் சர்வகலாசாலையாருக்கும் விநியோகிக்கலாம். மேற்படி நூலில் ஐந்து பிரதிகள் இந்தத் தருமஸ்தாபகரவர்களுக்கும் அவர்கள் வார்சுகளுக்கும் அனுப்பப்பெற வேண்டும்.

வருஷந்தோறும் நடைபெற்ற வேலைகளின் விவரத்தையும் வரவு செலவு கணக்குகளையும் தருமஸ்தாபகரவர்களுக்கோ அவர்கள் வார்சுகளுக்கோ அனுப்பவேண்டும்.

இந்தக் கட்டளைத் தொகையைத் தருமஸ்தாபகரவர்களுடைய நோக்கத்துக்கு மாறான வேறு எந்தக் காரியத்துக்கும் உபயோகப்படுத்தலாகாது.

VII. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஆதிகுமரகுருபரஸ்வாமிகள் ஞாபகார்த்தச் சைவசித்தாந்தப் படிப்பின் சம்பள உதவிக் கட்டளை. (Under the approval of the Syndicate of the Annamalai University.)

தமிழிற் பெரும்புலமை வாய்ந்தவர்களும் காசி முதல் இரா

மேசுவரம்வரை தமிழ்க்கலையைப் பரவச்செய்தவர்களும் மொகலாய சக்கரவர்த்தியாகிய ஔரங்கசீப் காலத்தில் 16-ஆம் நூற்றுண்டில் காசியில் காசிமடத்தை ஸ்தாபித்தவர்களுமான ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஆதிகுமரகுருபர ஸ்வாமிகளின் நிரந்தர ஞாபகார்த்தமாகச் சைவசித்தாந்த சாஸ்திரம் பரவுவதைக்கருதி இந்தக் கட்டளை ஏற்பட்டது.

2. இதற்கு ஏற்பட்ட மூலதனம் ரூ. 30,000. இதன் பரிபாலனம் அண்ணுமலைச் சர்வகலாசாலையைச் சேர்ந்தது.

சர்வகலாசாலையார் இந்தத் தொகையை வட்டிவரக் கூடிய சர்க்கார் கடன்பத்திரங்களில் போடவேண்டும்.

அண்ணுமலைச் சர்வகலாசாலையில் படிக்கும் மாணுக்கர்களுக்குக் கீழே கண்ட நிபந்தனைப்படி சம்பள உதவி அளிக்கப்பெறும்.

3. இதன் வட்டித் தொகையிலிருந்து அண்ணுமலைச்சர்வகலாசாலையில் யோக்கியதையுள்ள ஏழை மாணவர் அறுவருக்கு ரூ. 135-வீதம் (மாதந்தோறும் ரூ. 15-ஆக ஒன்பது மாதங்களுக்கு) சம்பள உதவி ஜாதிமத வித்தியாசம் கருதாமல் ஆண்பாலராயினும் பெண்பாலராயினும் அளிக்கப்படும். சைவசித்தாந்தப் புலவர் வகுப்பில் படிப்பவர்களுக்குச்சம்பள உதவிகள் நான்கு அளிக்கப்படும். மற்ற இரண்டும் காலேஜ்வகுப்பில் படிக்கும் மாணுக்கர்களில் தமிழை இரண்டாம் பாஷையாகவும் சைவசித்தாந்த சாஸ்திரத்தை இஷ்டபாடமாகவும் எடுத்துக்கொண்டு படிப்பவர்களுக்கு அளிக்கப்படும்.

சம்பள உதவி செய்யும் முதல் வருஷத்தில் புலவர் வகுப்பிலுள்ள இருவருக்கும் காலேஜ் வகுப்பில் படிப்பவர்களுள் சைவசித்தாந்த சாஸ்திரத்தை இஷ்டபாடமாக எடுத்துக்கொண்ட ஒருவருக்கும் உதவி அளிக்கப்படும். இரண்டாம் வருஷத்தில் இந்த உதவியைப் பெற இம்மாதிரி மூவர் தேர்ந்தெடுக்கப்பெறுவார்கள். இதனுல் இரண்டாம் வருஷம் முதல் வருஷந்தோறும் பண உதவி பெறுபவர் மேலே சொன்னபடி அறுவராவர். சம்பள உதவி இரண்டு வருஷங்களுக்கு உண்டு. அதற்கு மாணுக்கர்களுடைய முதல் வருஷப் படிப்பு திருப்திகரமாக இருப்பதோடு அவர்கள் இரண்டாம் வருஷத்திலும் படிக்க வரவேண்டும்.

4. பண உதவிபெறும் எந்த மாணுக்கரேனும் ஒழுங்கீனமாக நடந்தாலும், ஒழுங்காகப் பாடங்கேட்க வராவிட்டாலும், படிப்பில் தேர்ச்சியைக் காட்டாவிட்டாலும் அவரைப் பண உதவிக்குத் தகுதியற்றவரென்று அதை நிறுத்திவிட வைஸ்சான்ஸலருக்கு அதிகாரம் உண்டு. அவர் ஸ்தானத்தில் தகுதியான வேறு ஒரு மாணுக்கருக்கு இவ்வுதவிசெய்யலாம். இவ்விஷயத்தில் வைஸ்சான்ஸலருடைய அபிப்பிராயமே முடிவானது.

5. எந்த வருஷத்திலேனும் பணவுதவி செய்யப்படாவிட்டாலும் சிலகாலம் கொடுத்த பின்பு மாணுக்கர் அதை இழந்துவிட்டாலும் செலவாகாத தொகையும் வட்டியின் மிகுதித் தொகையும் மூலதனத்தோடு சேர்க்கப்படும்.

6. எந்தக் காலத்திலேனும் முதலில் ஏற்பட்ட மூலதனம் வட்

டித் தொகைகளுடன் சேர்ந்து போதிய அளவு அதிகரித்தால் சௌகரியத்துக்குத் தக்கபடி உதவித் தொகையை அதிகப் படுத்தவோ சம்பள உதவிகளின் எண்ணிக்கையை அதிகப் படுத்தவோ சர்வகலாசாலையாருக்கு அதிகாரம் உண்டு.

7. மேலே சொன்ன பிரகாரம் தொகை செலவான பிறகு மிச்சப்படுமானல் அந்தத் தொகையைச் சைவசித்தாந்தப் படிப்புக்குப் பாடமாக உள்ள சிவஞான சித்தியாரின் பிரதிகளை வாங்கிச் சம்பள உதவி பெறும் மாணுக்கர்களுக்கு இலவசமாக விநியோகிக்கலாம்.

8. ஒவ்வொரு வருஷத்தின் முடிவிலும் வரவுசெலவு கணக்குகளையும் சம்பள உதவி பெறும் மாணுக்கர்கள் பெயர்களையும் தரும ஸ்தாபகரவர்களுக்கும் அவர்கள் வார்சுகளுக்கும் ஸிண்டிகேட்டார் அனுப்பவேண்டும்.

9. மூலதனத்தின் வரும்படியையோ சேரும் தொகைகளையோ ஸ்தாபகரவர்களுடைய நோக்கத்துக்கு மாருன வேறு எந்தக் காரியத்துக்கும் உபயோகிக்கலாகாது.

VIII. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாத ஸ்வாமிகள் செந்தமிழ்க் கல்லூரி திருப்பனந்தாள்.

சென்னை ஸர்வகாலாசாலை ரிஜிஸ்டிராருக்கு **13-6-46**-ல் எழுதிக் கொடுத்த ஒப்பந்தப் பத்திரம்.

சென்னைச் சர்வகலாசாலையார் ஏற்படுத்தியுள்ள தனித் தமிழ் (7-D) வித்துவான் பரீக்ஷைக்கு அனுப்பும்படி மாணுக்கர்களைப் பயிற்றுவதற்கு இக்கல்லூரி ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதத் தம்பிரான் சுவாமிகளவர்கள் ஞாபகார்த்தமாகத் தமிழ் மொழியின் அபிவிருத்தியைக் கருதி அமைக்கப்பட்டது.

2. இக்கல்லூரி நடைபெறும் பொருட்டுப் பொறுப்பாகக் கொடுக்கப்பெற்ற சொத்து மாயூரம் தாலூகா, நக்கம்பாடி கங்காதரபுரத்து வட்டங்களில் கீழையனூர்குடி கிராமத்தில் நன்செயும் புன்செயும் சேர்ந்து ஏகர் 183, செண்டு 42. இவை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஸ்வாமிகவர்களுடைய பேரில் பட்டாவாகி அவர்களுடைய ஏகபோக அனுபவத்தில் உள்ளன. இவற்றின் பெறுமானம் ஒன்றரை லக்ஷம் ரூபாயும் வருஷவரும்படி ரூபாய் எண்ணுயிரமும் ஆகும்.

3. மேற்படி சொத்துக்கள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஸ்வாமிகளவர்களாலும் அவர்கள் வார்சுகளாலும் அனுபவிக்கப்பெறும்.

4. இந்தச் சொத்துக்களிலிருந்து எச்செலவும்போக வரும் நிகர வரும்படி இக்கல்லூரியின் நிர்வாகத்துக்காக நியமிக்கப்பெற்றுள்ள கமிட்டியாரிடம் ஒப்பிக்கப்படும். அவர்கள் கல்லூரியை நடத்துவதற்கு இத்தொகையை உபயோகித்து வருவதோடு தொகைகளை ஜாக்கிரதையாக ஒழுங்கான இனங்களில் வட்டிக்குப் போட்டுவைக்கவும், கல்லூரி செவ்வையாக நடைபெறுவதற்கு வேண்டிய சமயங்களில் தொகையைப் பயன்படுத்தவும் பொறுப்பாளிகளாவர்.

5. சர்க்கார் கிராண்டு கல்லூரிக்கு ஓர் அதிக வரும்படி. இதையும் மேலே சொன்னவாறு பரிபாலிக்கவேண்டும்.

6. ஆசிரியர்களுடைய சம்பளம், புத்தக சாலையை நடத்தல், கல்லூரியின் கட்டிடத்தைப் பாதுகாத்தல் இவை சம்பந்தமாக அவ்வப்போது ஏற்படும் அவசியமான செலவுகளாகிய இவற்றிற்கே மேலேசொன்ன வருஷ வரும்படியை உபயோகிக்க வேண்டும்.

7. கமிட்டியார் வரவு செலவு கணக்கை ஒழுங்காக வைத்திருந்து மாதந்தோறும் அதை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஸ்வாமிகளவர்களிடம் சேர்ப்பிக்கவேண்டும்.

8. சர்க்கார் கிராண்டு உள்படக் கிடைக்கும்வருஷ வரும்படிக்கு ஏற்றபடி செலவு செய்ய வேண்டும். மிச்சம் ஏற்பட்டால் அதனை, "ரிசர்வ் பண்டு"க்கென்று காற்பங்கைத் தனியே குறிப்பிட்டுச் சர்க்கார் கடன் பத்திரங்களில் போட்டுவைக்கலாம்.

9. சொத்தின் வருஷ வரும்படி கமிட்டியாரிடம் ஒப்பிக்கப் படாவிட்டால் ஸ்தாவர சொத்திலிருந்து கிடைக்கும் நிகர வரும்படியை மட்டும் கமிட்டியார் கேட்டு வாங்கிக் கொள்ளலாம்.

10. மேலே குறிப்பிட்ட சொத்தின் வரும்படியை வேறு எந்தக் காரியத்துக்கும் உபயோகிக்கலாகாது.

11. எந்தக் காலத்திலேனும் மேலே குறிப்பிட்ட வரும்படிகளுக்கு மேற் செலவு ஏற்படுமானால் கும்பகோணந் தாலூகா மணிக்குடி கிராமத்தில் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஸ்வாமிகளவர்கள் பேரால் பட்டாவாகி அவர்கள் அனுபவத்தில் உள்ள எழுபதினாயிரம் ரூபாய் பெறுமானம் உள்ள நன்செய் ஏகர் 61 செண்டு 80, புன்செய் ஏகர் 6 செண்டு 49 இவற்றிலிருந்து கிடைக்கும் ரூபாய் 4,000 மேற்படி அதிகச் செலவுக்கு உத்தரவாதம் ஆகும்.

IX. சர்க்கார் அனுமதியின் மேல் திருப்பனந்தாளில் கால் நடை வைத்தியசாலை யொன்றை அமைத்து ஆண்டுதோறும் அதற்கு ஆகும் மொத்தச் செலவில் காற்பங்கு அல்லது ரூ. 683 எதுகுறைவோ அதைக் கொடுத்து வைத்தியசாலையை வைக்க இடவசதியும் அளித்தல்.

X. திருப்பனந்தாளிலுள்ள ஜனவைத்தியசாலையை முன்போல் நடத்தி அதற்காக மணிக்குடி கிராமத்தில் 44 ஏகரா 22 செண்டிலிருந்து கிடைக்கும் நிகர வரும்படியை அளித்து வருதல்.

XI திருப்பனந்தாளிலுள்ள மண்ணியாற்றில் பொது ஜனங்களின் உபயோகத்துக்காக ரூ. 2,900 செலவில் ஒரு ஸ்நான கட்டம் கட்டப் பெற்று வருகிறது.

XII. மணிக்கூண்டு : கும்பகோணம் மகாமகக் குளத்தின் அருகே, பொது ஜனங்களின் சௌகரியத்தைக் கருதி ரூ. 25,000 செலவில் மணிக்கூண்டு ஒன்று கட்டப்பெற்று வருகிறது.

மதுரை

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

விநாயகக் கடவுள் துதி

(ஆசிரிய விருத்தம்)

1. கார்கொண்ட கவுண்மதக் கடைவெள்ள முங்கட்
கடைக்கடைக் கனலுமெல்லை
கடவாது தடவுக் குழைச்செவி முகந்தெறி
கடைக்கா றிரட்டவெங்கோன்
போர்கொண்ட வெண்டோட் பொலங்குவடு பொதியும்வெண்
பொடிதுடி யடித்துவைத்துப்
புழுதியாட் டயராவெொ ரயிராவ ணத்துலவு
போர்க்களிற் றைத்துதிப்பாம்

(அடி, 1.) கார்கொண்ட மதம் : கார் - கருமை ; மதம் கரிய நிறம் உடையது; "கருங்கட மூன்றுகு நால்வாய்க் கரி" (திருச்சிற். 55.) கவுள் - கன்னம். மதக்கடை வெள்ளம் - மதமாகிய பிரளய காலத்து வெள்ளம். கட்கடைக் கடைக்கனலும் - கண்ணின் கடையிலேதோன்றும் பிரளயகாலத்து அக்கினியும். மதமும் கண்ணிலுள்ள சினத்தீயும் மிகுதிபற்றிக் கடைவெள்ளமாகவும் கடைக்கனலாகவும் உருவகிக்கப்பெற்றன ; கடை - யுகமுடிவு. தடவுச்செவி, குழைச்செவி ; தடவு - பெருமை ; குழை - இலை ; இங்கே தாமரை இலை ; யானைச் செவிக்குத் தாமரையிலை உவமை; அகநா. களசு : 4. கடைக்கால் - யுகாந்த காலத்துக் காற்று ; இதுவும் மிகுதி பற்றி இங்ஙனம் கூறப்பட்டது. திரட்ட - புறத்தே பரவாமல் தொகுக்க ; தடுக்க வென்றபடி. எங்கோன் - சிவபெருமான்.

(அடி, 2.) எண்டோளாகிய பொலங்குவடு ; பொலங்குவடு - மேருமலை. (பி - ம்.) 'பொலன்குவடு'. பொதியும் - மறைத்த. வெண் பொடி - திருநீற்றை. துடியடி - உடுக்கையைப்போன்ற அடியினால் ; விநாயகருக்குத் துடியடியின்றேனும் யானைக்கன்றென்னும் பொதுமைபற்றிக் கூறினர் ; "மும்மதத்தன்" (சிவஞான. காப்பு) என்றதுபோல. புழுதியாட்டு அயரா - புழுதியில் விளையாடுதலைச் செய்து ; இது யானைக்கு இயல்பு. அயிராவணத்து - அயிராவணமென்னும் யானையைப்போல ; அயிராவணம் ஈராயிரங் கொம்பையுடையதும் சிவபெருமானுக்குரியதுமாகியதொரு வெள்ளை யானை. விநாயகர் திருநீற்றை அளைந்து மேனி முழுதும் வெண்ணிறம் பெற்றமையின் அயிராவணம் உவமை கூறப்பட்டது. களிறு - விநாயகர்.

(அடி, 1-2.) கடைக்கால் கடைவெள்ளத்தையும் கடைக்கனலையும் கடவாது திரட்ட, துவைத்து அயரா உலவு களிற்றைத் துதிப்பாம் என்க.

தார்கொண்ட மதிமுடி யொருத்தன் றிருக்கண்மலர்
சாத்தக் கிளர்ந்துபொங்கித்
தவழுமிள வெயிலுமழ நிலவுமள வளவலாற்
றண்ணென்று வெச்சென்றுபொன்
வார்கொண் டணந்தமுலை மலைவல்லி கர்ப்பூர
வல்லியபி ராமவல்லி
மாணிக்க வல்லிமர கதவல்லி யபிடேக
வல்லிசொற் றமிழ்தழையவே.

க. காப்புப் பருவம்

திருமால்

(2.) மணிகொண்ட நெடுநேமி வலயஞ் சுமந்தாற்று
மாசுணச் சூட்டுமோட்டு
மால்களிறு பிடர்வைத்த வளரொளி விமானத்து
வாலுளை மடங்கலுங்கும்

(அடி, 3.) தார்கொண்ட மதி - தாராகக் கொண்ட சந்திரன்; இங்கே தாரென்றது கண்ணியை; "தாரென்ன வோங்குஞ் சடைமுடி மேற்றனித் திங்கள்வைத்த" (திருச்சிற். 56.) மதி - பிறை. தார் - பூவுமாம்; "மேகமோ டொடுதிங்கண் மலராவணிந்து" (தே.) திருக்கண்மலர் சூரியனும் சந்திரனுமாதலால் இளவெயிலும் நிலவும் ஆளவளாவின. வெச்சென்று - வெம்மையுடையதாகி; "தண்ணெனவும் வெச்செனவுந் தந்து" (சேது. கடவுள்.); "தண்ணெனவும் வெச்செனவுந் தாராதே" (வருணகுலாதித்தன் மடல்.) (பி-ம்.) 'மழவெயிலு மிளநிலவும்'.

(அடி, 4.) வார் - கச்சு. அணந்த - மேல் நோக்கிய; (பி - ம்.) 'அணிந்த' கர்ப்பூரசுந்தரரென்பது சோமசுந்தரக்கடவுளுக்குரியதொரு திருநாமம்; அதற்கேற்ப அங்கயற்கணம்மைக்குக் கர்ப்பூரவல்லி யென்னும் திருநாமம் உண்டாயிற்று; "கர்ப்பூர வல்லிதலை கவிழ்ந்து நிற்ப" (108.) அபிராம வல்லி - பேரழகையுடைய கொடிபோல்வாள். மாணிக்க வல்லி - மாணிக்கக் கொடிபோல்வாள். மரகதவல்லி - மரகதக்கொடிபோல்வாள். அபிடேக வல்லி - திருமுடியையுடையவள்; "அம்பொன்முடி முடிசூடு மபிடேக வல்லியொடும்" (105.) சொற்றமிழ் - புகழையுடைய தமிழ்நூல்; இங்கே பிள்ளைத்தமிழ். (முடிபு.) தமிழ் தழையக் களிற்றைத் துதிப்பாம்.

2. (அடி, 1.) மணி - முத்து முதலிய ரத்தினங்கள். நெடு நேமி - ஆழமாகிய கடல். நேமிசூழ்ந்த வலயம்: பூமி. சுமந்தாற்றும் - சுமக்கும்; "ஒறுத்தாற்றும்" (குறள், 579, பரிமேல்.) மாசுணச்சூட்டு மோட்டு மால் களிறு பிடர் வைத்த - ஆதிசேடனுடைய தலையினுச்சியில் பெருமையையும்

அணிகொண்ட பீடிகையி னம்பொன்முடி முடிவைத்தெம்
ஐயனொடு வீற்றிருந்த
அங்கயற் கண்ணமுதை மங்கையர்க் கரசியையெம்
அம்மனையை யினிதுகாக்க
கணிகொண்ட தண்டுழாய்க் காடலைத் தோடுதேங்
கலுழிபாய்ந் தளறுசெய்யக்
கழனிபடு நடவையிற் கமலத் தணங்கரசொர்
கையணை முகந்துசெல்லப்
பணிகொண்ட முடவுப் படப்பாய்ச் சுருட்டுப்
பணைத்தோ ளெருத்தலைப்பப்
பழமறைகண் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற
பச்சைப் பசுங்கொண்டலே. (க)

மயுக்கத்தையும் உடைய களிறுகள் தம் கழுத்திலே வைத்த. விமானம் - இந்திரவிமானம். வால் உளை மடங்கல் - வெள்ளிய பிடரிமயிரை யுடைய சிங்கம்.

(அடி, 2.) பீடிகை - ஆசனம். இந்திர விமானம் ஆதிசேடனாலும் எட்டுத் திக்கயங்களாலும் முப்பத்திரண்டு சிங்கங்களாலும் அறுபத்து நான்கு கணங்களாலும் தாங்கப்படுவதென்பர் (திருவிளை. ■ : 83.) எம் ஐயன் - சுந்தரேசுவரர். அங்கயற்கண்ணமுதை - மீனாட்சி யம்மையை. அம்மனை - தாய்.

(அடி, 3.) கணி - கண்ணி; இடைக்குறை. துழாய்க்காடு - திருமால் திருமார்பில் அணிந்த துளவத்தொகுதி. தேங் கலுழி - தேனின் வெள்ளம். காட்டை அலைத்து ஓடும் வெள்ளம். அது பாய்தலால் வழி சேறுபட்டுக் கழனி போல் ஆயிற்று. அளறு - சேறு. கழனி - வயல். நடவை - வழி. கமலத்து அணங்கரசு - திருமகள். கையணை முகந்து - கையாகிய அணையைப் பற்றிக் கொண்டு.

(அடி, 4) பணி - ஏவல். முடவுப் படப்பாய்ச் சுருட்டு - வளைவை யுடைய படங்களையுடைய பாம்பாகிய பாயின் சுருள். பணைத்தோள் - திரட்சியையுடைய தோள். எருத்து அலைப்ப - பிடரியை வருத்த. பச்சைப்பசுங் கொண்டல் - மிகப்பசிய மேகம் போன்ற திருமால்.

பைந்தமிழ்ப் பின் சென்ற கொண்டல் : திருவெஃகாவிற் கோயில்கொண்டெழுந்தருளிய பெருமாள், " கணிகண்ணன் போகின்றான் " என்ற திருமழிசை யாழ்வார் செய்யுளைக் கேட்டுத் தம்முடைய பாயலைச் சுருட்டிக் கொண்டு அவருடன் சென்றனரென்பதொரு வரலாறு ; இதன் விரிவைத் திருமழிசையாழ்வார் சரித்திரத்தால் உணரலாகும் ; " ஆடரவத், தாழ்பாய லாளரைநீ தானே தொடர்ந்தாயோ, சூழ்பாயோ டுன்னைத் தொடர்ந்தாரோ " (தமிழ்விடு. 92-3.)

(முடிபு.) கலுழி அளறுசெய்ய, அணங்கரசு செல்ல, சுருட்டு அலைப்ப, மறைகள் முறையிட, சென்ற கொண்டல் அம்மனையைக் காக்க.

சிவபெருமான்

(சந்த விருத்தம்)

3. சிகர வடவரை குனிய நிமிர்தரு
செருவி லொருபொரு வில்லெனக் கோட்டினர்
செடிகொள் பறிதலை யமண ரெதிரெதிர்
செலவொர் மதலைசொல் வையையிற் கூட்டினர்
திருவு மிமையவர் தருவு மரவொலி
செயவ லவர்கொள நல்குகைத் தீட்டினர்
சிறிய வெனதுபுன் மொழியும் வடிதமிழ்
தெரியு மவர்முது சொல்லெனச் சூட்டினர்

பகரு மிசைதிசை பரவ விருவர்கள்
பயிலு மியநெறி வெள்வளைத் தோட்டினர்
பசிய வறுகொடு வெளிய நிலவிரி
பவள வனமடர் பல்சடைக் காட்டினர்
பதும முதல்வனு மெழுத வரியதொர்
பனுவ லெழுதிய வைதிகப் பாட்டினர்
பரசு மிரசத சபையி னடமிடு
பரத பதயுக முள்ளம்வைத் தேத்துதும்

---

3. (சந்தக்குறிப்பு.) தனன தனதன தனன தனதன தனன தனதன தய்யனத் தாத்தன.

(அடி, 1.) வடவரை - மேருமலை. குனிய - வளைய. செருவில் - திரிபுராதிகளோடு செய்ய எண்ணிய போரில். கோட்டினர் - வளைத்தவர். வடவரை குனியக் கோட்டினர். செடிகொள் - நாற்றத்தைக் கொண்ட. பறிதலை அமணர் - தாமே தம் மயிரைப்பறிக்கும் தலையையுடைய சைனர்; மயிர் பறித்தல் அவர்கட்கு ஒரு விரதம். அமணரெதிர் - அமணருக்கு முன்னே. எதிர்செல - நீருக்கு எதிரே செல்ல. மதலை - திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர். சொல்: 'வாழ்க வந்தணர்' என்னும் பாசுரம். கூட்டினர் - கூடச் செய்தவர்.

திரு - திருமகள். தரு - கற்பகம். அர ஒலி - ஹரவென்னும் ஒலியை. ஹர வென்னும் திருநாமத்தைச் சொல்வோர் திருமால் பதவியையும் இந்திர பதவியையும் கொள்வரென்பது கருத்து. கைதீட்டு - கையெழுத்து; இங்கே உத்தரவுக்காயிற்று. முதுசொல் - தேவார முதலியன.

(அடி, 2.) இருவர்கள் - கம்பளாசுவதரர்கள். இயல் - இயல்பு. வெள்வளைத் தோடு - வெள்ளிய சங்கத்தோடு. அறுகு - அறுகம்புல். நில - நிலா. பவளவனம் அடர் - பவளக்காட்டைப்போல் அடர்ந்த. பனுவல்: 'கொங்குதேர் வாழ்க்கை' என்னும் செய்யுள். இறைவன் திருவாக்கில் வருவன

தகர மொழுகிய குழலு நிலவுமிழ்
தரள நகையுமெ மையனைப் பார்த்தெதிர்
சருவி யமர்பொரு விழியு மறுகிடை
தளர வளர்வதொர் செவ்விமுற் றுக்கன
தனமு மனனுற வெழுதி யெழுதரு
தமது வடிவையு மெள்ளிமட் டூற்றிய
தவள மலர்வரு மிளமி னொடுசத
தளமின் வழிபடு தையலைத் தூத்திரை

மகர மெறிகட லமுதை யமுதுகு
மழலை பழகிய கிள்ளையைப் பேட்டனம்
மடவ நடைபயில் பிடியை விரைசெறி
வரைசெய் புயமிசை வையம்வைத் தாற்றிய
வழுதி யுடையகண் மணியொ டுலவுபெண்
மணியை யணிதிகழ் செல்வியைத் தேக்கமழ்
மதுர மொழுகிய தமிழி னியல்பயில்
மதுரை மரகத வல்லியைக் காக்கவே. (உ)

வேதமாதலின் வைதிகப்பாட்டினரென்றார். இரசதசபை - வெள்ளியம்பலம்; மதுரைத்தலத்துள்ளது. பதயுகம் - இரண்டு திருவடிகள்.

(அடி, 3.) தகரம் - மயிர்ச்சாந்து. எம் ஐயனை - சிவபெருமானை. சருவி - பின்னிட்டு. மறுகு - வருந்துகின்ற. எழுதரு - பிறரால் எழுதுதற்கரிய. மட்டு - தேன். தவளமலர் வரும் இளமின் - கலைமகள். சததளமின் - திருமகள்; சத தளம் - நூறு இதழையுடைய தாமரைப் பூ.

(அடி, 4.) மகரத்தை எறிகின்ற; மகரம் - மகரமீன். மழலை - எழுத்து வடிவம் பெற்றுத் தோற்றும் இளஞ்சொல்; "மெய்பெறு வெழுத்துயிர்க்கு மழலை" (சீவக. 181; ந.) பேட்டனம் - பெண் அன்னம். மடவ நடை - இள நடை. வரைசெய் - மலையையொத்த; செய்: உவம வுருபு. வழுதி - மலயத்துவச பாண்டியன். வரைசெய்புய முதலியன வழுதிக்கு அடை. தேக்கமழ் மதுரம் - தேனிற் பரவிய இனிமை. தமிழின் இயல் பயில் மதுரை: "தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின், மகிழ்நனை மறுகின் மதுரை" (சிறுபாண்.); "கூடலி னாய்ந்தவொண் டீந்தமிழ்" (திருச்சிற்.)

(முடிபு.) குழலும் நகையும் விழியும் தனமும் எழுதி எள்ளி இளமினொடு சததளமின் வழிபடு தையலை, அமுதை, கிள்ளையை, பிடியை, பெண்மணியை, செல்வியை, மதுரை மரகதவல்லியைக் காக்க வைதிகப் பாட்டினருடைய பதயுகம் ஏத்துதும்.

சித்திவிநாயகக் கடவுள்

(வேறு)

4. கைத்தல மோடிரு கரடக் கரைத்திரை
கக்குக டாமுடை கடலிற் குளித்தெமர்
சித்தம தாமொரு தறியிற் றுவக்குறு
சித்திவி நாயக னிசையைப் பழிச்சுதும்
புத்தமு தோவரு டழையத் தழைத்ததொர்
பொற்கொடி யோவென மதுரித் துவட்டெழு
முத்தமிழ் தேர்தரு மதுரைத் தலத்துறை
முத்தன மேவுபெ ணரசைப் புரக்கவே. (௩)

முருகக்கடவுள்

(வேறு)

5. பமர மடுப்பக் கடாமெடுத் தூற்றுமொர்
பகடு நடத்திப் புலோமசைச் சூர்ப்புயல்
பருகி யிடக்கற் பகாடவிப் பாற்பொலி
பரவை யிடைப்பற் பமாதெனத் தோற்றிய

---

4. (சந்தக் குழிப்பு.) தத்தன தானன தனனத் தனத்தன.

(அடி, 1.) கைத்தலமும் இரண்டு கரடங்களுமாகிய கரையின்கண்; கரடம் - மதம்பாயும் சுவடு; இவை செவியடிகள். திரையைக் கக்கும். கடாம் - மதம். கடாமாகிய உடைகடல். எமரென்றது அடியார்களை.

(அடி, 2.) தறி - யானைகட்டும் தம்பம்; "பத்தர் சித்தத் தறியணையும் ......ஒண் களிறே" (மூத்த. திருவிரட்டை. 18.) துவக்குறு - கட்டப்படுகின்ற. சித்தி விநாயகன் : மதுரைத் தலவிநாயகர்.

(அடி, 3.) மதுரித்து - இனித்து. உவட்டெழு - பெருக்கெழுகின்ற.

(அடி, 4.) முத்தனம் - மூன்று நகில்கள். தேவி தடாதகைப்பிராட்டியாராக அவதரித்தகாலத்து மூன்றுநகில்கள் இருந்தமையின் இங்ஙனம் கூறினர்.

(அடி, 3 - 4.) அமுதோ கொடியோவென உறை பெண்ணரசு.

(முடிபு.) பெண்ணரசைப் புரக்க, சித்தி விநாயகனது இசையைப் பழிச்சுதும்.

5. (சந்தக்குழிப்பு.) தனன தனத்தத் தனதனத் தாத்தன.

(அடி, 1.) பமரம்=ப்ரமரம் - வண்டு (31,176.) வண்டு யானையின் மதத்தை உண்ணும். பகடு - ஐராவதமென்னும் யானை. புலோமசை யென்னும் தெய்வமகளாகிய மேகம்; சூர் - தெய்வப்பெண். (பி - ம்.) 'புலோமிசை." புயல் : எழுவாய். பருகியிட - இன்பம் நுகர. பரவை - கடல்; என்றது இந்திரனை; இந்திரன் கரிய நிறத்தினன். பற்பமாது - திருமகள். (பி - ம்.) 'பத்மமாது.' இந்திரனிடத்தே தெய்வயானை தோற்றினளென்பது உபசாரம். நடத்திப் பருகியிடப் பொலி பரவையென்க.

குமரி யிருக்கக் கலாமயிற் கூத்தயர்
குளிர்புன மொய்த்திட் டசாரலிற் போய்ச்சிறு
குறவர் மகட்குச் சலாமிடற் கேக்கறு
குமர னேமுத்துக் குமாரனேப் போற்றுதும்
இமிழ்திரை முற்றத் துமேருமத் தார்த்துமுள்
எயிறுகு நச்சுப் பணேடவித் தாப்பிசைத்
திறுக விறுக்கித் துழாய்முடித் தீர்த்தனெ
டெவரு மதித்துப் பராபவத் தீச்சுட
அமுதுசெய் வித்திட் டபோனகத் தாற்சுடர்
அடரு மிருட்டுக் கிரீவமட் டாக்கிய
அழகிய சொக்கற் குமால்செயத் தோட்டிகல்
அமர்செய் கயற்கட் குமாரியைக் காக்கவே. (௬)

(அடி, 2.) குமரி - தெய்வயானை. கலாமயில்-கலாபத்தையுடைய மயில் (18,86); கலாபமென்றது கலாமென நின்றது. மயிற்கூத்து: சந்தநோக்கி லகரம் றகரமாயிற்று. புனம் - தினேக்கொல்லே. குறவர் மகள் - வள்ளி நாச்சியார். சலாமிடல்: "சலாமிட" (திருப்புகழ்.) ஏக்கறு - ஆசையால் தாழ்கின்ற. முத்துக்குமாரன்: இவர் இத்தலத்தில் அம்பிகை திருக்கோயிலில் உட்பிராகாரத்தில் வாயுமூலேயிற் கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பவர்.

(அடி, 3.) இமிழ் - முழங்கும். முற்றம் - பரப்பு. மேருமத்து: மந்தரத்தை மத்தாகக் கூறுவதே வழக்கமாயினும் அது மேருவின் வட சிகரமாதல் பற்றி மேருவாகவே கூறுதலும் மரபு. ஆர்த்து - கட்டி. முள் எயிறு உகு நச்சு - முள்ளைப்போலக் கூரிய பல்லிலிருந்து உகுகின்ற நஞ்சையுடைய. பணேடவித்தாப்பு - படக்கூட்டங்களை யுடைய கயிறு; என்றது ஆதிசேடனை. வாசுகியைத் தாம்பாகக் கொண்டாரென்பதே பெரும்பான்மை வழக்காயினும், ஆதிசேடனைக் கூறுதலும் உண்டென்பது, "திகழொளி முந்நீர் கடைந்தக்கால் வெற்புத், திகழ்பெழ வாங்கித்தஞ் சீர்ச்சிரத் தேற்றி, மகரம்றிகடல் வைத்து நிறுத்துப், புகழ்சால் சிறப்பி னிருதிறத் தோர்க்கும், அமுது கடைய விருவயி னுணகி, மிகாஅ விருவட மாழியான் வாங்க, உகாஅ வலியி னெருதோழங் காலம், அறாஅ தணிந்தாருந் தாம்" (பரி. திரட்டு. ௧: 64-71); "பொன்னெடு மலையைப் பின்னிரு வடங்கொடு, புணரிடைக் கடைந்நாட் புணர்த்த பன்னக, வரசன்" (பழம்பாட்டு; தக்க. 645, மேற்.) என்பவற்றுனும் தெரியவருகின்றது. துழாய்முடித்தீர்த்தன் - திருமால். மதித்து - கடைந்து. பராபவத் தீ - அவமானமாகிய தீ; அவமானமென்றது ஆலகாலத்திற்கு அஞ்சியதைக் குறித்தது.

(அடி, 4.) அமுது செய்வித்திட்ட போனகம்-உண்ணும்படியாகச் செய்த ஆலகாலமாகிய உணவு. சுடர் அடரும் - சந்திர சூரியர்களையும் வருத்தும்.

பிரமதேவர்

(ஆசிரிய விருத்தம்)

6. மேகப் பசுங்குழவி வாய்மடுத் துண்ணவும்
விட்புலம் விருந்தயரவும்
வெள்ளமுதம் வீசுங் கருந்திரைப் பைந்துகில்
விரித்துடுத் துத்திவிரியும்
நாகத்து மீச்சுடிகை நடுவட் கிடந்தமட
நங்கையைப் பெற்றுமற்றந்
நாகணைத் துஞ்சுதன் றந்தைக்கு வந்துதவு
நளினக் குழந்தைகாக்க
பாகத்து மரகதக் குன்றென்றோர் தமனியக்
குன்றொடு கிளைத்துநின்ற
பவளத் தடங்குன் றுளக்கண்ண தென்றப்
பரஞ்சுடர் முடிக்குமுடிமூன்
ருகத் தமைத்துப்பி னொருமுடிதன் முடிவைத்
தணங்கரசு வீற்றிருக்கும்
அபிடேக வல்லியை யளிக்குல முழக்குகுழல்
அங்கயற் கண்ணமுதையே. (ரு)

கிரீவம் - கழுத்து; (பி - ம்.) 'கிரீபம்.' அழகிய சொக்கர்: சோமசுந்தரக் கடவுள் திருநாமம் (108, 157); சொக்கர் - பேரழகுடையவர். தோட்டிகல் - காதணியோடு பொருகின்ற.

6. (அடி, 1.) விட்புலம் - வானோர்; ஆகுபெயர். வெள்ளமுதம் - வெள்ளிய நீர், வெள்ளிய அமிர்தம். திரையாகிய துகில். உத்தி-படப்பொறி.

(அடி, 2.) நாகத்து மீ - ஆதிசேடனாகிய நாகத்துக்கு மேல். சுடிகை நடுவண் - உச்சிக்கு நடுவில். நங்கை - பூமிதேவி. தன் தந்தையென்றது திருமாலை. நளினக் குழந்தை - தாமரைமலர் மேலுள்ள பிரமதேவர்.

(அடி, 3.) பாகத்து - பக்கத்தில். மரகதக்குன்று; திருமால். தமனியக் குன்று: பிரமதேவர். பவளத்தடங்குன்று: சிவபெருமான். சிவபிரானுடைய வலப்புறத்துப் பிரமனும் இடப்புறத்துத் திருமாலும் தோன்றுவராதலின் இங்ஙனம் குறித்தனர்; ஏகபாதருத்திர மூர்த்தியைக் குறித்ததெனலுமாம். முடிமூன்றென்றது மூன்று நகில்களை.

(அடி, 4.) ஆகம் - மார்பு. அணங்கரசாக வீற்றிருக்கும். வீற்றிருத்தல் - கவலையின்றியிருத்தல். அளிக்குலம் - வண்டின்தொகுதி.

தேவேந்திரன்

(வேறு)

7. சுழியுங் கருங்கட் குண்டகழி
சுவற்றுஞ் சுடர்வேல் கிரிதிரித்த
தோன்றற் களித்துச் சுறவுயர்த்த
சொக்கப் பெருமாள் செக்கர்முடி

பொழியுந் தரங்கக் கங்கைவிரைப்
புனல்கால் பாய்ச்சத் தழைந்துவிரி
புவனந் தனிபூத் தருள்பழுத்த
பொன்னங் கொடியைப் பூரக்கவழிந்

திழியுந் துணர்க்கற் பகத்தினற
விதழ்த்தேன் குடித்துக் குமட்டியெதிர்
எடுக்குஞ் சிறைவண் டுவட்டுறவுண்
டிரைக்கக் கரைக்கு மதக்கலுழிக்

குழியுஞ் சிறுக ணேற்றுருமுக்
குரல்வெண் புயலுங் கரும்புயலும்

---

7. (அடி, 1) (பி - ம்.) 'சுழியுண்' கருங்கட் குண்டகழி - கரிய இடத்தையும் ஆழத்தையுமுடைய கடலாகிய அகழியை. சுவற்றும் - வற்றச் செய்யும். சுடர் வேலை. கிரி - மேருமலை. தோன்றல் - உக்கிரகுமார பாண்டியன். (பி - ம்.) 'வேற்கிரி திரித்த' 'சொக்கப்பெருமான்.' செக்கர்முடி யென்றார் சடை செந்நிறமுடைமையின்.

(அடி, 3.) (பி - ம்.) 'விரைபுனல்' கால் பாய்ச்ச - காலிலே பாய்ச்ச; வாய்க்காலின்வழியே பாய்ச்சவென்பது வேறொரு பொருள். பொன்னங் கொடி - அங்கயற்கண்ணம்மை. சிவபெருமான் ஊடற்காலத்தில் அம்பிகையை வணங்கும் செயலை நினைந்து இச்செய்தி கூறப்பட்டது. கொடி யென்றதற்கேற்பப் புனல்பாய்ச்சலும், பூத்தலும், பழுத்தலும் சொல்லப் பட்டன; "முழுமணி மிடற்றன் கனன்மழு வீரன் முக்கணுண் டகைநின தெழில்கூர் - முகம்புலர் கலைக்கண் டுடல்வளைந் தடியின் முனைப்பிறைக் கோடுகொண் டுழுது, விழுமணி யரவ நுழைசடா டவியின் விண்ணதித் தண்புனல் விடுப்ப - விரைவொடு குளிர்ந்து முகமலர் தலினுன் மென்கொடி யெனநினை யுணர்ந்தேன்" (**பெரிய நாயகியம்மை விருத்தம், 1**) என்பது இங்கே அறிதற்குரியது.

(அடி, 3.) துணர்-பூங்கொத்து. நறவு - வாசனை. எதிரெடுக்கும் - கக்கும். உவட்டுற-தெவிட்ட. இரைக்க - ஒலிப்ப. கரைக்கும் - கரைந்தோடச்செய்யும்.

(அடி, 4.) வெண்புயல் - ஐராவதம். கரும்புயல் - கரிய மேகம். குலைய - குலையும்படி. குலிசம் - வச்சிராயுதம். புத்தேள் - இங்கே இந்திரன். இந்திரன்

குன்றங் குலைய வுகைத்தேறும்
குலிசத் தடக்கைப் புத்தேளே. (சு)

திருமகள்

(வேறு)

8\. வெஞ்சுட்டு நெட்டுடல் விரிக்கும் படப்பாயல்
மீமிசைத் துஞ்சுநீல
மேகத்தி னாகத்து விடுசுடர்ப் படலைமணி
மென்பர லுறுத்தநொந்து
பஞ்சூட்டு சீறடி பதைத்துமதன் வெங்கதிர்
படுமிள வெயிற்குடைந்தும்
பைந்துழாய்க் காடுவிரி தண்ணிழ லொதுங்குமோர்
பசுங்கொடியை யஞ்சலிப்பாம்
மஞ்சூட் டகட்டுநெடு வான்முகடு துருவுமொரு
மறையோதி மஞ்சலிக்க
மறிதிரைச் சிறைவிரியு மாயிர முகக்கடவுண்
மந்தா கினிப்பெயர்த்த

உகைத்தேறுவதனால் தமக்கு இன்னும் என்ன துன்பம் நேருமோவெனக் குன்றம் குலைந்தன.

8\. (அடி, 1.) படப்பாயல் - ஆதிசேடனாகிய படுக்கை. நீலமேகம் - திருமால். ஆகத்து - மார்பில். சுடர்ப்படலை - ஒளியின் தொகுதி; படலை - தொகுதி (26.) மணியாகிய மெல்லிய பரல்; மணி - கௌஸ்துபம்; பரல் - பருக்கைக்கல்.

(அடி, 2.) பஞ்சு - செம்பஞ்சுக் குழம்பு. அதன் - அந்த மணியின். (பி - ம்). 'கதிர்ப்படும்' பைந்துழாய்க் காடு - திருமால் திருமார்பிலுள்ள துளவமாலையின் மிகுதி; "தண்டுழாய்க் காடு" (3) என்றார் முன்னும். பசுங்கொடி - திருமகள்.

(அடி, 3.) மஞ்சு ஊட்டு அகடு நெடு வான்முகடு - மேகங்களைச் செறித்த உள்ளிடத்தையுடைய நீண்ட வானத்தின் உச்சியை. துருவும் - ஆராயும். ஒரு மறை யோதிமமென்றது அன்னப்பறவையின் உருவெடுத்த பிரமதேவனை. மறிதிரை - கீழ் மேலாகின்ற அலைகளேயுடைய. திரையாகிய சிறை. ஆயிர முகத்தையுடைய ஓதிமம், கடவுண் மந்தாகினிப்பெயர்த்த ஓதிமமென்க; என்றது கங்கையை. கங்கை ஆயிரமுகமுடையதென்பது, "நிலைதளரா வாயிரமா முகத்தி னோடும், பாய்ந்தொருத்தி படர்சடைமேற் படரக் கண்டும்" (தே. திருநா.); "கங்கை, துறைகொ ளாயிர முகமுஞ் சுழல" (கல்.) என்பவற்றாலும் உணரப்படும்.

செஞ்சூட்டு வெள்ளோ திமங்குடி யிருக்கும்வளர்
செஞ்சடைக் கருமிடற்றுத்
தேவுக்கு முன்னின்ற தெய்வத்தை மும்முலைத்
திருவைப் புரக்கவென்றே. (எ)

கலைமகள்

9. வெள்ளித் தகட்டுநெட் டேடவிழ்த் தின்னிசை
விரும்புஞ் சுரும்பர்பாட
விளைநறவு கக்கும் பொலம்பொகுட் டலர்கமல
வீட்டுக் கொழித்தெடுத்துத்
தெள்ளித் தெளிக்குந் தமிழ்க்கடலி னன்பினைந்
திணையென வெடுத்தவிறைநூற்
றெள்ளமுது கூட்டுணுமோர் வெள்ளோதி மத்தினிரு
சிறடி முடிப்பம்வளர்பைங்
கிள்ளைக்கு மழலைப் பசுங்குதலை யொழுகுதீங்
கிளவியுங் களிமயிற்குக்
கிளரிளஞ் சாயலு நவ்விக்கு நோக்கும்விரி
கிஞ்சுகச் சூட்டரசனப்
பிள்ளைக்கு மடநடையு முடனுடு மகளிர்க்கோர்
பேதைமையு முதவிமுதிராப்
பிள்ளைமையின் வள்ளன்மை கொள்ளுமொரு பாண்டிப்
பிராட்டியைக் காக்கவென்றே. (அ)

பெயர்த்த - பெயரையுடைய. செஞ்சூட்டு - சிவந்த உச்சிக்கொண்டை; ஓதிமமென்றதற்கேற்ப இது கூறப்பட்டது. தடாதகைப்பிராட்டியார் திக்கு விசயம் செய்தபொழுது கைலைக்கும் சென்று சிவபெருமான் முன் நின்றதையெண்ணி, 'தேவுக்கு முன்னின்ற தெய்வம்' என்றார்.

9. (அடி, 1.) வெள்ளித்தகட்டைப்போன்ற நெடிய இதழ்களை; என்றது வெண்டாமரையின் இதழ்களை. அவிழ்த்து-மலர்த்தி. கக்கும்-சொரியும்.

(அடி, 2.) தெள்ளித் தெளிக்கும் : 703. அன்பினைந்திணையென எடுத்த இறை நூல் - அன்பினைந்திணையென்னுந் தொடக்கத்தையுடைய இறையனாரகப்பொருளென்னும் இலக்கணம். நூலாகிய அமுது; "அன்பினைந் திணையென் றறுபது சூத்திரம், கடலமு தெடுத்துக் கரையில்வைத் ததுபோற், பரப்பின் றமிழ்ச்சுவை திரட்டிமற் றவர்க்குத், தெரிதரக் கொடுத்த தென்றமிழ்க் கடவுள்" (கல்.) கமலவீட்டின்கண் அமுதத்தைக் கூட்டுணுமென்க. வெள்ளோதிமம் - கலைமகள். கலைமகளுக்கு வெள்ளையன்னம் உவமை: 325, 707.

(அடி, 3.) கிள்ளைக்குக் கிளவி கற்பித்தல் : 664. நவ்வி - மான். கிஞ்சுகச் சூட்டு - முருக்கம் பூவைப்போன்ற உச்சிக்கொண்டையையுடைய.

(அடி, 4.) பிள்ளைமை - இளமைப்பருவம்.

துர்க்கை

10. வடிபட்ட முக்குடுமி வடிவே றிரித்திட்டு
வளைகருங் கோட்டுமோட்டு
மயிடங் கவிழ்த்துக் கடாங்கவிழ்க் குஞ்சிறுகண்
மால்யானை வீங்கவாங்கும்

துடிபட்ட கொடிநுண் ணுசுப்பிற் குடைந்தெனச்
சுடுகடைக் கனலிதூண்டும்
சுழல்கண் முடங்குளை மடங்கலை யுகைத்தேறு
சூரரிப் பிணவுகாக்க

பிடிபட்ட மடநடைக் கேக்கற்ற கூந்தற்
பிடிக்குழாஞ் சுற்றவொற்றைப்
பிறைமருப் புடையதொர் களிற்றினைப் பெற்றெந்தை
பிட்டுண்டு கட்டுண்டுநின்

றடிபட்ட திருமேனி குழையக் குழைத்திட்ட
அணிமணிக் கிம்புரிக்கோ
டாகத்த தாகக் கடம்பா டவிக்குள்விளை
யாடுமொர் மடப்பிடியையே. (௧௦)

---

10. (அடி, 1.) வடிபட்ட - வடிக்கப்பட்ட; "வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே" (புறநா.) முக்குடுமி வடிவேல் - முத்தலைச்சூலம்; வடி - கூர்மை. மோட்டு மயிடம் - பெரிய உடம்பையுடைய மகிஷாசுரனை. (பி - ம்.) 'மகிடம்' யானையென்றது நகில்களை. வாங்கும் - சுருங்கும்.

(அடி, 2.) துடிபட்ட - உடுக்கையைப்போன்ற. (பி - ம்.) 'நுசுப்புக்கு' உடைந்தென - உடைந்ததென. கடைக்கனலி - யுகாந்தகாலத்துத் தீ. முடங்குளை - வளைந்த பிடரி மயிர். மடங்கல் - சிங்கம். வென்றாரைத் தோற்றார் சுமத்தல் மரபு. சூர் அரிப்பிணவு - அச்சத்தைத் தரும் பெண் சிங்கம்; என்றது துர்க்கையை.

(அடி, 3.) பிடிபட்ட மடநடை - பிடியைப்போன்ற மெல்லிய நடை; பிடியானது அழிந்தொழிதற்கேதுவாகிய நடையெனலும் ஆம். ஏக்கற்ற - யாம் இது பெற்றிலேமேயென்ற வேட்கையால் அலந்த. கூந்தற் பிடிக்குழாம் - கூந்தலையுடைய பெண்யானைகளின் கூட்டம்; "கூந்தலம் பிடியும்" (55.) ஒற்றைப் பிறை மருப்புடைய களிறு - விநாயகர். எந்தை - சோமசுந்தரக்கடவுள்.

(அடி, 4.) மணிக்கிம்புரிக்கோடென்றது நகில்களை. மடப்பிடியாக உருவகம் செய்தமையின் இங்ஙனம் கூறினர். கடம்பாடவி - மதுரை. அடவியிற்பிடி விளையாடுவது இயற்கை.

மடப்பிடியை அரிப்பிணவு காக்கவென்க.

சத்த மாதர்கள்

(சந்த விருத்தம்)

11. கடகளி றுதவுக பாய்மிசைப் போர்த்தவள்
கவிகுவி துறுகலின் வாரியைத் தூர்த்தவள்
கடல்வயி றெரியவொள் வேலிணைப் பார்த்தவள்
கடிகமழ் தருமலர் தார்முடிச் சேர்த்தவள்

இடியுக வடலரி யேறுகைத் தார்த்தவள்
எழுதரு முழுமறை நூலினிற் கூர்த்தவள்
எயிறுகொ டுழுதெழு பாரிணைப் பேர்த்தவள்
எனுமிவ ரெழுவர்க டாண்முடிச் சூட்டுதும்

குடமொடு குடவியர் பாணிகைக் கோத்திடு
குரவையு மலதொர்ப ணமுடிச் சூட்டருள்
குதிகொள நடமிடு மாடலுக் கேற்பவொர்
குழலிசை பழகளி பாடிடக் கேட்டுடை

---

11. (சந்தக்குறிப்பு.) தனதன தனதன தானனத் தாத்தன.

(அடி, 1) கபாய் - சட்டை; "கம்பக் கரடக் களிற்றின் கபாயணிந்த" (506.) போர்த்தவள்: மாகேசுவரி. கவி குவி துறுகலின் - குரங்குகள் குவித்த உருண்டைக்கற்களால். வாரியை - சமுத்திரத்தை. தூர்த்தவள்: நாராயணி. வயிறு - நடுவிடம். பார்த்தவள்: கௌமாரி. தரு மலர் - கற்பகத்தின் மலரை. சேர்த்தவள்: இந்திராணி.

(அடி, 2.) அரியேறு - ஆண் சிங்கம். ஆர்த்தவள்: காளி. எழுதரு - எழுதுதற்கரிய. கூர்த்தவள் - மிக்க ஊக்கத்தையுடையவள்; அபிராமி. பேர்த்தவள்: வாராகி. தலைவர்கள் செயல்களை அவர்கள் சத்திகளுக்கும் கூறுதல் மரபாதல்பற்றி எழுமகளிர் செயல்கள் இங்கே இங்ஙனம் கூறப் பட்டன.

(அடி, 3.) குடமொடு - குடமென்னும் கூத்தோடு; குடக்கூத்தென்பது திருமாலுக்குரியது; விநோதக் கூத்தின் வகையுள் ஒன்று; அதற்குரிய உறுப்புக்கள் ஐந்து; அக்கூத்தாவது தலையிலே அடுக்குக்குடம் இருக்க, இரண்டு தோள்களிலும் குடம் இருக்க, இரண்டு கைகளிலும் குடங்களை ஏந்தி ஆகாயத்திலே எறிந்து ஆடுவதென்பர். குடவியர் - கோவியர். பாணி - கைகளை. குரவை - குரவைக்கூத்து. ஓர் பணமுடிச் சூட்டென்றது காளிய னது முடியை. நடமிடுதல் - நர்த்தனம் செய்தல். குழல் - வேய்ங்குழல். அளி - வண்டு; " குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட " (மணி. ௪ ; 3.)

மடலவிழ் துளப நறுவெடுத் தூற்றிட
மழகளி றெனவெழு கார்முகச் சூற்புயல்
வரவரு மிளையகு மாரியைக் கோட்டெயில்
மதுரையில் வளர்கவு மாரியைக் காக்கவே. (௧௦)

முப்பத்து மூவர்

(வேறு)

12. அமரில் வெந்நிடும வுதியர் பின்னிடுமொர்
அபயர் முன்னிடுவ னத்தொக்க வோடவும்
அளவு மெம்முடைய திறையி தென்னமுடி
அரச ரெண்ணிலரோர் முற்றத்து வாடவும்
அகில மன்னரவர் திசையின் மன்னரிவர்
அமர ரென்னுமுரை திக்கெட்டு மூடவும்
அமுத வெண்மதியின் மரபை யுன்னியுனி
அலரி யண்ணன்முழு வெப்பத்து மூழ்கவும்

(அடி, 3-4.) பாடிடக் கேட்டு உடைகின்ற மடலவிழ்கின்ற துளபம்; வண்டு இசைபாடப் போது மலருமென்பது இங்கே அறிதற்குரியது. கார்முகம் - வில். சூற்புயல் - திருமால். வர வரும் - அவர் முன்வரத் தான் பின்னே தோற்றிய; அம்பிகையைத் திருமாலுக்குத் தங்கையென்றல் மரபு (22-3.) கோட்டு எயில் - சிகரங்களையுடைய மதில்.

12. (சந்தக் குறிப்பு.) தனன தன்னதன தனன தன்னதன தனன தன்னதன தத்தத்த தானன.

(அடி, 1.) வெந் இடும்-புறங் காட்டும். அ உதியர் - அந்தச் சேரர்; அ: உலகறி சுட்டு. அபயர் - சோழர். தோற்றவர் காட்டில் ஓடி ஒளித்தல் மரபு; வனம் - காடு. அளவும் - அளக்கும். திறை - கப்பம். அரசர் முற்றத்து வாடுதல்: "பல்வேறு வகைபிற் பணிந்த மன்னர்..............தொய்யர் வெறுக்கையொடு துவன்றுபு குழீஇச், செவ்வி பார்க்குஞ் செழுநகர் முற்றத்து" (பெரும்பாண். 428-35); "வேந்தர் வைகு முற்றத்தான்" (கம்ப. குகப். 65.) அகில மன்னர் - பூமியில் உள்ள பல்வேறுதேசத்து அரசர். திசையின் மன்னர் - திக்குப் பாலகர். அலரியண்ணல் - சூரியன். வெப்பமென்றது அழுக்காற்றைக் குறித்தது. தன்னினும் ஒளியால் தாழ்வு பட்ட மதியின்மரபு அம்பிகையின் அவதாரத்தால் இத்தகைய சிறப்படைதல் பற்றிச் சூரியன் மனம் புழுங்கினான்; பாண்டியரது மரபு மதிமரபென்பது நினைத்தற்குரியது.

குமரி பொன்னிவயை பொருநை நன்னதிகள்
குதிகொள் விண்ணதியின் மிக்குக்கு லாவவும்
குவடு தென்மலையி னிகர தின்மைசுரர்
குடிகொள் பொன்மலைது தித்துப்ப ராவவும்
குமரர் முன்னிருவ ரமர ரன்னையிவள்
குமரி யின்னமுமெ னச்சித்தர் பாடவும்
குரவை விம்மவர மகளிர் மண்ணிலெழில்
குலவு கன்னியர்கள் கைக்கொக்க வாடவும்

கமலன் முன்னிவிடு மரச வன்னமெழு
கடலி லன்னமுட னட்புக்கை கூடவும்
கரிய செம்மலொடு மிளைய செம்மல்விடு
கருடன் மஞ்ஞையொரு கட்சிக்கு ளூடவும்
கடவி விண்ணரசு நடவும் வெம்முனைய
களிறு கைம்மலைசெல் கொப்பத்து வீழவும்
கனக மன்னுதட னளினி துன்னியிரு
கமல மின்னுமொரு பற்பத்துண் மேவவும்

(அடி, 2) குமரி - குமரியாறு. பொன்னி - காவிரி. வயை - வையை நதி; சந்தம்பற்றி வையை வயையென்றுபிற்று. (பி - ம்.) 'வைகை' பொருநை - தாமிரபர்ணி. விண்ணதியின்மிக்கு - ஆகாய கங்கையைக் காட்டிலும் சிறப்படைந்து. இவளது ஆட்சியில் இருத்தலின் குமரிமுதலியன சிறப்படைந்தன. தென்மலையின் நிகரதாகிய குவடு உலகில் இன்மையைப் பொன்மலை துதித்துப் பராவவும்; தென்மலை - பொதியின்மலை (சிலப். அ: 19.) குவடு - மலை. பொன்மலை - மேரு. குமரர் இருவர் - விநாயகரும் முருகக்கடவுளும். குரவை - குரவைப்பாட்டு. விம்ம - மிகுதியாக. ஆட - குரவைக்கூத்தாட.

(அடி, 3.) கமலன் - பிரமதேவன். எழு கடல் - மதுரையிலுள்ளதொரு சிவதீர்த்தம். கரிய செம்மல் - திருமால். இளைய செம்மல் - முருகக் கடவுள். விடு கருடன், விடுமஞ்ஞை யென்க. கட்சி - பறவைக் கூடு. (பி-ம்.) 'மஞ்ஞையொடொர்' கடவி - செலுத்தி. விண்ணரசு - இந்திரன். முனை - போர்க்களம். கொப்பம் - யானையைப் பிடிப்பதற்காக வெட்டப்பட்ட பெருங்குழி. கனக மன்னுதட நளினி - பொற்றாமரைத்தீர்த்தம். இருகமலமின்னும் - திருமகளும் கலைமகளும். பற்பம் - பத்மம்; " பற்பநாபனுயர்வறவுயரும் பெருந்திறலோன் " (திருவாய்மொழி, உ. 7 : 11.) (பி - ம்.) 'பத்மத்துண்'

இமய மென்னமனு முறைகொ டென்னருமெம்
　　இறையை நன்மருகெ னப்பெற்று வாழவும்
எவர்கொல் பண்ணவர்க ளெவர்கொன் மண்ணவர்கள்
　　எதுகொல் பொன்னுலகெ னத்தட்டு மாறவும்
எழில்செய் தென்மதுரை தழைய மும்முலையொ
　　டெழுமெ னம்மனைவ னப்புக்கொர் காவலர்
இருவ ரெண்மர்பதி னொருவர் பன்னிருவர்
　　எனும விண்ணவர்கண் முப்பத்து மூவரே. (கக)

உ. செங்கீரைப் பருவம்

(ஆசிரிய விருத்தம்)

13. நீராட்டி யாட்டுபொற் சுண்ணந் திமிர்ந்தள்ளி
　　நெற்றியிற் றொட்டிட்டவெண்
ணீற்றினொடு புண்டரக் கீற்றுக்கு மேற்றிடவொர்
　　நித்திலச் சுட்டிசாத்தித்
தாராட்டு சூழியக் கொண்டையு முடித்துத்
　　தலைப்பணி திருத்திமுத்தின்
தண்ணொளி ததும்புங் குதம்பையொடு காதுக்கொர்
　　தமனியக் கொப்புமிட்டுப்

(அடி, 4.) இமயமென்ன - இமயவரசனைப்போல. தென்னர் - பாண்டியர். இறையை - சிவபெருமானை. மருகு - மருகன். பண்ணவர்கள்-தேவர்கள். தட்டுமாற - தடுமாற ; விரித்தல். இருவர் - அசுவினி தேவர். எண்மர் - அட்டவசுக்கள். பதினொருவர் - ஏகாதச ருத்திரர். பன்னிருவர் - துவாத சாதித்தர்.

(முடிபு.) அம்மனை வனப்புக்குக் காவலர் முப்பத்துமூவர் என்க.

13. (அடி, 1.) ஆட்டு பொற் சுண்ணம் - அரைத்த பொற் சுண்ணம். திமிர்ந்து - பூசி. தொட்டு இட்ட வெண்ணீறு - வெண்ணீற்றுத் திலகம். புண்டரக்கீற்று - வெண்ணீற்றுப் புண்டரம். ஏற்றிட - திலகத்துக்கும் புண்டரத்திற்கும் பொருந்தும்படி வெண்மையாக.

(அடி, 2.) தார் ஆட்டு - மாலையை அசைக்கும். சூழியக் கொண்டை - உச்சிக்கொண்டை (19.) தலைப்பணி - தலையாபரணம் ; சீதேவி முதலியன (முருகு. 23.) குதம்பை - காதணி. தமனியக் கொப்பு - பொற்கொப்பு ; இது மேற்காதில் அணியப்படுவது.

பாராட்டு பாண்டிப் பெருந்தேவி திருமுலைப்
பாலமுத மூட்டியொருநின்
பாஞறு குமுதங் கனிந்தூறு தேறறன்
பட்டாடை மடிநனைப்பச்
சீராட்டி வைத்துமுத் தாடும் பசுங்கிள்ளை
செங்கீரை யாடியருளே
தென்னற்கு மம்பொன்மலை மன்னற்கு மொருசெல்வி
செங்கீரை யாடியருளே. (௧)

14. உண்ணிலா வுவகைப் பெருங்களி துளும்பநின்
றுன்றிருத் தாதைநின்னை
ஒருமுறை கரம்பொத்தி வருகென வழைத்திடுமுன்
ஓடித் தவழ்ந்துசென்று
தண்ணுலா மழலைப் பசுங்குதலை யமுதினிய
தாய்வயிறு குளிரவூட்டித்
தடமார்ப நிறைகுங் குமச்சே றளைந்துபொற்
ருடோய் தடக்கைபற்றிப்

(அடி, 3.) பெருந்தேவி: அரசன் தேவியருள் உடன்முடி கவித்தல் முதலிய சிறப்புக்குரியவள் (பெருங். உ. 4 : 21-4.) (பி - ம்.) 'தடமுலை' குமுதமென்றது திருவாயை, தேறல் என்றது வாய்நீரை (37, 402); "செவ் வாய்க் குதலை மெய்பெரு மழலை, சிந்துபு சின்னீ ரைம்படை நனைப்ப" (மணி. ௩: 137-8.)

(அடி, 4.) முத்தாடுதல் - முத்தமிடுதல். கிள்ளை : விளி. பொன்மலை மன்னன் - இமயமன்னன். செல்வி - மகள். செங்கீரையாடியருள் - செவ் விய சொற்களைச் சொல்லியருள்; செங்கீரையாடுதல் ஒரு நிர்த்தவிசேட மென்பர் **பெரியவாச்சான் பிள்ளை.**

(முடிபு.) பெருந்தேவி நீராட்டித் திமிர்ந்து சாத்தி முடித்துத் திருத்தி இட்டு ஊட்டி நனைப்பச் சீராட்டி முத்தாடும் கிள்ளை, ஆடியருள்.

14. (அடி, 1.) துளும்ப - ததும்ப. தாதை - மலயத்துவச பாண் டியன். கரம் பொத்தி - கைகொட்டி.

(அடி, 2.) தண் - தண்மை. குதலையாகிய அமுது; குதலை - எழுத்து வடிவம் பெருத சொல். தாய் - காஞ்சனமாலை. தாள் தோய் தடக்கை - முழந்தாளைத் தோய்ந்த பெரிய கை.

பண்ணுலாம் வடிதமிழ்ப் பைந்தாமம் விரியும்
பணைத்தோ ளெருத்தமேறிப்
பாசொளிய மரகதத் திருமேனி பச்சைப்
பசுங்கதிர் ததும்பமணிவாய்த்
தெண்ணிலா விரியநின் றாடும் பசுந்தோகை!
செங்கீரை யாடியருளே
தென்னற்கு மம்பொன்மலை மன்னற்கு மொருசெல்வி
செங்கீரை யாடியருளே. (உ)

15. சுற்றுநெடு நேமிச் சுவர்க்கிசைய வெட்டுச்
சுவர்க்கா னிறுத்திமேருத்
தூணொன்று நடுநட்டு வெளிமுகடு மூடியிரு
சுடர்விளக் கிட்டுமுற்ற
எற்றுபுன லிற்கழுவு புவனப் பழங்கலம்
எடுத்தடுக் கிப்புதுக்கூழ்
இன்னமுத முஞ்சமைத் தன்னைநீ பன்முறை
இழைத்திட வழித்தழித்தோர்
முற்றவெளி யிற்றிரியு மத்தப் பெரும்பித்தன்
முன்னின்று தொந்தமிடவும்
முனியாது வைகலு மெடுத்தடுக் கிப்பெரிய
மூதண்ட கூடமூடும்

(அடி, 3.) தமிழ்ப்பைந்தாமம் - தமிழ்ப்பாமாலை. தோள் எருத்தம் - தோளைச் சார்ந்த பிடரி. மரகதத் திருமேனி அம்பிகையினது. மணி - பவளம்.

(அடி, 4.) தோகை : விளி.

15. (அடி, 1.) நேமிச்சுவர் - சக்கரவாளகிரியாகிய, சுவர். எட்டுச் சுவர்க்கால் - குலாசலங்கள் எட்டு; "வெற்பெட்டும்" (34.) சுவரைச் சார்த்தியமைத்த கால்களின்மேல் மேற்பரப்பின் பாரம் தங்கும்படி அமைத்தலும் இடையிலே ஒரு தூண் நடுதலும் ஒருவகைச் சிற்பம். வெளிமுகடு - ஆகாயத்தின் உச்சி. இரு சுடர் - சந்திரசூரியர். முற்ற - முழுவதும்.

(அடி - 2.) புனல் - கடல். புனலிற் கழுவுதலென்றது பிரளய கால வெள்ளத்தில் உலகு அமிழ்தலைக் குறித்தது. புதுக் கூழ் - புதுக்கிய ஊழ், புதிய கூழ்; சிலேடை (71.) இழைத்திட - செய்ய.

(அடி, 4.) வெளியில் முற்ற - வெளியில் முழுதும். தொந்தமிடல் - கூத்தாடல் (30.) வைகலும் - நாள்தோறும். முதிய அண்டகடாகத்தால் மூடும்.

சிற்றில்விளை யாடுமொரு பச்சிளம் பெண்பிள்ளை
செங்கீரை யாடியருளே
தென்னற்கு மம்பொன்மலை மன்னற்கு மொருசெல்வி
செங்கீரை யாடியருளே. (ரு)

16. மங்குல்படு கந்தரச் சுந்தரக் கடவுட்கு
மழகதிர்க் கற்றைசுற்றும்
வாணயன மூன்றுங் குளிர்ந்தமுத கலைதலை
மடுப்பக் கடைக்கணோக்கும்

பொங்குமதர் நோக்கிற் பிறந்தவா னந்தப்
புதுப்புணரி நீத்தமையன்
புந்தித் தடத்தினை நிரப்பவழி யடியர்பாற்
போகசா கரமடுப்ப

அங்கணொடு ஞாலத்து வித்தின்றி வித்திய
வனைத்துயிர் களுந்தளிர்ப்ப
அருண்மடை திறந்தகடை வெள்ளம் பெருக்கெடுத்
தலையெறிந் துகளவுகளும்

செங்கயல் கிடக்குங் கருங்கட் பசுந்தோகை
செங்கீரை யாடியருளே
தென்னற்கு மம்பொன்மலை மன்னற்கு மொருசெல்வி
செங்கீரை யாடியருளே. (சா)

(அடி, 4.) சிற்றிலென்றது அண்டங்களை. பச்சிளமை - மிக்க இளமை. பெண்பிள்ளை : விளி ; வழக்கு.

அம்பிகை உலகத்தை அடிக்கடியாக்குதலும் அவற்றைச் சிவபெருமான் அழித்தலுமாகிய செய்கைகளை, சிறுமியர் சிற்றிலிழைத்தலும் சிறுவர் அதனையழித்தலுமாகிய செயல்களாக உருவகித்துக் கூறினர்.

16. (அடி, 1.) மங்குல் படு - கருமேகத்தையொத்த. கந்தரம் - கழுத்து. கந்தரச் சுந்தரக் கடவுள் : 107. மழகதிர்க் கற்றை : 2.

(அடி, 1-2.) கடைக்கண்ணால் நோக்கும் நோக்கில், பொங்கும் நோக்கி லென்க ; நோக்கு - பார்வை. நிரப்புதலால் அடியார்கள்பாற் போகசாகரம் மடுப்ப ; அடியர் - இங்கே ஆன்மாக்கள். சிவபெருமான் போகியாக நிற்ற லின் உயிர்களும் போகத்தை அடையுமென்பது கருத்து.

(அடி, 3.) (பி - ம்.) 'மடைதிறந்து,' அருள்மடை........................ ....கயல் : "கருணையின் முழுகிய கயறிரி பசிய கரும்பே" (22)

(அடி, 4.) (பி - ம்.) 'செங்கயல் கடக்கும்' தோகை : விளி.

17. பண்ணறு வரிமிடற் றறுகான் மடுப்பப்
பசுந்தேற லாறலைக்கும்
பதுமபீ டிகையுமுது பழமறை விரிந்தொளி
பழுத்தசெந் நாவுமிமையாக்
கண்ணறு மரகதக் கற்றைக் கலாமஞ்ஞை
கணமுகி றதும்பவேங்கும்
கார்வரையும் வெள்ளெனவொர் கன்னிமா டத்துவளர்
கர்ப்பூர வல்லிகதிர்கால்
விண்ணறு மதிமுயற் கலைகிழிந் திழியமுத
வெள்ளருவி பாயவெடிபோய்
மீளுந் தகட்டகட் டிளவாளை மோதமுகை
விண்டொழுகு முண்டகப்பூந்
தெண்ணறு வருவிபாய் மதுரைமர கதவல்லி
செங்கீரை யாடியருளே
தென்னற்கு மம்பொன்மலை மன்னற்கு மொருசெல்வி
செங்கீரை யாடியருளே. (ரு)

(வேறு)

18. முகமதி யூடெழு நகைநில வாட
முடிச்சூ ழியமாட
முரிபுரு வக்கொடி நுதலிடு சுட்டி
முரிப்பொ டசைந்தாட

---

17. (அடி, 1.) பண் - இசை. வரி-ஒருவகைப் பாட்டு. அறுகால்-வண்டு. பதும பீடிகை - திருமகள் வாழும் செந்தாமரைமலராகிய ஆசனம். முது பழமறை-மிகப் பழைய வேதம். செந்நா-கலைமகள் வீற்றிருக்கும் பிரமனது நா.

(அடி, 1-2.) இமையாக் கண்ணென்றது மயிலின் தோகையிலுள்ள கண்களை. கலாமஞ்ஞை : 6. ததும்ப - ஒலிக்க. கார்வரை - இங்கே விந்தமலை. வெள்ளென - நாணத்தால் வெண்ணிறமடைய. அங்கயற்கணம்மை கன்னி மாடத்தில் வளர்வது நோக்கி, 'இம்மாடம்பெற்ற பேறு யாம் பெற்றிலேமே' எனத் திருமகளைத் தாங்கும் தாமரையும், கலைமகளைத் தாங்கும் பிரமன் நாவும், துர்க்கையைத் தாங்கும் விந்தமலையும் நாணமடைந்தனவென்பது கருத்து.

(அடி, 3.) முயலையுடைய மதிக்கலை யென்று மாறிப் பொருள் கொள்க. பாய - பாயும்படி. வெடிபோய்-துள்ளி. தகடு அகடு - வெள்ளித்தகடுபோன்ற வயிறு. வாளை பாய்வதனால் மதியின் கலை கிழிய அமுதம் பாய்ந்தது.

(அடி. 4.) நறுவருவி - தேனருவி.

18. (அடி, 1.) முடிச் சூழியம் - உச்சிக் கொண்டை. முரி - வளைந்த. புருவமாகிய கொடி. முரிப்பு - வளைவு.

இகல்விழி மகரமு மம்மக ரம்பொரும்
இருமக ரமுமாட
இடுநூ புரவடி பெயரக் கிண்கி
ணெனுங்கிண் கிணியாடத்
துகிலொடு சோர்தரு கொடிநுண் மருங்குல்
துவண்டு துவண்டாடத்
தொந்தி சரிந்திட வுந்தி கரந்தொளிர்
சூலுடை யாலடைமற்
றகில சராசர நிகிலமொ டாடிட
ஆடுக செங்கீரை
அவனி தழைந்திட மவுலி புனைந்தவள்
ஆடுக செங்கீரை. (சு)

19. தசைந்திடு கொங்கை யிரண்டல வெனவுரை
தருதிரு மார்பாடத்
தாய்வரு கென்பவர் பேதைமை கண்டு
ததும்புபு னகையாடப்
பசைந்திடு ஞால மலர்ந்தமை வெளிறியொர்
பச்சுடல் சொல்லவுமோர்
பைங்கொடி யொல்கவு மொல்கி நுடங்கிய
பண்டி சரிந்தாட

(அடி, 2.) விழியாகிய மகரம்; விழிக்கு மகரமீனைக் கூறியது மீனென்னும் பொதுமைபற்றி; "மகரக் கருங்கட் செங்கனிவாய் மடமான் கன்று" (61.) இருமகரம் - இரண்டு மகர வடிவமான குண்டலங்கள். நூபுரம் - காலணி.

(அடி, 3.) கொடியைப் போன்ற நுண்ணிய மருங்குல்; மருங்குல் - இடை. உந்தியினிடத்தே யாவற்றையும் கரந்து ஒளிரும் சூலையுடைய ஆலிலை போன்ற திருவயிறு; ஆலடை - ஆலிலை. (பி - ம்.) 'சூலுடையாலிலை'

(அடி, 4.) அகிலம் - அழிவில்லாதவை. நிகிலம் - உலகம் யாவும்.

19. (அடி, 1.) இரண்டலவென்றது மூன்றென்னும் குறிப்பை யுடையது. குழந்தையைத் தாயே வருக வென்பவர், அச்சொல்லுக்குச் செம்பொருள் கொள்ளாமல் மகளென்று பொருள் கொள்வர்; அம்பிகையை அழைப்பவரும் அங்ஙனமே கொண்டனர்; தாயென்னும் சொல்லுக்குச் செம்பொருளே கொள்ளல் இங்கே ஏற்புடைத்தாயினும் உலக வழக்குப்படியே மகளென்று கொள்வாராதலின் அதனைப் பேதைமை யென்றார். ததும்பு - மேல் எழுந்த. (பி - ம்.) 'நன்னகை'

(அடி, 2.) பசைந்திடு ஞாலம் - தேவியின் அன்பைப் பெற்ற உலகம். அலர்ந்தமை - வெளிப்பட்டமை. இயல்பான பச்சுடலை மகவீன்றரது பச்சுடலாகக் கூறினர். பைங்கொடி யென்றது திருவிடையை. பண்டி - வயிறு.

இசைந்திடு தேவை நினைந்தன வென்ன
இரங்கிடு மேகலையோ
டிடுகிடை யாட வியற்கை மணம்பொதி
இதழ்வழி தேறலினோ
டசைந்தொசி கின்ற பசுங்கொடி யெனவினி
தாடுக செங்கீரை
அவனி தழைந்திட மவுலி புனைந்தவள்
ஆடுக செங்கீரை. (எ)

20. பரிமள மூறிய வுச்சியின் முச்சி
பதிந்தா டச்சுடர்பொற்
பட்டமு டன்சிறு சுட்டியும் வெயிலொடு
பனிவெண் ணிலவாடத்
திருநுதன் மீதெழு குறுவெயர் வாடத்
தெய்வம ணங்கமழும்
திருமே னியின்முழு மரகத வொளியெண்
டிக்கும்வி ரிந்தாடக்
கருவிளை நாறு குதம்பை ததும்பிய
காது தழைந்தாடக்
கதிர்வெண் முறுவ லரும்ப மலர்ந்திடு
கமலத் திருமுகநின்
அருள்விழி யொடும்வளர் கருணை பொழிந்திட
ஆடுக செங்கீரை
அவனி தழைந்திட மவுலி புனைந்தவள்
ஆடுக செங்கீரை. (அ)

(அடி, 3.) தேவை - சிவபெருமானை. இரங்கிடும் - ஒலிக்கும்; வருந்துமென்பது வேறு பொருள். இடுகு இடை - ஒடுங்கிய இடை. இதழ் வழி தேறல் : 14.

20. (அடி, 1.) முச்சி - கொண்டை. பட்டத்தால் வெயிலும் சுட்டியால் நிலவும் ஆட.

(அடி, 3.) கருவிளையென்றது கண்களை. குதம்பை - காதணி. திருவிழிகள் காதளவும் சென்றமையின் கருவிளை நாறு குதம்பை யென்று கூறினர். தழைந்து - தாழ்ந்து.

(சந்த விருத்தம்)

21. குருமணி வெயில்விட மரகத நிழல்விரி
குன்றே நின் றாதும்
குழலிசை பழகிய மழைமுகி லெழுவெழு
கொம்பே வெம்பாசம்

மருவிய பிணிகெட மலைதரு மருமைம
ருந்தே சந்தானம்
வளர்புவ னமுமுணர் வருமரு மறையின்வ
ரம்பே செம்போதிற்

கருணையின் முழுகிய கயறிரி பசியக
ரும்பே வெண்சோதிக்
கலைமதி மரபிலொ ரிளமதி யெனவளர்
கன்றே யென்றோதும்

திருமகள் கலைமக டலைமகண் மலைமகள்
செங்கோ செங்கீரை
தெளிதமிழ் மதுரையில் வளருமொ ரிளமயில்
செங்கோ செங்கீரை. (க)

---

21. (சந்தக் குறிப்பு.) தனதன தனதன தனதன தனதன தந்தா தந்தான.

(அடி, 1.) குரு - நிறம். மணிகள் - அம்பிகையணிந்த ஆபரணங்களிலுள்ளவை. முகில் : திருமால். எழ எழு கொம்பு - முன்னே வரப் பின்வந்த பூங்கொம்பு போல்வாள் ; அவர் தங்கை யென்றபடி.

(அடி, 2.) மலைமகளாதலாலும் பிறவிப்பிணி கெடச் செய்தலாலும், மலைதரு மருந்தே யென்றார் ; மருந்து - பச்சிலை ; மலைமருந்து சிறந்தது. சந்தானம் வளர் புவனம் - சந்தான மென்னும் தரு வளர்கின்ற தேவலோகம் ; சந்தானம் - ஐந்து தருக்களில் ஒன்று. செம்போதென்றது திருமுகத்தை.

(அடி, 3.) கயல் என்றது கண்களை. கன்றே - மான்கன்று போல்வாய்.

(அடி, 4.) திருமகளுக்கும் கலைமகளுக்கும் தலைமகள் ; விளி. செங்கீரை யென்றது செங்கோவென மருவியது ; அதன்பின் ஆடியருளே யென்பது எஞ்சி நின்றது.

(வேறு)

22. சங்குகி டந்தத டங்கைநெ டும்புயல்
தங்காய் பங்காயோர்
தமனிய மலைபடர் கொடியென வடிவுத
மைந்தா யெந்தாயென்

றங்கணெ டும்புவ னங்கடொ மூந்தொறும்
அஞ்சே லென்றோதும்
அபயமும் வரதமு முபயமு முடையவ
ணங்கே வெங்கோபக்

கங்குன்ம தங்கய மங்குல டங்கவி
டுங்கா மன்சேமக்
கயல்குடி புகுமொரு துகிலிகை யெனநின்
கண்போ லுஞ்சாயற்

செங்கய றங்குபொ லன்கொடி மின்கொடி
செங்கோ செங்கீரை
தெளிதமிழ் மதுரையில் வளருமொ ரிளமயில்
செங்கோ செங்கீரை. (௧௦)

---

22. (சந்தக் குறிப்பு.) தந்தன தந்தன தந்தன தந்தன தந்தா தந்தான தனதன தனதன தனதன தனதன தந்தா தந்தான.

(அடி, 1.) புயல் - திருமால். தங்காய் - தங்கையே. தமனியமலை - சிவ பெருமான். எந்தாய் - எம் தாயே (554.)

(அடி, 2.) அம் கண் - அழகிய இடத்தையுடைய. அபயமும் வரதமு மாகிய இரண்டும்; உபயம் - இரண்டு.

(அடி, 3.) மதகய மென்றது மதங்கய மெனச் சந்தம் நோக்கி விரிந்து நின்றது. மதங்கயமாகிய மங்குல்; மங்குல் - இருள்; மன்மதனுக்கு இருள் யானை. துகிலிகை - துவசம். (பி - ம்) 'துகிலிகையனநின்'

(அடி, 3-4.) பொலன் கொடியையுடைய மின் கொடி. காமனுடைய கயற்கொடி போன்ற கயற்கொடியை யுடையா யென்றபடி. எனத் தங்கு என இயைக்க. அங்கயற்கண்ணம்மையாதலின் 'கண்போலுஞ் சாயற் செங்கயல்' என்றார்.

௩. தாலப் பருவம்

(ஆசிரிய விருத்தம்)

23. தென்னந் தமிழி னுடன்பிறந்த
சிறுகா லரும்பத் தீயரும்பும்
தேமா நிழற்கண் டுஞ்சுமிளஞ்
செங்கட் கயவாய்ப் புனிற்றெருமை

இன்னம் பசும்புற் கறிக்கல்லா
இளங்கன் றுள்ளி மடித்தலநின்
றிழிபா லருவி யுவட்டெறிய
எறியுந் திரைத்தீம் புனற்பொய்கைப்

பொன்னங் கமலப் பசுந்தோட்டுப்
பொற்று தாடிக் கற்றைநிலாப்
பெரீழியுந் தரங்கம் பொறையுயிர்த்த
பொன்போற் றெருடுதோ ல்டிப்பொலன்சூட்

டன்னம் பொலியுந் தமிழ்மதுரைக்
கரசே தாலோ தாலேலோ
அருள்சூற் கொண்ட வங்கயற்கண்
அமுதே தாலோ தாலேலோ. (௧)

---

23. (அடி, 1.) தென்னந் தமிழ் - தென்றமிழ் ; அம் : சாரியை. சிறுகால் - தென்றல். தென்றற்காற்று வீசுங்காலத்து மாமரம் சிவந்த தளிர் விடுவதை, 'சிறுகாலரும்பத் தீயரும்பும்' என்று குறித்தார் ; "திருந்துந் தளிர் காட்டித் தென்றல்வரத் தேமா" (நன்னெறி, 19.) மாந்தளிருக்குத் தீ உவமை (ஐங்குறு. ௩௬௪.) கயவாய் - ஆழமான வாய் : (பி - ம்.) 'கருவாய்' புனிறு - ஈன்ற அணிமை.

(அடி, 2.) உவட்டெறிய - பெருக்கெடுப்ப.

(அடி, 3.) பசுந்தோட்டுப் பொற்றுது - இளைய இதழிலுள்ள பொன் போன்ற பூந்தாது. தரங்கம் பொறையுயிர்த்த பொன் - கடலாற் பெறப் பட்ட திருமகள். சூட்டு - உச்சிக் கொண்டை.

(அடி, 4.) 'தாலோ தாலேலோ' என்றது குழந்தையைத் தாலாட்டுவார் கூறும் ஒருவகை வாய்பாடு. தம் நாவை ஆட்டி இதனைப் பாடுவதனுல் இதற்குத் தாலாட்டென்னும் பெயர் வந்தது : தால் - நா ; தாலாட்டுப் பருவமென்றது தாலப் பருவமென நின்றது.

எருமை தன் கன்றை நினைந்து சொரிந்த பாலால் பொய்கை பாற்கடல் போலத் தோன்றத் தாமரைத் தாதினிடையே ஆடிப் பொன்னிறம் பெற்று அம்மலரிலே இருந்த அன்னம் திருமகளைப் போலத் தோற்றியது.

24. வீக்குஞ் சிறுபைந் துகிற்றோகை
விரியுங் கலாப மருங்கலைப்ப
விளையாட் டயரு மணற்சிற்றில்
வீட்டுக் குடிபுக் கோட்டியிருள்

சீக்குஞ் சுடர்தூங் கழன்மணியின்
செந்தீ மடுத்த சூட்டடுப்பிற்
செழுந்தாட் பவளத் துவரடுக்கித்
தெளிக்கு நறுந்தண் டேறலுலை

வாக்குங் குடக்கூன் குழிசியிலம்
மதுவார்த் தரித்த நித்திலத்தின்
வல்சி புகட்டி வடித்தெடுத்து
வயன்மா மகளிர் சிழாஞ்சிறுசோ

றாக்கும் பெருந்தண் பணைமதுரைக்
கரசே தாலோ தாலேலோ
அருள்சூற் கொண்ட வங்கயற்கண்
அமுதே தாலோ தாலேலோ. (உ)

25. ஓடும் படலை முகிற்படலம்
உவர்நீத் துவரி மேய்ந்துகரு
வூறுங் கமஞ்சூல் வயிறுடைய
உகைத்துக் கடவுட் கற்பகப்பூங்

---

24. (அடி, 1.) வீக்கும் - கட்டிய. துகில் தோகை - ஆடையின் தலைப்பு. கலாபம் - ஒருவகை மேகலை. மருங்கு - இடை. சிற்றிலாகிய வீட்டில்.

(அடி, 2.) அழலுகின்ற மாணிக்கமாகிய தீயை மடுத்த ; மடுத்த - வைத்த. சூட்டடுப்பு - ஒருவகை யடுப்பு. பவளமாகிய துவர் ; துவர் - விறகு. தேறல் உலை - தேனாகிய உலைநீர்.

(அடி, 3.) குடக்கூன் குழிசி - குடம்போன்ற வளைந்த சங்காகிய பானை. வல்சி - அரிசி. வயல் மா மகளிர் - மருதநிலத்தில் வாழும் சிறுமியர்.

(அடி, 4.) தண்பணை - மருதநிலம். அருள் சூற்கொண்ட கண் என்க.

மருத நிலத்திலுள்ள சிறு பெண்கள் சிற்றிலில் மாணிக்கமே தீயாகவும் பவளமே விறகாகவும் தேனே உலைநீராகவும் சங்கே பானையாகவும் முத்தே அரிசியாகவும் கொண்டு சிறுசோறாக்கி விளையாடும் செயல் இதிற் கூறப்பட்டது.

25. வானையின் செயல் இதிற் கூறப்படும்.

(அடி, 1.) படலை முகிற்படலம் - தொகுதியாகிய மேகப்பரப்பு. கமஞ்சூல் - நிறைந்த கருப்பம்.

காடுந் தரங்கக் கங்கைநெடுங்
கழியு நீந்தி யமுதிறைக்கும்
கலைவெண் மதியின் முயறடவிக்
கதிர்மீன் கற்றை திரைத்துதறி

மூடுங் ககன வெளிக்கூட
முகடு திறந்து புறங்கோத்த
முந்நீ ருழக்கிச் சினவாளை
மூரிச் சுறவி னேடும்விளை

யாடும் பழனத் தமிழ்மதுரைக்
கரசே தாலோ தாலேலோ
அருள்சூற் கொண்ட வங்கயற்கண்
அமுதே தாலோ தாலேலோ. (ந)

26. ஊறுங் கரடக் கடத்துமுகந்
தூற்று மதமா மடவியர்நின்
றுதறுங் குழற்பூந் துகளடங்க
ஓட விடுத்த குங்குமச்செஞ்

சேறு வழுக்கி யோட்டறுக்கும்
திருமா மறுகி லரசர்பெருந்
திண்டே ரொதுங்கக் கொடுஞ்சிநெடுஞ்
சிறுதே ருருட்டுஞ் செங்கண்மழ

(அடி, 2.) கங்கையாகிய கழியென்க; கழி - இங்கே ஆறு. திரைத்து - சுருட்டி.

(அடி, 3.) ககன வெளிக்கூட முகடு - வானவெளியாகிய அண்டகூடத்தின் உச்சி. புறங்கோத்த முந்நீர் - அண்டத்திற்கு அப்புறத்திலுள்ள கடல். (பி - ம்.) 'மூரிச் சுறவோ டுகண்டுவிளை'

(முடிபு.) வாளை உவரி மேய்ந்து உகைத்து நீந்தித் தடவித் திரைத்து உதறித் திறந்து உழக்கி விளையாடும் பழனமென்க.

26. (அடி, 1.) கரடம் - மதம்பாய் சுவடு. கடம் - குடம்; கும்பமெனவும் வழங்கும். மதமா - யானை.

(அடி, 1-2.) மதமாவானது சேற்றில் வழுக்கி ஓடுதலைத்தவிர்க்கும் மறுகு; வழுக்கி - வழுக்குதலால்; எச்சத்திரிபு.

(அடி, 2.) சிறு தேர் - அளவிற் சிறிய தேர்.

வேறு பொருவே லிளைஞர்கட
விவுளி கடைவாய் குதட்டவழிந்
திழியும் விலாழி குமிழியெறிந்
திரைத்துத் திரைத்து நுரைத்தொருபே
ராறு மடுக்குந் தமிழ்மதுரைக்
கரசே தாலோ தாலேலோ
அருள்சூற் கொண்ட வங்கயற்கண்
அமுதே தாலோ தாலேலோ. (அ)

27. வார்க்குன் றிரண்டுசுமந்தொசியும்
மலர்க்கொம் பனையார் குழற்றுஞ்சும்
மழலைச் சுரும்பர் புகுந்துழக்க
மலர்த்தா துகுத்து வானதியைத்
தூர்க்கும் பொதும்பின் முயற்கலைமேல்
துள்ளி யுகளு முசுக்கலையின்
துழனிக் கொதுங்கிக் கழனியினெற்
சூட்டுப் படப்பை மேய்ந்துகதிர்ப்
போர்க்குன் றேறுங் கருமுகிலை
வெள்வாய் மள்ளர் பிணையலிடும்
பொருகோட் டெருமைப் போத்தினொடும்
பூட்டி யடிக்க விடிக்குரல்வீட்

(அடி, 3.) கடவு இவுளி - செலுத்துகின்ற குதிரை. (பி - ம்.) 'இளைஞர் கடமிவுளி' விலாழி - குதிரையின் வாய்நுரை. இரைத்து - ஒலித்து. திரைத்து - அலையெறிந்து.

27. (அடி, 1.) வார்க்குன்று இரண்டு - இரண்டு நகில்கள்; வார் - கச்சு. குழலில் துஞ்சும். சுரும்பர் - வண்டுகள். அவை உழக்குதலால் பொதும்பு மலர்த்தாதை உகுத்தது.

(அடி, 2.) பொதும்பு - சோலை. முயற்கலை - முயலையுடைய சந்திரன். முசுக்கலை - ஆண் குரங்கு. துழனி - ஆரவாரம். பொதும்பிலுள்ள முசுக்கலை. படப்பை - வைக்கோற் போர்; இது தென்பாண்டி நாட்டு வழக்கு.

(அடி, 2-3.) கதிர்ப் போர்க் குன்று-நெற்கதிர்களை அடுக்கிய போராகிய குன்று. (பி - ம்.) 'மேய்ந்த கதிர்' முசுக்கலையின் ஒலிக்கு ஒதுங்கிக் கரு முகில் கதிர்ப்போர்க்குன்றில் ஏறியது.

டார்க்கும் பழனத் தமிழ்மதுரைக்
கரசே தாலோ தாலேலோ
அருள்சூற் கொண்ட வங்கயற்கண்
அமுதே தாலோ தாலேலோ. (ரு)

(வேறு)

28. காரிற் பொழிமழை நீரிற் சுழியெறி
கழியிற் சிறுகுழியிற்
கரையிற் கரைபொரு திரையிற் றலைபிரி
கண்டலில் வண்டலினெற்

போரிற் களநிறை சேரிற் குளநிறை
புனலிற் பொருகயலிற்
பொழிலிற் சுருள்புரி குழலிற் கணிகையர்
குழையிற் பொருகயல்போய்த்

தேரிற் குமரர்கண் மார்பிற் பொலிதரு
திருவிற் பொருவில்வரிச்
சிலையிற் றிரள்புய மலையிற் புலவி
திருத்திட வூழ்த்தமுடித்

(அடி, 3.) வெள்வாய் மள்ளர் - கள்ளையருந்தினமையால் வெள்ளியனவாகிய வாய்களையுடைய மள்ளர்; அவர்கள் கள்ளுண்ட மயக்கத்தால் அறியாமல் முகிலை எருமையோடு பிணையவிட்டனர். (பி - ம்.) 'பேழ்வாய் மள்ளர்', 'பிணையல் விடும்' பிணையவிடுதல் - பிணைத்தல். எருமைப் போத்து - ஆணெருமை. இடியாகிய குரல்.

28. கணிகையருடைய கண்கள் கயல்மீனைப்போலப் பல இடங்களிற் பாயுமென்பது இதிற் கூறப்படும்.

(அடி, 1.) காரிலிருந்து பொழியும் மழை. சுழிகளை எறிகின்ற கழி. தலைபிரி - உச்சியின்கண் இதழ்பிரிந்து மலர்ந்த. (பி - ம்.) 'தலைவிரி' கண்டல் - தாழை. வண்டல் - மகளிர் விளையாடும் இடம்; வண்டலுள்ள இடமுமாம்.

(அடி, 2.) சேர் - நெல்லைச் சேமித்துவைக்கும் கூடு. பொழிலைப்போலச் சுருள் புரிந்த குழல். (பி - ம்.) 'சுருள்விரி' குழலையுடைய கணிகையர். குழையிற் பொருகயல் - குழையோடு பொருகின்ற கயல்போன்ற கண்கள்.

(அடி, 3.) தேரிலுள்ள குமரர்கள். பொலிதரு திருவையும் பொருவில்லாத சிலையையும் உடைய திரண்ட புயமாகிய மலை. புலவி திருத்திட - ஊடலை நீக்கும்பொருட்டு; என்றது அவர் கணிகையர்காலிற் பணிதலைச் சுட்டியது. ஊழ்த்த - அவிழ்ந்த.

தாரிற் பொருதிடு மதுரைத் துரைமகள்
தாலோ தாலேலோ
சங்கம் வளர்ந்திட நின்ற பொலன்கொடி
தாலோ தாலேலோ. (அ)

29. சேனைத் தலைவர்க டிசையிற் றலைவர்கள்
செருவிற் றலைவர்களாய்ச்
சிலையிற் றிடமுடி தேரிற் கொடியொடு
சிந்தச் சீந்தியிடும்

சோனைக் கணைமழை சொரியப் பெருகிய
குருதிக் கடலிடையே
தொந்த மிடும்பல் கவந்த நிவந்தொரு
சுழியிற் பவுரிகொள

ஆனைத் திரளொடு குதிரைத் திரளையும்
அப்பெயர் மீனைமுகந்
தம்மனை யாடு கடற்றிரை போல
அடற்றிரை மோதவெழும்

(அடி, 4.) துரைமகள் - அரசி.

கணிகையரது (கண்களாகிய) கயல்கள், மழைநீரிலும் கழியிலும் குழியிலும் கரையிலும் திரையிலும் கண்டலிலும் வண்டலிலும் போரிலும் சேரிலும் புனலிலும் பொருகின்ற கயலைப்போல, போய் மார்பிலும் புயமலையிலும் தாரிலும் பொருதிடுமென்க.

29. தடாதகாதேவியின் திக்குவிசயத்தில் நிகழ்ந்த செய்தி கூறப்படும்.

(அடி, 1.) சேனைத்தலைவர்கள் - அம்பிகையின் சேனைத்தலைவர்கள்; எழுவாய். திசையில் தலைவர்கள் செருவில் தலைவர்களாகி வந்து தம் சிலை இற்றிடவும் முடி சிந்தவும், சிந்தியிடும் - கோபிக்கும்; இது கணைக்கு அடை; "சிந்தாநின்ற திமுக வேலான்" (சீவக. 1055.) (பி - ம்.) 'தலைவர்களாற்'; 'சிலையிற்றட'; 'சிந்திபிடும்'

(அடி, 1-2.) சேனைத்தலைவர்கள், பகைப்படையில் தலைவர்களாகி வந்த திசைத்தலைவர்களுடைய சிலை இற்றிடவும் முடி சிந்தவும் கணைமழையைச் சொரிய, அதனால் பெருகிய குருதிக்கடல். சோனை - விடாமழை. மழை சொரியக் கடல் பெருகியதென்பது ஒரு நயம். தொந்தமிடல் - கூத்தாடல்; பிணைந்தாடலுமாம். பவுரி - சுழன்ருடல்.

(அடி, 3.) அப் பெயர் மீன் - யானைமீன், குதிரைமீன்; யானைமீன்; தக்க. 384, உரை. அடற்றிரையென்றது குருதிக்கடலின் அலையை.

தானைக் கடலொடு பொலியுந் திருமகள்
தாலோ தாலேலோ
சங்கம் வளர்ந்திட நின்ற பொலன்கொடி
தாலோ தாலேலோ. (எ)

30. அமரர்க் கதிபதி வெளிறக் களிறெதிர்
பிளிறக் குளிறியிடா
அண்ட மிசைப்பொலி கொண்ட லுகைத்தடும்
அமரிற் றமரிநெடும்

கமரிற் கவிழ்தரு திசையிற் றலைவர்கள்
மலையிற் சிறகரியும்
கடவுட் படையொடு பிறகிட் டுடைவது
கண்டு முகங்குளிராப்

பமரத் தருமலர் மிலையப் படுமுடி
தொலையக் கொடுமுடிதாழ்
பைம்பொற் றடவரை திரியக் கடல்வயி
றெரியப் படைதிரியாச்

(அடி, 4.) தானைக் கடல் - சேனா சமுத்திரம்.

30. இதில் உக்கிரகுமாரபாண்டியருடைய வெற்றிச் செயல்கள் கூறப்படும்.

(அடி, 1.) வெளிறு அக்களிறு - ஐராவதம். குளிறியிடா - முழங்கி. (பி - ம்.) 'உகைத்திடும்'

(அடி, 2.) கமர் - வெடிப்பு. திசையிற் றலைவர்கள் - திக்குப் பாலகர்கள்; இவர்கள் இந்திரன் படைத்தலைவராய் வந்தவர்கள். மலையிற் சிறகரியும் கடவுட் படை - இந்திரனது சேனை; கடவுள் படை யென்றது ஓசைநோக்கி விகாரமாகி நின்றது. முகம் குளிரா-முகம் குளிர்ந்து. (பி - ம்.) 'குளிரப்'

(அடி, 3.) பமரம் - வண்டு. தருமலர் - கற்பகத்தின் மலர். மிலையப் படும் முடி - மிலையும் முடி; என்றது இந்திரனது முடியை; மிலைதல்-சூடுதல். (பி - ம்.) 'மலையப்' பைம்பொற்றடவரை - மேருமலை. படை திரியா - ஆயுதத்தைச் சுழற்றி எறிந்து. இந்திரன் முடிமேல் வளையையும், மேருமலையின்மேற் செண்டையும், கடலில் வேலையும் விட்டனர்.

சமரிற் பொருதிரு மகனைத் தருமயில்
தாலோ தாலேலோ
சங்கம் வளர்ந்திட நின்ற பொலன்கொடி
தாலோ தாலேலோ. (அ)

(சந்த விருத்தம்)

31. முதுசொற் புலவர்தெ ளித்தப சுந்தமிழ்
நூல்பாழ் போகாமே
முளரிக் கடவுள்ப டைத்தவ சுந்தரை
கீழ்மே லாகாமே

அதிரப் பொருதுக விப்பகை ஞன்றமிழ்
நீர்நா டாளாமே
அகிலத் துயிர்கள யர்த்தும றங்கடை
நீணீர் தோயாமே

சிதைவுற் றரசிய னற்றரு மங்குடி
போய்மாய் வாகாமே
செழியர்க் கபயரு மொப்பென நின்றுண
ராதா ரோதாமே

மதுரைப் பதிதழை யத்தழை யுங்கொடி
தாலோ தாலேலோ
மலயத் துவசன்வ ளர்த்தப சுங்கிளி
தாலோ தாலேலோ. (கூ)

(அடி, 4.) திருமகன் - உக்கிர குமாரபாண்டியர்.

(முடிபு.) அமரர்க் கதிபதி உகைத்து அடும் அமரில், தலைவர்கள் பிற கிட்டுடைவது கண்டு குளிர்ந்து, முடிதொலையவும் வரை திரியவும் வயிறு எரியவும் படை திரித்துப் பொரு திருமகன் என்க.

31. (சந்தக் குழிப்பு.) தனனத் தனதன தத்தன தந்தன தானா தானா.

(அடி, 1.) முதுசொற் புலவர் - தமிழ்ச்சங்கப் புலவர்கள். முளரிக் கடவுள் - பிரமதேவன். வசுந்தரை - பூமி.

(அடி, 2.) (பி - ம்.) 'பொருத.' தமிழ் நீர் நாடு - பாண்டிநாடு. அயர்த்தும் - மறந்தும். அறங்கடை நீள் நீர் - பாவச் செயலாகிய பெருங்கடலில்.

(அடி, 3.) அரசியல் சிதைவுற்றுத் தருமம் மாய்வாகாமே. செழியர் - பாண்டியர். அபயர் - சோழர். (பி - ம்.) 'வொன்றுண ராதார்'

மதுரைப்பதி தழைவதனால் தமிழ்நூல் பாழ்போதல் முதலியன நிகழவில்லை; அதற்குக் காரணம் அம்பிகையின் அருளென்றபடி.

32\. தகரக் கரியகு ழற்சிறு பெண்பிளை
நீயோ தூயோன்வாழ்
சயிலத் தெயிலைவ ளைப்பவ ளென்றெதிர்
சீறு வீறோதா

நிகரிட் டமர்செய்க ணத்தவர் நந்திபி
ரானே டேயோடா
நிலைகெட் டுலையவு டற்றவு டைந்ததொ
ரானே றாகாமே

சிகரப் பொதியமி சைத்தவ மூஞ்சிறு
தேர்மே லேபோயோர்
சிவனைப் பொருதச மர்த்தனு கந்துள
சேல்போன் மாயாமே

மகரத் துவசமு யர்த்தபொ லன்கொடி
தாலோ தாலேலோ
மலயத் துவசன்வ ளர்த்தப சுங்கிளி
தாலோ தாலேலோ. (கo)

32\. அம்பிகையின் மீனக்கொடியினது பெருமை கூறப்படும்.

அங்கயற்கண்ணம்மை திக்குவிசயம் செய்த காலையில் கயிலையின் கண் சிவபிரானுடைய படைத்தலைவர்கள் புறகிட்டு ஓடும்போது அவர்கள் பிடித்த விடைக் கொடியைப் போலவும், சிவபெருமானுடைய யோகத்தைக் கலைத்தற்குச் சென்ற மன்மதனுடைய மீனக்கொடியைப் போலவும் அம்பிகையின் கொடி தோல்வியடையவில்லை யென்பது இதில் கூறப்படும் செய்தி.

(அடி, 1.) தகரம் - மயிர்ச் சாந்து. பெண் பிளை = பெண்பிள்ளை; விளி; வழக்கு. தூயோன் - சிவபெருமான். சயிலம் - கயிலை மலை.

(அடி, 2.) நிகரிட்டு - எதிர்த்து. கணத்தவர் - பூதகணத்தினர். உடற்ற - போர் செய்ய. உடைந்ததாகிய ஓர் ஆனேறு; என்றது சிவ பெருமானது கொடியிலுள்ள விடையை.

(அடி, 3.) சமர்த்தன் - மன்மதன். (பி - ம்.) ‘உகந்தருள்’ மன்மதன் எரிந்த காலத்தில் அவன் கொடியும் எரிந்ததாதலின் சேல்போல் மாயாமே யென்றார்.

(அடி, 4.) மகரத் துவசம் - மீனக்கொடி.

(முடிபு.) என்று சீறு ஓதா நிகரிட்டு அமர்செய் கணத்தவர் நந்திபிரானேடே ஓடா, கெட்டு உலைய உடற்ற அப்போது உடைந்த ஆனேறு; ஆனேறு ஆகாமலும் சேல்போல்மாயாமலும் மகரத்துவசத்தை உயர்த்தகொடியென்க.

௪. சப்பாணிப் பருவம்

(ஆசிரிய விருத்தம்)

33. நாளவட் டத்தளிம நளினத் தொடுந்துத்தி
நாகணையும் விட்டொரெட்டு
நாட்டத்த னும்பரம வீட்டத்த னுந்துஞ்சு
நள்ளிருளி னுப்பணண்ட

கோளவட் டம்பழைய நேமிவட் டத்தினொடு
குப்புற்று வெற்பெட்டுமேழ்
குட்டத்தி னிற்கவிழ மூதண்ட வேதண்ட
கோதண்ட மோடுசக்ர

வாளவட் டஞ்சுழல மட்டித்து நட்டமிடு
மதமத்தர் சுத்தநித்த
வட்டத்தி னுக்கிசைய வொத்திக்க னத்ததன
வட்டத்தை யொத்திட்டதோர்

---

33. (அடி, 1.) நாளவட்டத் தளிம நளினம் - தண்டையுடைய வட்டமாகிய மெத்தையைப் போன்ற தாமரை மலர்; இது பிரமதேவர் இருப்பிடம். துத்தி - படப்பொறி. நாகணை - நாக அணை; அணை - படுக்கை. எட்டு நாட்டத்தன் - எட்டுக் கண்களையுடைய பிரமதேவன். பரம வீடு அத்தன் - வைகுண்டத்தின் தலைவனாகிய திருமால்; வைகுண்டத்தைப் பரமபதமென்றல் மரபு. நள்ளிருள் - செறிந்த இருள்; என்றது யுகாந்த காலத்து இருளை.

(அடி, 2-3.) பழைய நேமி வட்டம் - பழையதாகிய, கடலாற் சூழப்பட்ட பூமி. குப்புற்று - கவிழ்ந்து. ஏழ்குட்டம்-ஏழுகடல்; கடலைக் குட்டமென்னும் வழக்கு, "கடற்குட்டம் போழ்வர் கலவர்" (நான்மணிக்.) என்பதனாலும் உணரப்படும். மூதண்ட வேதண்ட கோதண்டம் - முதிய வானத்தை யளாவிய மேருமலையாகிய வில். சக்ரவாள வட்டம் - வட்டமான சக்கரவாளகிரி. மட்டித்து - அமிழ்த்தி. மதமத்தர் - ஊமத்தமலரை யணிந்த சிவபெருமான்: மதமத்தம் - ஊமத்தமலர்; "கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம், உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமான்" (தே.) (பி-ம்.) 'மதுமத்தர்' சுத்த நித்தம்: ஒருவகை நடனம்; இது சொக்க நிருத்த மென்றும் கூறப்படும்; சாந்திக் கூத்தின் வகையுள் ஒன்று (சிலப். ௩: 12, அடியார்.); (பி - ம்.) 'நிர்த்த வட்டம்' ஒத்தி - கொட்டி. (பி - ம்.) 'ஒற்றிக்'

தாளவட் டங்கொட்டு கைப்பாணி யொப்பவொரு
சப்பாணி கொட்டியருளே
தமிழொடு பிறந்துபழ மதுரையில் வளர்ந்தகொடி
சப்பாணி கொட்டியருளே. (க)

34. பொய்வந்த நுண்ணிடை நுடங்கக் கொடுஞ்சிப்
பொலந்தேரொ டமரகத்துப்
பொன்மேரு வில்லியை யெதிர்ப்பட்ட ஞான்றம்மை
பொம்மன்முலை மூன்றிலொன்று

கைவந்த கொழுநரொடு முள்ளப் புணர்ச்சிக்
கருத்தா னகத்தொடுங்கக்
கவிழ்தலை வணக்கொடு முலைக்கண் வைத் திடுமொரு
கடைக்கணைக் கமுதமூற்ற

(அடி, 4.) கைப்பாணி - கைத்தாளம். சப்பாணி கொட்டல் - இரண்டு கைகளையும் சேர்த்துக் கொட்டுதல்; ஸ: பாணி யென்பது சப்பாணி யென வந்ததென்பர்.

(அடி, 1-4.) நள்ளிருளில் நட்டமிடு மதமத்தர்: "நள்ளிருளி னட்டம் பயின்றாடு நாதனே" (திருவா. சிவபுராணம்.) சிவபெருமான் பிரளயகால தாண்டவம் செய்கையில், உமாதேவியார் உடனின்று தாளங்கொட்டின ரென்பது புராண வரலாறு.

(முடிபு.) நள்ளிருளின் நாப்பண், குப்புற்றுக் கவிழ, சுழல, மட்டித்து நட்டமிடும் மதமத்தரது நித்த வட்டத்தினுக்கு இசைய ஒத்திக் கொட்டு கைப் பாணி யென்க.

34. (அடி, 1.) பொய்வந்த நுண் இடை - பொய்யின் தன்மையைப் பெற்ற நுண்ணிய இடை. நுடங்க - அசைய. கொடுஞ்சி - தாமரை மொட்டின் வடிவமாகச் செய்து தேர்முன் அமைப்பதோருறுப்பு; (பி - ம்.) 'கொடிஞ்சி' பொன்மேரு வில்லி-சிவபெருமான். அம்மை-அம்மையாகிய நீ.

(அடி, 1-2.) சிவபெருமானைக் கண்ட மாத்திரத்தில் தடாதகைப்பிராட்டி யாருடைய மூன்று நகில்களில் ஒன்று மறைந்ததற்குத் தற்குறிப்பேற்ற அணியமைய வேறொரு காரணம் கற்பித்தார். உள்ளப் புணர்ச்சி - காதலர் இருவருடைய மனமும் ஒத்தல். உள்ளத்துள்ளே நிகழும் புணர்ச்சிக்கண் பயன்பட ஒரு நகில் உள்ளே சென்றதென்றார்.

மெய்வந்த நாணினொடு நுதல்வந் தெழுங்குறு
வெயர்ப்பினொ டுயிர்ப்புவீங்கும்
விம்மிதமு மாய்நின்ற வுயிரோவ மெனவூன்று
விற்கடை விரற்கடைதழீஇத்
தைவந்த நாணினொடு தவழ்தந்த செங்கைகொடு
சப்பாணி கொட்டியருளே
தமிழொடு பிறந்துபழ மதுரையில் வளர்ந்தகொடி
சப்பாணி கொட்டியருளே. (உ)

35. பூமரு வெடிப்பமுகை விண்டதண் டலையீன்ற
புனைநறுந் தளிர்கள்கொய்தும்
பொய்தற் பிணாக்களொடு வண்டற் கலம்பெய்து
புழுதிவிளை யாட்டயர்ந்தும்
காமரு மயிற்குஞ்சு மடவனப் பார்ப்பினொடு
புறவுபிற வும்வளர்த்தும்
காந்தள்செங் கமலத்த கழுநீர் மணந்தெனக்
கண்பொத்தி விளையாடியும்
தேமரு பசுங்கிள்ளை வைத்துமுத் தாடியும்
திரள்பொற் கழங்காடியும்
செயற்கையா னன்றியு மியற்கைச் சிவப்பூறு
சேயிதழ் விரிந்ததெய்வத்

(அடி, 3.) உயிர்ப்பு - மூச்சு. உயிர் ஓவம் - உயிரோடமைந்த சித்திரம்; "உடுக்கும் புவனங் கடந்துநின்ற வொருவன் றிருவுள் ளத்திலழகொழுக வெழுதிப் பார்த்திருக்கு முயிரோ வியமே" (62.) விற்கடை - வில்லின் கால்களை. விரற்கடையால் தழுவி.

35. அம்பிகையின் இளமைப் பருவத்து விளையாட்டுக்கள் கூறப்படும்.

(அடி, 1.) மரு வெடிப்பப் பூ முகை விண்ட-நறுமணம் வெளிப்படும்படி பூவானது அரும்பவிழ்ந்த. தண்டலை - சோலை. தளிர் கொய்தல் மகளிர் விளையாட்டு. பொய்தற் பிணாக்கள் - விளையாட்டு மகளிர்; பொய்தல்-விளையாட்டு. வண்டல் கலம் பெய்து - விளையாட்டுக்குரிய செப்புக்களை வைத்து; இது சிறு சோறடுதலைக் குறித்தது. புழுதி விளையாட்டு-புழுதியிலே விளையாடுதல்.

(அடி, 2.) மடவனப் பார்ப்பு - இளைய அன்னப்பறவையின் குஞ்சு. புறவு - புறா. பிறவும் - மற்றப் பறவைகளும்; அவை நாகணவாய்ப்புள் முதலியன. கைக்குக் காந்தளும் முகத்துக்குக் கமலமும் கண்ணுக்குக் கழுநீரும் உவமை; கழுநீர் - இங்கே கருங்குவளை. (பி - ம்.) 'முகந்தெனக்'

(அடி, 3.) முத்தாடி - முத்தமிட்டு. பொற்கழங்கு - பொன்னாலாகிய கழற்சிக்காய்; "முத்த வார்மணற் பொற்கழங் காடும்" (பெரும்பாண். 335)

தாமரை பழுத்தகைத் தளிரொளி துளும்பவொரு
சப்பாணி கொட்டியருளே
தமிழொடு பிறந்துபழ மதுரையில் வளர்ந்தகொடி
சப்பாணி கொட்டியருளே. (௩)

36. விண்ணளிக் குஞ்சுடர் விமானமும் பரநாத
வெளியிற் றுவாதசாந்த
வீடுங் கடம்புபொதி காடுந் தடம்பணை
விரிந்ததமிழ் நாடுநெற்றிக்
கண்ணளிக் குஞ்சுந்த ரக்கடவுள் பொலியுமறு
காற்பீட மும்மெம்பிரான்
காமர்பரி யங்கக் கவான்றங்கு பள்ளியங்
கட்டிலுந் தொட்டிலாகப்
பண்ணளிக் குங்குதலை யமுதொழுகு குமுதப்
பசுந்தேற லூறவாடும்
பைங்குழவி பெருவிரல் சுவைத்துநீ பருகிடப்
பைந்தேற லூறுவண்கைத்

(அடி, 4.) இயல்பாகவே செந்நிறம் பொருந்திய கைகள் தளிர்கொய்தல் முதலியவற்றாற் பின்னும் சிவப்பேறின. தாமரை பழுத்த கை - தாமரையைப் போன்ற இயல்பு முதிர்ந்த கை ; பழுத்த : உவம உருபுமாம்.

36. இச்செய்யுளின் முற்பகுதியில் அம்பிகை இருக்கும் இடங்கள் கூறப்படும்.

(அடி, 1.) விமானம் - இந்திர விமானம். துவாத சாந்தம் - பிரமரந்தரத்திற்கு மேலே பன்னிரண்டு தானங்களுக்கு அப்பாலுள்ளது : “ துவாத சாந்தப் பெருவெளியிற் றுரியங் கடந்த பரநாத, மூலத்தலத்து முளைத்தமுழு முதலே’ என்பர் பின் (44) ; திருவிளை. சு : 7, சுசு : 54-ஆம் செய்யுட்களைப் பார்க்க.

(அடி, 2.) அறுகாற் பீடம் : இது திருக்கோயிலிலுள்ளது. பரியங்கம் - துயிலுமிடம். கவான் - துடை ; துவாத சாந்தத்திலுள்ள சதாசிவ மூர்த்தியின் இடத்துடையில் அம்பிகை வீற்றிருப்பதாகத் தேவியைப் பற்றிய நூல்கள் கூறுமென்பர். (பி - ம்.) ‘ கவின்றங்கு. ’

(அடி, 3.) குமுதமென்றது வாயை. குமுதப் பசுந்தேறல் - வாய்நீர் (14, 402.) பைங்குழவியாகிய நீ. குழந்தைகள் தம் பெருவிரலைச் சுவைத்தல் இயல்பு. (பி - ம்.) ‘ சுவைத்துநீர் பருகிட ’

தண்ணளிக் கமலஞ் சிவப்பூற வம்மையொரு
சப்பாணி கொட்டியருளே
தமிழொடு பிறந்துபழ மதுரையில் வளர்ந்தகொடி
சப்பாணி கொட்டியருளே. (ரு)

37. சேலாட்டு வாட்கட் கருங்கடற் கடைமடை
திறந்தமுத மூற்றுகருணைத்
தெண்டிரை கொழித்தெறிய வெண்டிரை நெருப்பூட்டு
தெய்வக் குழந்தையைச்செங்

கோலாட்டு நின்சிறு கணைக்காற் கிடத்திக்
குளிப்பாட்டி யுச்சிமுச்சிக்
குஞ்சிக்கு நெய்போற்றி வெண்காப்பு மிட்டுவளர்
கொங்கையிற் சங்குவாக்கும்

பாலாட்டி வாயிதழ் நெரித்தூட்டி யுடலிற்
பசுஞ்சுண்ண முந்திமிர்ந்து
பைம்பொற் குறங்கினிற் கண்வளர்த் திச்சிறிய
பருமணித் தொட்டிலேற்றித்

(அடி, 3-4.) குழவி நீ பருகிடத் தேறல் ஊறு கைக்கமலம்.

(முடிபு.) விமானமும் வீடும் காடும் நாடும் பீடமும் கட்டிலும் தொட்டிலாக ஆடும் குழவிநீ கொட்டியருள்.

37. இதில், உக்கிரகுமார பாண்டியரை அம்பிகை வளர்த்தமுறை கூறப்படும்.

(அடி, 1.) வெண்டிரை - கடல். தெய்வக் குழந்தை - உக்கிர குமார பாண்டியர். அவர் கடல் சுவற வேலெறிந்த வரலாற்றை நினைந்து இங்ஙனம் கூறினர்.

(அடி, 2.) கோல் - திரட்சி. கோல் - அம்பு; இங்கே ஆகுபெயராய் அம்பறாத்தூணியைக் குறிப்பதெனக் கொள்ளலுமாம். உச்சி - உச்சந்தலை. முச்சி - உச்சிக்கொண்டை. குஞ்சி - ஆண் தலைமயிர். (பி - ம்.) 'முச்சியுச்சி'; 'நெய் பொத்தி' வெண்காப்பு - திருநீறு.

(அடி, 2-3.) கொங்கையிற் பால், சங்கு வாக்கும் பால். ஆட்டி - அசைத்து. குழந்தைக்குப் பாலூட்டுவார் அதனை அசைத்துக் கலக்கியூட்டுதல் வழக்கம். வாயிதழ் நெரித்தூட்டல்: "நெய்பா லடைக்கலந் தாய்வைத்து வாய்நெரித் தூட்ட வழுமையனே" (திருவரங்கத்தந். 18.) திமிர்ந்து - பூசி. (பி - ம்.) 'பருஉமணித்'

தாலாட்டி யாட்டுகைத் தாமரை முகிழ்த்தம்மை
சப்பாணி கொட்டியருளே
தமிழொடு பிறந்துபழ மதுரையில் வளர்ந்தகொடி
சப்பாணி கொட்டியருளே. (ரு)

(வேறு)

38. வானத் துருமொ டுடுத்திரள் சிந்த
மலைந்த பறந்தலையில்
மண்ணவர் பண்ணவர் வாளின் மறிந்தவர்
மற்றவர் பொற்றெடியார்
பானற் கணையு முலைக்குவ டும்பொரு
படையிற் படவிமையோர்
பைங்குடர் மூளையொ டும்புதி துண்டு
பசுந்தடி சுவைகாணச்
சேனப் புந்தரி னலகைத் திரள்பல
குரவை பிணைத்தாடத்
திசையிற் றலைவர்கள் பெருநா ணெய்தச்
சிறுநா ணொலிசெய்யாக்

(அடி, 4.) முகிழ்த்து - குவித்து.

(முடிபு.) குழந்தையைக் கிடத்திக் குளிப்பாட்டிப் போற்றி இட்டு ஆட்டி நெரித்து ஊட்டித் திமிர்ந்து வளர்த்தி ஏற்றித் தாலாட்டி ஆட்டு கை. கைத் தாமரை முகிழ்த்துக் கொட்டியருள்.

38. தடாதகைப் பிராட்டியார் திக்குவிசயம் செய்கையில் தேவர் படைகளோடு அமர்புரிந்த செய்தி இதிற் கூறப்படும்.

அம்பிகையின் படையில் உள்ள சிலர் போரில் உயிர்துறந்து சுவர்க்க வாழ்வு பெறுதலும், தேவர் உடல் அழிய அவற்றைப் பேய்கள் உண்ணுதலும் இதிற் காணப்படும் செய்திகள்.

(அடி, 1-2.) உரும் - இடி. பறந்தலை - போர்க்களம். மண்ணவர் - பிராட்டியாருடைய படையில் இருந்த வீரர்கள். மறிந்தவராய். அவர் பொற்றொடியார் - தெய்வப் பெண்கள். பானற்கணை - கண். முலையாகிய குவடு. மண்ணவர், வாளின் மறிந்தவராய்த் தெய்வப் பெண்களுடைய கண்களும் தனமுமாகிய பொருபடையிற் பட; வீரசுவர்க்கத்தையடைந்து தெய்வப் பெண்களின் நலந்துய்த்தாரென்றபடி. தடாதகைப் பிராட்டியாரது படையிலுள்ளோரிற் சிலர் உயிர் நீப்பினும் பகைஞருடைய பொருளைக் கவர்ந்தனரென்றது ஒருநயம். இமையோரது குடர். இதுவரை உண்ணப்படாமையின் 'புதிதுண்டு' என்றார். பசுந்தடி - பச்சை நிணம்.

(அடி, 3.) சேனம் - பருந்து. அலகைத் திரள் - பேய்க்கூட்டம். குரவை - கைகோத்தாடல்; இங்கே பேய்க்கூத்து. (பி - ம்.) 'சில குரவை'

கூனற் சிலையி னெடுங்கணை தொட்டவள்
கொட்டுக சப்பாணி
குடைநிழ லிற்புவி மகளை வளர்த்தவள்
கொட்டுக சப்பாணி. (சு)

39. சமரிற் பிறகிடு முதியரு மபயரும்
எதிரிட் டமராடத்
தண்ட தரன்செல் கரும்பக டிந்திரன்
வெண்பக டோடுடையாத்

திமிரக் கடல்புக வருணன் விடுஞ்சுற
வருணன் விடுங்கடவுட்
டேரி னுகண்டெழ வார்வில் வழங்கு
கொடுங்கோல் செங்கோலா

இமயத் தொடும்வளர் குலவெற் பெட்டையும்
எல்லைக் கல்லினிறீஇ
எண்டிசை யுந்தனி கொண்டு புரந்து
வடாது கடற்றுறைதென்

குமரித் துறையென வாடு மடப்பிடி
கொட்டுக சப்பாணி
குடைநிழ லிற்புவி மகளை வளர்த்தவள்
கொட்டுக சப்பாணி. (எ)

---

39. அம்பிகை போர்புரிகையிற் பகைப்படைகள் தம்முள்ளே முரணிப் பொருத செய்தி கூறப்படும்.

(அடி, 1.) பிறகிடும் - முதுகிட்டோடும். உதியர் - சேரர். அபயர் - சோழர். தண்டதரன் - யமன். அவன் செல் கரும்பகடு - எருமைக்கடா. வெண்பகடு - வெள்ளை யானை ; ஐராவதம். உடையா - தோற்று.

(அடி, 2.) திமிரக் கடல் - இருளாகிய கடலில். ' சுறவு - சுறாமீன் ; இது வருணன் வாகனம். அருணன் - சூரியன் தேர்ப்பாகன். சுறவு உகண்டெழ. கோல் - அம்பு. கொடுமை அம்புக்கு அடை ; "கணைகொடிது" (குறள், 279.)

(அடி, 3.) குலாசலங்கள் எட்டையும் தன் ஆட்சிக்குரிய நிலத்திற்கு எல்லைக் கல்லாக நிறுத்தி ; ஆட்சி நிலத்தின் எல்லையில் கல் நடுவது மரபு. தனி கொண்டு - பொதுவாக இருந்த நாடுகளைத் தனக்கே உரியனவாகக் கொண்டு.

(அடி, 4.) பிடி : விளி.

40. சென்றிடு வாளிகள் கூளிகள் காளிகள்
ஞாளியி லாளியெனச்
செருமலே செம்மலே முதலியர் சிந்தச்
சிந்திட நந்திபிரான்
நின்றில னோடலு முன்னழு கும்மவன்
பின்னழு குங்காணு
நிலவுவி ரிந்திடு குறுநகை கொண்டு
நெடுங்கயி லேக்கிரியின்
முன்றிலி னுடன் மறந்தம ராடியெோர்
மூரிச் சிலேகுனியா
முரிபுரு வச்சிலே கடைகுனி யச்சில
முளரிக் கணேதொட்டுக்
குன்றவி லாளியை வென்ற தடாதகை
கொட்டுக சப்பாணி
குடைநிழ லிற்புவி மகளே வளர்த்தவள்
கொட்டுக சப்பாணி. (அ)

---

40. இதில் தேவி கைலேயங்கிரியை அடைந்து இறைவனே வயப்படுத்திய செய்தி கூறப்படும்.

(அடி, 1-2.) வாளிகள் - தேவி செலுத்திய அம்புகள். கூளிகள், காளிகள், வைரவக் கடவுள் முதலியோர் சிவபெருமானுக்குரிய படையைச் சார்ந்தோர். கூளி - பெண்பேய். ஞாளி - நாய் : இது வைரவரது வாகனம். ஆளி - சிங்கம் ; இஃது அவருக்கு உவமை. ஞாளியில் ஆளியெனச் செருமலே செம்மல் - வைரவக் கடவுள். செம்மலே ; ஐ, சாரியை. செம்மல் முதலியர் சிந்தும்படி தேவியின் வாளிகள் சிந்திட. தேவியால் எய்யப்பட்டனவாயினும் வாளியின் செயலாகக் கூறினர், அச்செயல் தேவிக்கேற்ற பெருமையை உடையதன்றென நினைந்து. (பி - ம்.) 'நின்றவரோடலும்'

(அடி, 3.) ஆடல் - முன்பு தான் இறைவனுடன் கைலேயில் விளையாடிக் கொண்டிருந்தமையை. முரி புருவச்சிலே - வளைந்த புருவமாகிய வில்லே; சில - இரண்டு. முளரிக்கணே - தாமரை மலராகிய அம்பு ; என்றது கண்களே. அக்கினிக்கணே யென்னும்பொருளும் தோற்றுகின்றது ; முளரி - நெருப்பு.

(அடி, 4.) குன்றவிலாளி - மேருமலேயாகிய வில்லே ஆள்பவர். தடாதகை : விளி.

(முடிபு.) வாளிகள் சிந்திட ஓடலும், காணு நகைகொண்டு சிலேகுனியாத் தொட்டு வில்லாளியை வென்ற தடாதகை.

(சந்த விருத்தம்)

41\. ஒழுகிய கருணையு வட்டெழ வைத்தவ ருட்பார்வைக்
குளநெகி ழடியர்ப வக்கடல் வற்றவ லைத்தோடிக்
குழையொடு பொருதுகொ லைக்கணை யைப்பிணை யைச்சீறிக்
குமிழொடு பழகிம தர்த்தக யற்கண்ம டப்பாவாய்
தழைகெழு பொழிலின்மு சுக்கலை மைப்புய லிற்பாயத்
தவழிள மதிகலை நெக்குகு புத்தமு தத்தோடே
மழைபொழி யிமயம யிற்பெடை கொட்டுக சப்பாணி
மதுரையில் வளரும டப்பிடி கொட்டுக சப்பாணி. (௯)

42\. செழுமறை தெளியவ டித்தத மிழ்ப்பதி கத்தோடே
திருவரு ளமுதுகு ழைத்துவி டுத்தமு லைப்பாலாற்
கழுமல மதலைவ யிற்றைநி ரப்பிம யிற்சேயைக்
களிறொடும் வளரவ ளர்த்தவ ருட்செவி லித்தாயே
குழலிசை பழகிமு ழுப்பிர சத்திர சத்தோடே
குதிகொளு நறியக னிச்சுவை நெக்கபெ ருக்கேபோல்
மழலையி னமுதுகு சொற்கிளி கொட்டுக சப்பாணி
மதுரையில் வளரும டப்பிடி கொட்டுக சப்பாணி. (௧௦)

41\. (சந்தக் குறிப்பு.) தனதன தனதன தத்தன தத்தன தத்தான.
(அடி, 1-2.) அம்பிகையின் திருவிழிகளது பெருமை கூறப்படும்.

(அடி, 1.) உவட்டெழ - பெருக்கெழும்படி. பவக்கடல் - பிறவியாகிய கடல்.

(அடி, 2.) குழை - காதணி. பிணை - பெண்மான். குமிழென்றது மூக்கை. பாவாய் - பாவையே. ஓடிப் (1) பொருது சீறிப் பழகி மதர்த்த கண்.

(அடி, 3-4.) முசுக்கலை - ஆண் குரங்கு. முசுக்கலை மேகத்திற் பாய, அம்மேகத்தின்மேல் தவழுகின்ற சந்திரன் கிழிதலால் ஒழுகுகின்ற அமுதத்தோடு மேகம் நீரைப் பொழியும் இமயமென்க. மைப்புயல் - நீருண்டு கறுத்த மேகம்.

42\. (அடி, 1.) மறையினின்றும் வடித்த; மறை - உபநிடதம். அறிதற்கரிய உபநிடதப் பொருளைத் தேவாரத் திருப்பதிகம் எளிதில் அறியும்படி செய்கின்ற அருமை குறிக்கப்படுகின்றது.

(அடி, 2.) கழுமல மதலை - திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்; கழுமலம் - சீகாழி. பாலால் (1) நிரப்பி. மயிற்சேய் - முருகப்பிரான். களிறு - விநாயகர். (பி - ம்.) 'மயிற்சேய்கைக் களிறொடும்'

(அடி, 3.) பிரசத்து இரசம் - தேனின் இனிமை. நெக்க - நெகிழ்ந்த. குழலின் இசையும் தேனின் இனிமையும் கனியின் சுவையும் அமுதும் மழலைச் சொல்லுக்கு உவமைகள்.

ரு. முத்தப் பருவம்

(ஆசிரிய விருத்தம்)

43. காலத் தொடுகற் பனைகடந்த
கருவூ லத்துப் பழம்பாடற்
கலைமாச் செல்வர் தேடிவைத்த
கடவுண் மணியே யுயிராலவாலத் துணர்வு நீர்பாய்ச்சி
வளர்ப்பார்க் கொளிபூத் தளிபழுத்த
மலர்க்கற் பகமே யெழுதாச்சொல்
மழலை ததும்பு பசுங்குதலைச்

சோலைக் கிளியே யுயிர்த்துணையாம்
தோன்றாத் துணைக்கோர் துணையாகித்
துவாத சாந்தப் பெருவெளியிற்
றுரியங் கடந்த பரநாத

மூலத் தலத்து முளைத்தமுழு
முதலே முத்தந் தருகவே
முக்கட் சுடர்க்கு விருந்திடும்
முலையாய் முத்தந் தருகவே. (க)

---

43. (அடி, 1.) கற்பனை - கற்பித்தல். கருவூலம் - பொக்கிஷம். (பி-ம்.) 'கருகூலத்துப்' பழம் பாடல் - வேதம். செல்வர் - ஞானியர். தேடி வைத்த - அறிந்துவைத்த. கருவூலத்தில் வைத்த மணி.

(அடி, 1-2.) ஆல்வாலம் - பாத்தி. உணர்வு - மெய்ஞ்ஞானம். (பி - ம்.) 'உணர்வின்னீர்'; 'அருள்பழுத்த' தேவியைக் கற்பகமென்று உருவகித்த தற் கேற்பப் பாத்தியும் நீர்பாய்ச்சலும் பூத்தலும் பழுத்தலும் கூறப்பட்டன. குதலை - எழுத்து வடிவம் பெறாத சொல்.

(அடி, 3.) தோன்றாத்துணை - இறைவன்; "தோன்றாத் துணையா யிருந்தனன் றன்னடி யோங்களுக்கே" (தே.)

(அடி, 4.) முக்கட் சுடர் - சிவபெருமானுடைய கண்களாகிய மூன்று சுடர்கள்; சோம சூரியாக்கினிகள் (63.)

44. உருகி யுருகி நெக்குநெக்குள்
உடைந்து கசிந்திட் டசும்பூறும்
உழுவ லன்பிற் பழவடியார்
உள்ளத் தடத்தி லூற்றெடுத்துப்

பெருகு பரமா னந்தவெள்ளப்
பெருக்கே சிறியேம் பெற்றபெரும்
பேறே யூறு நறைக்கூந்தற்
பிடியே கொடிநுண் ணுசுப்பொசிய

வருகுங் குமக்குன் றிரண்டேந்தும்
மலர்ப்பூங் கொம்பே தீங்குழலின்
மதுரங் கனிந்த பசுங்குதலை
மழலை யரும்பச் சேதாம்பல்

முருகு விரியுஞ் செங்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
முக்கட் சுடர்க்கு விருந்திடும்
முலையாய் முத்தந் தருகவே. (உ)

45. கொழுதி மதர்வண் டுழக்குகுழற்
கோதைக் குடைந்த கொண்டலுநின்
குதலைக் கிளிமென் மொழிக்குடைந்த
குறுங்கட் கரும்புங் கூன்பிறைக்கோ

---

44. (அடி, 1.) நெக்கு நெக்கு - நெகிழ்ந்து நெகிழ்ந்து. உள் உடைந்து- உள்ளம் உருகி. அசும்பு - துளி. உழுவல் அன்பு - ஏழுபிறப்பும் தொடர்ந்த அன்பு ; உழுவலன்பென்பதன் பொருளைப் பழவடியாரென்பதனாலும் வற்புறுத்தினர். தடம் - தடாகம்.

(அடி, 2.) (பி - ம்) 'பெருகும்' ஊறும் நறை - ஊறுகின்ற தேன் ; நறை - நறுமணமுமாம். (பி - ம்.) 'நாறுநறை' பிடியின் தலைமயிரைக் கூந்தலென்பர். நுசுப்பு - இடை.

(அடி, 3.) குங்குமக்குன்று இரண்டென்றது நகில்களை (59.) சேதாம்பல் - செவ்வாம்பலினது.

(அடி, 4.) முருகு - நறுமணம்.

45. மேகம் முதலியவை அம்பிகையின் கூந்தல் முதலியவற்றிற்குத் தோற்றனவாதலின் அவற்றில் உண்டாகும் முத்துக்கள் அம்பிகையின் திருவாய் முத்தை (- முத்தத்தை) ஒவ்வாவென்பது கூறப்படும்.

(அடி, 1.) கொழுதி - கிண்டி. குழற்கோதை - சுருளுதலையுடைய கூந்தல், உடைந்த - தோற்ற. கொண்டல் - மேகம். குறுங்கண் - குறிய கணுக்கள்.

டுழுத பொலன்சீ றடிக்குடைந்த
செந்தா மரையும் பசுங்கழுத்துக்
குடைந்த கமஞ்சூற் சங்குமொழு
கொளிய கமுகு மழகுதொய்யில்

எழுது தடந்தோட் குடைந்ததடம்
பணையும் பணைமென் முலைக்குடைந்த
இணைமா மருப்புந் தருமுத்துன்
திருமுத் தொவ்வா விகபரங்கள்

முழுதுந் தருவாய் நின்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
முக்கட் சுடர்க்கு விருந்திடுமும்
முலையாய் முத்தந் தருகவே. (ரு)

46. மத்த மதமாக் கவுட்டொருநான்
மருப்புப் பொருப்பு மிசைப்பொலிந்த
வானத் தரசு கோயில்வளர்
சிந்தா மணியும் வடபுலத்தார்

நத்தம் வளர வளகையர்கோன்
நகரில் வளரும் வான்மணியும்
நளினப் பொகுட்டில் வீற்றிருக்கும்
நங்கை மனைக்கோர் விளக்கமெனப்

(அடி, 1-2.) பிறைக்கோடுழுத பொலன்சீறடியென்றது, சிவபெருமான் தேவியினது ஊடலை நீக்கும்பொருட்டு வணங்கியதை நினைந்து கூறியது; "முழுமணி மிடற்றன் கனன்மழு வீரன் முக்கணண் டகைநின தெழில்கூர் - முகம்புலர் தலைக்கண் டெடல்வளைந் தடியின் முனைப்பிறைக் கோடு கொண்டுழுது" (பெரியநாயகி. ஆசிரிய. 1.) சங்கும் கமுகுமாகிய இரண்டும் கழுத்துக்கு உடைந்தன.

(அடி, 3.) (பி - ம்.) 'தொடித்தோள்' பணை - மூங்கில். திருமுத்து - வாய்முத்தம்; முத்தம் முத்தென நின்றது, 'முத்தாடி' என்புழிப்போல.

46. (அடி, 1) மத்தம் - களிப்பு (திருச்சிற். 388, பேர்.) கவுட்டு - கவுளையுடையதாகிய. நான்மருப்புப் பொருப்பு - ஐராவதம். வானத்தரசு கோயில் - இந்திரனது அரண்மனையில். வடபுலத்தார் - இயக்கர்கள்.

(அடி, 2.) நத்தம் - ஊர். அளகையர்கோன் - குபேரன்; இவன் வடதிசைக்கு அதிபன்.

பைத்த சுடிகைப் படப்பாயற்
பதும நாபன் மார்பில்வளர்
பருதி மணியு மெமக்கம்மை
பணியல் வாழி வேயீன்ற
முத்த முகந்த நின்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
முக்கட் சுடர்க்கு விருந்திடுமும்
முலையாய் முத்தந் தருகவே. (௪)

47. கோடுங் குவடும் பொருதரங்கக்
குமரித் துறையிற் படுமுத்தும்
கொற்கைத் துறையிற் றுறைவாணர்
குளிக்குஞ் சலாபக் குவான்முத்தும்
ஆடும் பெருந்தண் டுறைப்பொருநை
ஆற்றிற் படுதெண் ணிலாமுத்தும்
அந்தண் பொதியத் தடஞ்சாரல்
அருவி சொரியுங் குளிர்முத்தும்
வாடுங் கொடிநுண் ணுசுப்பொசிய
மடவ மகளி ருடனாடும்
வண்டற் றுறைக்கு வைத்துநெய்த்து
மணந்தாழ் நறுமென் புகைப்படலம்

(அடி, 3.) பைத்த - விரித்த. பருதிமணி - சூரியன்போன்ற மணி; கௌத்துவ மணி. அம்மை - தாயாகிய நீ. பணியல் - தந்தருளாதே.

(அடி, 3-4.) வேயீன்ற முத்தம் - சிவபெருமான்.

47. (அடி, 1.) கோடு - கரை. குவடு - மலை. கொற்கை - பாண்டி நாட்டுக் கடற்றுறைப்பட்டினம். துறைவாணர் - நெய்தல் நிலத்தார். சலாபம் - முத்துக் குளித்தல். குவால் - குவியல். கொற்கைமுத்து: "விளைந்துமுதிர்ந்த விழுமுத்தின்......நற்கொற்கையோர் நசைப்பொருந" (மதுரைக். 135-8); "மல்குநீர் வரைப்பிற் கொற்கை முன்றுறை, ஊதை யீட்டிய வுயர்மண லடைகரை, ஓத வெண்டிரை யுதைத்த முத்தம்" (தொல். களவு. 11. ந. மேற்.)

(அடி, 2.) பொருநையாறு - தாமிரபன்னிநதி; "பொதியில், நதியிலேவிளை கின்றன முத்தம்" (திருவிளை.)

(அடி, 3.) வண்டற்றுறை - விளையாட்டிடங்கள். நெய்த்து - பளபளப்பையுடையதாகி. நறுமென் புகைப்படலம் - அகிற்புகை முதலியவற்றின் பரப்பு.

மூடுங் குழலாய் நின்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
முக்கட் சுடர்க்கு விருந்திடும்
முலையாய் முத்தந் தருகவே. (ரு)

(வேறு)

48\. பைவைத்த துத்திப் பரூஉச்சுடிகை முன்றிற்
பசுங்கொடி யுடுக்கைகிழியப்
பாயிருட் படலங் கிழித்தெழு சுடர்ப்பருதி
பருதிக் கொடுஞ்சி மான்றேர்

மொய்வைத்த கொய்யுளை வயப்புரவி வாய்ச்செல்ல
முட்கோல் பிடித்து நெடுவான்
முற்றத்தை யிருள்பட விழுங்குந் துகிற்கொடி
முனைக்கணை வடிம்புநக்கா

மைவைத்த செஞ்சிலையு மம்புலியு மோடுநெடு
வான்மீன் மணந்துகந்த
வடவரை முகந்தநின் வயக்கொடி யெனப்பொலியும்
மஞ்சிவர் வளாகநொச்சித்

48\. மதுரையிலுள்ள மதிற்கொடிகளின் சிறப்பு இதிற் சொல்லப்படும்.

(அடி, 1.) பை - படம். துத்தி - படப் பொறி. சுடிகை முன்றில் - ஆதிசேடனது உச்சிப்பரப்பு. அதிலுள்ள கொடி போல்வாள் பூமிதேவி. அவளது உடுக்கை கடல். சுடர்ப்பருதி - சூரியனது. கிழிய எழு பருதி யென்க. பருதியையும் கொடுஞ்சியையும் உடைய தேர்; பருதி - தேருருளை; மான்றேரென்பது தேரென்னும் மாத்திரையாய் நின்றது. (பி - ம்.) 'பரிதி பரிதிக் கொடுஞ்சி மான்றேர்'

(அடி, 2.) சூரியனது தேரிற்கட்டிய புரவி வாவிச்செல்லும்படி. முட்கோல் - குதிரையை ஓட்டுதற்குரிய தாற்றுக்கோல்; என்றது இங்கே கொடியின் உச்சியிலுள்ள கூரிய உறுப்பை; அதுவே முட்கோலைப் போல உதவியது. செல்லப் பிடித்து என்க. துகிற்கொடி : எழுவாய். (பி - ம்.) 'நிழற்றுந் துகிற்கொடி'

(அடி, 2-3.) துகிற்கொடிக்கும் அம்பிகையின் கயற்கொடிக்கும் சிலேடை.

முனைக்கணை - முனையையுடைய அம்பினது. வடிம்பு - விளிம்பு. நக்காச் சிலை - பொருந்தாத சிலை; வெளிப்படை. சிலை - இந்திரவில்; சேரரது விற்கொடி. அம்புலி - சந்திரன், சோழர்க்குரிய அழகிய புலிக்கொடி. மீன்-

தெய்வத் தமிழ்க்கூட றமையத் தமைத்தவள்
திருப்பவள முத்தமருளே
சேல்வைத்த வெண்கொடியை வலம்வைத்த பெண்கொடி
திருப்பவள முத்தமருளே. (சு)

49. பின்னற் றிரைக்கடன் மதுக்குட மறத்தேக்கு
பெய்முகிற் காருடலவெண்
பிறைமதிக் கூன்குயக் கைக்கடைஞ ரொடுபுடை
பெயர்ந்திடை நுடங்கவொல்கும்

மின்னற் றடித்துக் கரும்பொற் றொடிக்கடைசி
மெல்லியர் வெரீஇப்பெயரவான்
மீன்கணம் வெருக்கொள்ள வெடிவரால் குதிகொள்ளும்
விட்புலம் விளைபுலமெனக்

மீனராசி, கொடியிலெழுதிய மீன். உகந்த வடவரை - உயர்ந்த மேருமலை ; "உகப்பே யுயர்வு" (தொல். உரி.) வளாகம் - பரப்பு. நொச்சி - மதில்.

(அடி, 4.) திருப்பவளம் - வாய்.

(முடிபு.) துகிற்கொடி சிலையும் அம்புலியும் ஓட மீனை மணந்து நின் கொடியெனப் பொலிதற்கு இடமாகிய நொச்சியையுடைய கூடல்.

49. வானளவும் உயர்ந்து வளர்ந்த கரும்பும் நெல்லும் அவ் வானத்தை விளைபுலம் போலத் தோற்றும்படி செய்வதாகக் கற்பித்து அதற்கேற்ப மேகத்தை மள்ளர்களாகவும் மின்னலைக் கடைசியராகவும் விண்மீன்களை மீன்களாகவும் உருவகம் செய்கின்றார்.

(அடி, 1.) கடலாகிய மதுக்குடம். அற - முழுவதும். தேக்கு - நிறைய உண்ட. காருடலையும் மதியாகிய குயக்கையையும் உடைய கடைஞர். முகிலாகிய கடைஞர் ; கடைஞர் - மள்ளர். கூன்குயம் - வளைவையுடைய அரிவாள். (பி - ம்.) 'காருடலம் வெண்'; 'கடையரொடு'

(அடி, 2.) மின்னற் றடித்து - மின்னுதலையுடைய மின்னல். கரும்பொற் றொடி - இரும்பாலாகிய கைவளையையுடைய ; கரும்பொன் - இரும்பு. தடித்தாகிய கடைசி மெல்லியர். வான்மீன்கணம் - நட்சத்திரக்கூட்டம், வெள்ளிய மீன்களின் தொகுதி. வெடி வரால் - துள்ளும் வரால்மீன். விளைபுலம் - வயல். என - என்று யாரும் சொல்லும்படி.

(அடி, 1-2.) கடைஞரொடு மெல்லியர் பெயரவும் மீன்கணம் வெருக் கொள்ளவும் வரால் குதிகொள்ளும்.

கன்னற் பெருங்காடு கற்பகக் காட்டுவளர்
கடவுண்மா கவளங்கொளக்
காமதே னுவுநின்று கடைவாய் குதட்டக்
கதிர்க்குலை முதிர்ந்துவிளையும்
செங்நெற் படப்பைமது ரைப்பதி புரப்பவள்
திருப்பவள முத்தமருளே [கொடி
சேல்வைத்த வொண்கொடியை வலம்வைத்த பெண்
திருப்பவள முத்தமருளே. (எ)

50. சங்கோ லிடுங்கடற் றானைக்கு வெந்நிடு
தராபதிகண் முன்றி றார்த்த
தமனியக் குப்பையுந் திசைமுதல்வர் தடமுடித்
தாமமுந் தலைமயங்கக்
கொங்கோ லிடுங்கைக் கொடுங்கோ லொடுந்திரி
குறும்பன் கொடிச்சிறவுநின்
கொற்றப் பதாகைக் குழாத்திைேடு மிரசதக்
குன்றினுஞ் சென்றுலாவப்

(அடி, 3.) கன்னல் - கரும்பு. கடவுண்மா - ஐராவதம். கன்னற் காட்டைக் கடவுண்மா கவளம் கொள. கடைவாய் குதட்ட - தின்று அசை போடும்படி.

(அடி, 4.) படப்பை - இங்கே வயல்; "பாசவற் படப்பை" (புறநா. சு : 14.)

(3-4) இதனால் மதுரையின் நிலவளம் சிறப்பிக்கப்பட்டது. "நிலத்துக் கணியென்ப நெல்லுங் கரும்பும்" (நான்மணிக்.) என்பராதலின் அவ்விரண்டாலும் அச்சிறப்பை இங்கே புலப்படுத்தினர்.

50. தடாதகைப்பிராட்டியின் செங்கோற் சிறப்புக் கூறப்படும்.

(அடி, 1.) கடல்போன்ற தானை. சங்கு ஓலிடுதல் கடலுக்கும் தானைக்கும் பொது. வெந்நிடு தராபதிகள் - புறங்காட்டிய அரசர்கள். முன்றில் - தடாதகைப் பிராட்டியாரின் அரண்மனை முற்றம். தமனியக் குப்பை - பொற் குவியல்; இது பிற அரசர்கள் இட்ட திறை. திசை முதல்வர் - திக்குப் பாலகர். முடித்தாமம் - முடியிலணிந்த கற்பக மலர் மாலை; அது பொன் னிறத்தது. தலைமயங்க - ஒன்றனோடு ஒன்று கலந்து கிடப்ப.

(அடி, 2.) கொங்கு - நறுமணம். கொடுங்கோலென்றது மலரம்புகளை. குறும்பன் - மன்மதன். கொற்றப்பதாகை - வெற்றிக்கொடி. இரசதக் குன்று - கைலாயம். அம்பிகை சென்றதனால் சிவபெருமான் திருவுள்ளத்தே விருப்பம் விளைவிக்க ஏதுவுண்டா மாதலாலும், அம்பிகையின் கொடிக்கும் தன் கொடிக்கும் வேறுபாடு இன்மையாலும், முன்பு அழிவுற்ற காமன்

பொங்கோல வேலைப் புறத்திஞெ டகத்தினிமிர்
போராழி பருதியிரதப்
பொங்காழி மற்றப் பொருப்பாழி யிற்றிரி
புலம்பைப் புலம்புசெய்யச்
செங்கோ றிருத்திய முடிச்செழியர் கோமகள்
திருப்பவள முத்தமருளே [கொடி
சேல்வைத்த வொண்கொடியை வலம்வைத்த பெண்
திருப்பவள முத்தமருளே. (அ)

(சந்த விருத்தம்)

51. பருவரை முதுபல வடியினி னெடுநில
நெக்ககு டக்கனியிற்
படுநறை படுநிறை கடமுடை படுவக
டுப்பவு வட்டெழவும்

அம்பிகையின் கொடியைத் துணையாகப் பெற்றுத் தன் கொடியோடு கைலைக்குச் சென்றுனென்பது கருத்து.

(அடி, 3.) சூரியனது தேர் உலவுகின்ற எல்லையாகிய சக்கரவாள கிரியளவும் தடாதகைப் பிராட்டியாரின் ஆணை சென்றதென்பர்.

போராழி - ஆஞ்ஞா சக்கரம். பருதியின் இரதத்தின் ஆழி; ஆழி - தேர் உருளை. பொருப்பாழியில் - சக்கரவாள கிரியில். புலம்பை - தனிமையை; புலம்புசெய்ய - வருத்த; தனிமையைப் போக்கிய தென்றபடி. அம்பிகையின் ஆட்சி காறும் சூரியன் தேரின் ஒற்றையாழி தனியே சக்கரவாளகிரியைச் சுற்றியதெனவும், அம்பிகையின் ஆட்சியில் அவளது ஆஞ்ஞா சக்கரமும் உடன் செல்லுதலினுல் தனிமையை யொழிந்த தெனவும் கூறினர். கதிரவன் தேர்ச்சக்கரமும் ஆஞ்ஞா சக்கரமும் உலகு முழுவதும் நடப்பதில் ஒத்தனவென்றவாறு; இதனை, "குலநேமி ரவிபோல வலநேமி தனிகோலு குலதீபனே, நிலநேமி பொலனேமி யளவாக வுககோடி நெடிதாளவே" (தக்க. 2) என்பதனுலும் உணரலாகும். (பி - ம்.) 'திரிபுலம்பப் புலம்பு செய்ய'

(அடி, 4.) செழியர் - பாண்டியர்.

51. (சந்தக் குறிப்பு.) தனதன தனதன தனதன தனதன தத்தன தத்தனன.

பலாப்பழத்தின் தேனும் கமுகம்பாளையின் தேனும் பாய்ந்து நிறைந்த தடாகத்தின் நீரையுண்ட களிறு முழங்க, அதனெதிர் மேகம்முழங்க, அவ்விரண்டன் முழக்கத்தினும் இருமடங்குமிக மும்முரசம் மதுரையில் அதிருமென்பர்.

(அடி, 1.) பரு அரை - பருத்த அடி மரம். குடக்கனி - குடம்போன்ற பலாப் பழம். படும் நறை - உண்டாகும் தேன். படு நிறை கடம் - கள் நிறைந்த குடம். கடுப்ப - ஒப்ப. உவட்டெழ - பெருக்கெடுப்ப.

விரிதலை முதலொடு விளைபுல முலையவு
　　மூக்கிய முட்சுறவின்
　விசையினின் வழிநறை மிடறொடி கமுகின்வி
　　மூக்குலை நெக்குகவும்

கரையெறி புணரியி னிருமடி பெருகுத
　　டத்தும டுத்தகடக்
　களிறொடு பிளிறிட விகலிய முகிலினி
　　ரட்டியி ரட்டியமும்

முரசதிர் கடிநகர் மதுரையில் வளர்கிளி
　　முத்தம ளித்தருளே
　முழுதுல குடையவொர் கவுரியர் குலமணி
　　முத்தம ளித்தருளே. (கூ)

52. புதையிருள் கிழிதர வெழுதரு பருதிவ
　　ளைத்தக டற்புவியிற்
　பொதுவற வடிமைசெய் திடுவழி யடியர்பொ
　　ருட்டலர் வட்டணையிற்

றதைமலர் பொதுளிய களியளி குமிறுகு
　　முற்றிரு வைத்தவளச்
　சததள முளரியின் வனிதையை யுதவுக
　　டைக்கண்ம டப்பிடியே

(அடி, 2.) விரிதலை முதல் - நெல்லும் கரும்புமாகிய பயிர்கள். முள்ளை யுடைய சுறு மீன். நறை - கள். நறை நெக்கு உகவும்.

(அடி, 3.) தடத்து - தடாகத்தில். இரட்டி இரட்டிய - இரு மடங்கு ஒலித்த.

(அடி, 3-4.) மும்முரசு - வீரமுரசு, தியாகமுரசு, மணமுரசு என்பன (புறநா. ருஅ : 12, உரை.) (பி - ம்.) 'கடிமதில்' கவுரியர் - பாண்டியர்.

(முடிபு.) நறை உவட்டெழவும் வழிநறை உகவும் இருமடி பெருகு தடத்தில் மடுத்த களிறொடு பிளிறிட இகலிய முகிலின் இரட்டி இரட்டிய மும்முரசு அதிர் மதுரை.

52 (அடி, 1.) பருதி வளைத்த - சூரியனாற் சுற்றப்படும். பொதுவற அடிமை செய்திடு - வேறு ஒருவருக்கும் அடிமை செய்யாது அம்பிகைக்கே அடிமைத்திறம் பூணும்; "பொதுவினிற் றீர்த்தென்னை யாண்டோன்" (திருச்சிற். 146.) அலர் வட்டணை - தாமரைமலராகிய வட்ட அணை.

(அடி, 2.) சததளம் - நூறு இதழ். வனிதை - கலைமகள். திருவையும் வனிதையையும் உதவு கடைக்கண். அம்பிகையின் வலக்கண்ணிற் றிருமக

42374 031,1L50,M H7

பதுமமொ டொழுகொளி வளையுநி னளினமு
கத்துமி டற்றுமுறப்
பனிமதி யொடுசுவை யமுதமு நுதலொடு
சொற்குத லைக்கணிநீஇ

முதுதமி ழுததியில் வருமொரு திருமகள்
முத்தம ளித்தருளே
முழுதுல குடையவொர் கவுரியர் குலமணி
முத்தம ளித்தருளே. (கo)

---

௬. வருகைப் பருவம்

(ஆசிரிய விருத்தம்)

53. அஞ்சிலம் போலிட வரிக்குரற் கிண்கிணி
அரற்றுசெஞ் சீறடிபெயர்த்
தடியிடுந் தொறுநின் னலத்தகச் சுவடுபட்
டம்புவி யரம்பையர்கடம்

ளும் இடக்கண்ணிற் கலைமகளும் உதித்தனரென்பர்; "திருமகள் வலக்கண் வாக்கின் சேயிழை யிடக்கண் ஞானப், பெருமக னுதற்க ணகப் பெற்றுவான் செல்வங் கல்வி, அருமைவீ டளிப்பாள் யாவ ளவள்" (திரு விளை. கக: 2.)

(அடி, 1-2.) அடியர் பொருட்டுத் திருவையும் கலைமகளையும் உதவும் மடப்பிடி. அம்பிகையின் அடியார்கள் திருவையும் கல்வியையும் பெறுவ ரென்றபடி.

(அடி, 2-4) அம்பிகையைத் திருமகளாக உருவகம் செய்கின்றார்.

பதுமம் - பத்ம நிதி. வளை - சங்க நிதி. இவை முறையே முகத்திலும் கழுத்திலும் உற்றன. திருமுகத்திற்குத் தாமரையையும் கழுத்திற்குச் சங்கையும் உவமை கூறும் மரபை நினைந்து இங்ஙனம் அமைத்தார். மதி நுதற்கு உவமை. அமுதம் சொல்லுக்கு உவமை. தமிழ் உததி - தமிழ்க் கடல்.

திருமகள் பாற்கடலில் தோற்றிய பொழுது பத்மநிதி, சங்கநிதி, சந்திரன், அமுதம் முதலியன எழுந்தனவாதலின் இங்கே அவற்றில் ஒவ்வொன்றற்கும் ஒவ்வோருறுப்பைக்கூறினர். தனித்தனியே எழுந்த அவற்றைத் தன் திருமேனியின் உறுப்பாகவே கொண்டெழுந்தாளென்பது ஒரு நயம். குலமணி: விளி.

53. (அடி, 1.) சிலம்பு ஒலிட. அரிக்குரல் - தவளை போன்ற குரலையுடைய. அலத்தகச் சுவடு - செம்பஞ்சுக் குழம்பின் அடையாளம். அம்பு வியில்.

மஞ்சுதுஞ் சளகத் திளம்பிறையு மெந்தைமுடி
வளரிளம் பிறையுநாற
மணிநூ புரத்தவிழு மென்குரற் கோவசையும்
மடநடைக் கோதொடர்ந்துன்

செஞ்சிலம் படிபற்று தெய்வக் குழாத்தினொடு
சிறையோதி மம்பின்செலச்
சிற்றிடைக் கொல்கிமணி மேகலை யிரங்கத்
திருக்கோயி லெனவெனெஞ்சக்

கஞ்சமுஞ் செஞ்சொற் றமிழ்க்கூட லுங்கொண்ட
காமர்பூங் கொடிவருகவே
கற்பகா டவியிற் கடம்பா டவிப்பொலி
தயற்கணு யகிவருகவே. (க)

54. குண்டுபடு பேரகழி வயிறுளைந் தீன்றபைங்
கோதையும் மதுரமொழுகும்
கொழிதமிழ்ப் பனுவற் றுறைப்படியு மடநடைக்
கூந்தலம் பிடியுமறுகால்

(அடி, 1-2.) அளகத்து இளம்பிறை - கூந்தலில் அணியும் பிறையென்னும் ஆபரணம். எந்தை - சிவபெருமான். நாற - தோன்ற. அம்பிகையின் திருவடிகளில், பக்தியினால் வணங்கிய அரம்பையர் தலையணியாலும், ஊடலை நீக்கும்பொருட்டு வணங்கிய சிவபெருமான் திருமுடியிலுள்ள பிறையினாலும் உண்டான அடையாளங்கள் பாதச்சுவட்டிலும் தோற்றின. நூபுரம் - சிலம்பு.

(அடி, 3.) (பி - ம்.) 'தெய்வக் குழாத்தொடுஞ்'

(அடி, 2-3.) சிலம்பொலிக்கு அன்னத்தின் ஒலியை உவமை கூறுவர்; அன்னம் சிலம்பொலியைத் தம் இனத்தின் ஒலியென்று நினைத்தும், அம்பிகையின் நடையைக் கற்பதற்கெண்ணியும் தொடர்ந்தது.

(அடி, 4.) கற்பகாடவியின் - கற்பகச் சோலையிலிருத்தலைப்போல. கடம்பாடவி - மதுரை. தேவி அமிர்தக்கடலின் இடையேயுள்ள மணித்தீவில் கற்பகச்சோலையினிடையே திருக்கோயில்கொண்டுள்ளாளென்பது நூற்றுணிபு. இதனைச் **சியாமளாதண்டகம்**, **தக்கயாகப்பரணி** முதலியவற்றால் உணரலாம்.

(முடிபு.) அம்புவியில், பிறை இரண்டும் நாற, தெய்வக் குழாத்தினொடு ஓதிமம் பின்செல, மேகலை இரங்க வருக.

54. (அடி, 1.) குண்டு - பள்ளம். பேரகழி - இங்கே பாற்கடல் (64.) பைங்கோதை - திருமகள். தமிழ்ப் பனுவற்றுறைப் படியும் பிடி - கலைமகள்.

வண்டுபடு முண்டக மனைக்குடி புகச்சிவ
மணங்கமழ விண்டதொண்டர்
மானதத் தடமலர்ப் பொற்கோயில் குடிகொண்ட
மாணிக்க வல்லிவில்வேள்.

துண்டுபடு மதிநுதற் றேகையொடு மளவில்பல
தோல்லுரு வெடுத்தமர்செயும்
தொடுசிலை யெனக்ககன முகடுமுட் டிப்பூந்
துணர்த்தலை வணங்கிநிற்கும்

கண்டுபடு கன்னல்பைங் காடுபடு கூடற்
கலாபமா மயில்வருகவே
கற்பகா டவியிற் கடம்பா டவிப்பொலி
கயற்கணு யகிவருகவே. (உ)

55\. முயல்பாய் மதிக்குழவி தவழ்சூ லடிப்பலவின்
முட்பொதி குடக்கனியொடு
முடவுத் தடந்தாழை முப்புடைக் கனிசிந்த
மோதிநீ ருண்டிருண்ட

(அடி, 2.) முண்டகமனை - செந்தாமரையும் வெண்டாமரையுமாகிய வீடுகள். விண்ட - மலர்ந்த. மானதத் தடமலர்ப் பொற் கோயில் - மனமாகிய பெரிய தாமரைமலராகிய அழகிய கோயிலில்; "என் னெஞ்சக் கஞ்சமுஞ் செஞ்சொற் றமிழ்க்கூட லுங்கொண்ட காமர் பூங்கொடி" என்றார் முன்னைப் பாட்டிலும். மாணிக்கவல்லி : விளி. வில்வேள் - காமன்.

(அடி, 1-2.) திருமகளும் கலைமகளும் வெறுந்தாமரைமலரிற் குடிபுக நீ சிவமணம் கமழும் அடியார் இதயமாகிய தாமரைமலரிற் புகுவாயென்று பாராட்டினர்.

(அடி, 3.) தோகை - இரதி. சிலை - வில்.

(அடி, 4.) கண்டுபடு கன்னல் - கற்கண்டு உண்டாவதற்குக் காரணமான கரும்பு; எழுவாய். காடுபடு - காட்டைப்போல உண்டாகும்; "கரும் பல்லது காடறியாப், பெருந்தண்பணை" (புறநா. கசு : 15-6); "கரும்பலாற் காடொன் றில்லாக் கழனிசூழ் பழன நாடும்" (சீவக. 2902.)

(அடி, 3-4.) மதுரையிலுள்ள கருப்பங்காடு, மன்மதன் பல்வேறு உருவம் எடுத்து இரதியுடன் சேர்ந்து அமர் செய்வதற்கு உதவும் விற்களைப் போல வளர்வதென்றார்.

55\. இச் செய்யுளில் கயல்மீனின் செயல் கூறப்படும்.

(அடி, 1.) சூல் அடிப்பலவு - ஈரப்பலா; சூல் - கருப்பம் (52.) குடக்கனி - குடம்போன்ற பழம். முடவு - வளைவு. தாழை முப்புடைக் கனி - தேங்காய்.

புயல்பாய் படப்பைத் தடம்பொழில்க ளன்றியேழ்
பொழிலேயு மொருங்கலைத்துப்
புறமூடு மண்டச் சுவர்த்தல மிடித்தப்
புறக்கடன் மடுத்துழக்கிச்

செயல்பாய் கடற்றானை செங்களங் கொளவம்மை
திக்குவிச யங்கொண்டநாள்
தெய்வக் கயற்கொடிக டிசைதிசை யெடுத்தெனத்
திக்கெட்டு முட்டவெடிபோய்க்

கயல்பாய் குரம்பணை பெரும்பணைத் தமிழ்மதுரை
காவலன் மகள்வருகவே
கற்பகா டவியிற் கடம்பா டவிப்பொலி
கயற்கண்ணு யகிவருகவே. (ரு)

56. வடம்பட்ட நின்றுணைக் கொங்கைக் குடங்கொட்டு
மதுரவமு துண்டுகடைவாய்
வழியும்வெள் ளருவியென நிலவுபொழி கிம்புரி
மருப்பிற் பொருப்பிடித்துத்

தடம்பட்ட பொற்றாது சிந்துரங் கும்பத்
தலத்தணிவ தொப்பவப்பிச்
சலராசி யேழுந் தடக்கையின் முகந்துபின்
தானநீ ரானிரப்பி

(அடி, 2.) படப்பை - தோட்டக்கூறு. ஏழ் பொழில் - ஏழு தீவு; ஏழு சோலைகளென்று பொருள் கொள்ளுதலும் பொருந்தும். அண்டச் சுவர்த் தலம் - வானமாகிய சுவர். அப்புறக் கடல் - பெரும்புறக் கடல்.

(அடி, 3.) தானை - அம்பிகையின் படை (30.) செங்களம் கொள - இரத்தத்தாற் சிவந்த போர்க்களத்தைத் தனதாக்கிக் கொள்ள; இது வெற்றி பெற்றார் செய்யும் செயல். கயற்கொடிகள் - அம்பிகையின் துவசங்கள். எடுத்தென - எடுத்தாற்போல. வெடிபோய் - துள்ளிச் சென்று.

(அடி, 4.) கயல் : எழுவாய். குரம்பு அணை - கரைகள் பொருந்திய. பெரும்பணை - பெரிய வயல். மதுரை காவலன் - பாண்டியன்; தொகுத்தல்.

(முடிபு.) கயல், சிந்த மோதி அலைத்து இடித்து மடுத்து உழக்கி வெடி போய்ப் பாயும் பணையென்க.

56. இச் செய்யுளில் விநாயகக் கடவுளின் திருவிளையாடல் கூறப்படும்.

(அடி, 1.) வடம் - முத்து வடம். மதுரவமுது - இனிய பால். கொம்பின் ஒளிக்குப் பால் உவமை. கிம்புரி - தந்தத்தில் அணியப்படும் பூண்.

(அடி, 2.) பொற்றாதை அப்பி. சலராசி - கடல். தானநீர் - மதநீர்.

முடம்பட்ட மதியங் குசப்படை யெனக்ககன
முகடுகை தடவியடுமீன்
முத்தம் பதித்திட்ட முகபடா மெனவெழு
முகிற்படா நெற்றிசுற்றும்
கடம்பட்ட சிறுகட் பெருங்கொலைய மழவிளங்
களிறீன்ற பிடிவருகவே
கற்பகா டவியிற் கடம்பா டவிப்பொலி
கயற்கண் யகிவருகவே. (௬)

57. தேனொழுகு கஞ்சப் பொலன்சீ றடிக்கூட்டு
செம்பஞ்சி யின்குழம்பாற்
றெள்ளமு திறைக்கும் பசுங்குழவி வெண்டிங்கள
செக்கர்மதி யாக்கரைபொரும்
வானொழுகு துங்கத் தரங்கப் பெருங்கங்கை
வாணிநதி யாச்சிவபிரான்
மகுடகோ டீரத் தடிச்சுவ டழுத்தியிடு
மரகதத் கொம்புகதிர்கால்
மீனொழுகு மாயிரு விசும்பிற் செலுங்கடவுள்
வேழத்தின் மத்தகத்து
வீற்றிருக் குஞ்சே யிழைக்கும் பசுங்கமுகு
வெண்கவரி வீசும்வாசக்

(அடி, 3.) மதியை அங்குசமாகிய தன் ஆயுதமென்று எண்ணி. மேகத்திற்கு முகபடாமும் நட்சத்திரங்களுக்கு அதிற் பதித்த முத்துக்களும் உவமை.

(அடி, 4.) களிறு - விநாயகரை. (பி - ம்.) 'கன்றீன்ற'

57. (அடி, 1-2) சிவபெருமான் அம்பிகையின் ஊடலை நீக்கும் பொருட்டு வணங்கும்போது அவள் திருவடியிலுள்ள செம்பஞ்சுக் குழம்பு பட்டு இறைவன் திருவடியிலுள்ள பிறையும் கங்கையும் செந்நிறத்தை அடைதல் கூறப்படும்.

கஞ்சம்போன்ற சீறடி. பசுங்குழவி வெண்டிங்கள் (499.) செக்கர்மதி - சிவப்புநிறமுள்ள சந்திரன். வாணி நதி செந்நிறமுடையது. மகுட கோடீரம் - மகுடமாகிய சடை. மரகதக் கொம்பு : விளி.

(அடி, 3) சேயிழை - இந்திராணி. (பி - ம்.) "வேழத்து' கமுகமரம் தன் பாளையால் இந்திராணிக்கு வெண்கவரி வீசியது.

காணெழுகு தடமலர்க் கடிபொழிற் கூடல்வளர்
கவுரியன் மகள்வருகவே
கற்பகா டவியிற் கடம்பா டவிப்பொலி
கயற்கணு யகிவருகவே. (ரு)

(வேறு)

58. வடக்குங் குமக்குன் றிரண்டேந்தும்
வண்டன் மகளிர் சிறுமுற்றில்
வாரிக் குவித்த மணிக்குப்பை
வானு றடைப்ப வழிபிழைத்து
நடக்குங் கதிர்பொற் பரிசிலா
நகுவெண் பிறைகைத் தோணியா
நாண்மீன் பரப்புச் சிறுமிதப்பா
நாப்பண் மிதப்ப நாற்கோட்டுக்
கடக்குஞ் சரத்தின் மதநதியும்
கங்கா நதியு மெதிர்கொள்ளக்
ககன வெளியுங் கற்பகப்பூங்
காடுங் கடந்து கடல்சுருங்க
மடுக்குந் திரைத்தண் டுறைவைகை
வளநாட் டரசே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே. (சா)

(அடி, 4.) கவுரியன் - பாண்டியன்.

58. வையைநதியின் வெள்ளநீர் வானளாவி வரும் நிலை சொல்லப் படும்.

(அடி, 1.) குங்குமக் குன்று - நகில்கள். வண்டல் மகளிர் - சிற்றில் விளையாடல் புரியும் பெண்கள். முற்றில் - சிறுசுளகால். வானுறு அடைப்ப - ஆகாய வீதியை அடைத்தலினால். வழி பிழைத்து - செல்லும் கதி மாறி.

(அடி, 2.) கதிர் - சூரியன். பொற்பரிசிலா - பொன்னலாகிய பரிசிலாக வும்; பிறை கைத்தோணியா - பிறை சிறுதோணியாகவும் (433, 534.) நாண்மீன் - நட்சத்திரம். மிதப்பு - ஒரு மரத் தோணி.

(அடி, 3.) குஞ்சரம் - ஐராவதம்.

(அடி, 4.) (பி - ம்.) 'மடக்கும்'

(முடிபு.) குப்பை அடைப்பப் பிழைத்து நடக்கும் கதிர்; கதிர் பரிசிலா கவும் பிறை தோணியாகவும் மீன்பரப்பு மிதப்பாகவும் மிதப்ப, மதநதியும் கங்காநதியும் எதிர்கொள்ளக் கடந்து கடல் சுருங்க மடுக்கும் வைகை யென்க.

59\. சுண்ணந் திமிர்ந்து தேனருவி
துளைந்தா டறுகாற் றும்பிபசுந்
தோட்டுக் கதவந் திறப்பமலர்த்
தோகை குடிபுக் கோகைசெயும்
தண்ணங் கமலக் கோயில்பல
சமைத்த மருதத் தச்சன்முழுத்
தாற்றுக் கமுகு நாற்றியிடும்
தடங்கா மணப்பந் தரில்வீக்கும்
விண்ணம் பொதிந்த மேகபடாம்
மிசைத்தூக் கியபன் மணிக்கொத்து
விரிந்தா லெனக்கா னிமிர்ந்துதலை
விரியுங் குலைநெற் கற்றைபல
வண்ணம் பொலியும் பண்ணைவயல்
மதுரைக் கரசே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே. (எ)

60\. தகரக் குழலி னறையுநறை
தருதீம் புகையுந் திசைக்களிற்றின்
தடக்கை நாசிப் புழைமடுப்பத்
தளருஞ் சிறுநுண் மருங்குல்பெருஞ்

59\. மருத நிலவளம் கூறப்படும்.

(அடி, 1.) திமிர்ந்து - பூசி. (பி - ம்.) 'சுண்ணந்துதைந்து' தோடு கதவம் - இதழாகிய கதவு. மலர்த்தோகை - திருமகள்.

(அடி, 2.) மருதநிலமாகிய தச்சன். முழுத்தாற்றுக் கமுகு - நன்ருக முதிர்ந்த காய்க்குலையையுடைய கமுகமரங்களை. நாற்றி - தொங்கக் கட்டி. பந்தர்க்காலில் கமுக மரத்தைக் குலையுடன் கட்டுதல் வழக்கமாதலின் இவ்வாறு கூறினர். தடங்கா மணப்பந்தர் - பெரிய சோலையாகிய மணப்பந்தல். (பி - ம்.) 'காவணப்பந்தர்' வீக்கும் - கட்டிய. (பி - ம்.) 'புந்தரிற் கட்டும்'

(அடி, 3.) மேக படாம் - மேகமாகிய மேற்கட்டி (வி. பா. அருச்சுனன் தீர்த்த. 51); படாம் - இங்கே மேற்கட்டி. நெற்கற்றைக்கு மேற்கட்டியிலிருந்து நாலவிட்ட மணிக்கொத்து உவமை.

60\. (அடி, 1.) தகரம் - மயிர்ச் சாந்து. நறை - இயற்கை மணம். நறைதரு தீம்புகை - அகிற்புகை முதலியன; நறை - நறைக்கொடியுமாம் (சீவக. 131, ந.) கையாகிய நாசி; "மூரி யேழ்கட லுந்தரு மூக்கின" (தக்க. 273) என்பதன் குறிப்பைப் பார்க்க. "பரிமள கந்தம், மருப்புடைப் பொருப்பேர் மாதிரக் களிற்றின் வரிக்கைவாண் மூக்கிடை மடுப்ப" (கம்ப. நிந்தனைப். 2.) மருங்குல் - இடை; எழுவாய்.

சிகரக் களபப் பொம்மன்முலைத்
தெய்வ மகளிர் புடையிரட்டும்
செங்கைக் கவரி முகந்தெறியும்
சிறுகாற் கொசிந்து குடிவாங்க

முகரக் களிவண் டடைகிடக்கும்
முளரிக் கொடிக்குங் கலைக்கொடிக்கும்
முருந்து முறுவல் விருந்திடுபுன்
மூர னெடுவெண் ணிலவெறிப்ப

மகரக் கருங்கட் செங்கனிவாய்
மடமான் கன்று வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே. (அ)

61. தொடுக்குங் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்
சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்

தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே யெறிதரங்கம்

(அடி, 1-2.) புடை - பக்கத்தில். இரட்டும் - மாறி வீசும். சிறு கால் - மெல்லிய காற்று. ஒசிந்து - தளர்ந்து. குடிவாங்க - வேற்றிடம் பார்க்க. மருங்குல் சிறு காற்றுக்கு ஒசிதல்: "ஈக்காற்றுக் காற்ரு விடை" (தனிப்.)

(அடி, 3.) முகரம் - ஒலி. முளரிக் கொடி - திருமகள். கலைக் கொடி - கலைமகள். முருந்து - மயிலிறகின் அடிக்குருத்து. முறுவல் - பல். புன் மூரல் - புன்னகை.

(அடி, 4.) மகரக் கருங்கண் : 19.

(முடிபு.) நறையும் புகையும் மடுப்ப, மருங்குல் ஒசிந்து குடிவாங்க, முறுவல் நிலவெறிப்ப வருக வென்க.

61. (அடி, 1.) கடவுட் பழம்பாடல் - வேதம் (1 : க, 44, 431-5.) நறை - தேன். துறைத் தீந்தமிழ் - அகமும் புறமுமாகிய துறைகளையுடைய இனிய தமிழ். அகந்தை - ஆணவம்.

(அடி, 2.) தொழும்பர் - அடியார். "தொண்டர் மானதத் தடமலர்ப் பொற்கோயில் குடிகொண்ட மாணிக்கவல்லி" என்ருர் முன்னும் (55.) சிமயம் - சிகரம். பொருப்பென்றதற் கேற்பப் பிடி யென்ருர்.

உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் றிருவுள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம்வாய்

மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே. (௯)

62. பெருந்தே னிறைக்கு நறைக்கூந்தற்
பிடியே வருக முழுஞானப்
பெருக்கே வருக பிறைமௌலிப்
பெம்மான் முக்கட் சுடர்க்கிடுநல்

விருந்தே வருக மும்முதற்கும்
வித்தே வருக வித்தின்றி
விளைந்த பரமா னந்தத்தின்
விளைவே வருக பழமறையின்

குருந்தே வருக வருள்பழுத்த
கொம்பே வருக திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளம்
குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்

மருந்தே வருக பசுங்குதலை
மழலைக் கிளியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே. (௰)

(அடி, 3.) ஒருவன் - சிவபெருமான். உயிரோவியம்: "அத்தன் மனத்தெழு தியவுயி ரோவியம்" (80.) மதுகரம் - வண்டு.

(அடி, 4.) குழலாகிய காடு : 702.

62. (அடி, 1.) (பி - ம்) 'உறைக்கும்', 'இரைக்கும்'

(அடி, 1-2.) முக்கட் சுடர்க்கிடு விருந்து (44-8.) மூக்கண்ணாகிய சுடர். மும்முதல் - பிரமன் முதலிய மும்மூர்த்திகள். (பி - ம்.) 'விளைக்கும் பரமானந்தத்தின்'

(அடி, 3.) குருந்து - குருத்து. (பி - ம்.) 'அளிபழுத்த'

(அடி, 3-4.) பிறவிப்பிணிக்கோர் மருந்து : 22.

எ. அம்புலிப் பருவம்

63. கண்டுபடு குதலைப் பசுங்கிளி யிவட்கொரு
கலாபேத மென்னநின்னைக்
கலைமறைகண் முறையிடுவ கண்டோ வலர்தொண்
கலாநிதி யெனத்தெரிந்தோ

வண்டுபடு தெரியற் றிருத்தாதை யார்மரபின்
வழிமுத லெனக்குறித்தோ
வளர்சடை முடிக்கெந்தை தண்ணறுங் கண்ணியா
வைத்தது கடைப்பிடித்தோ

குண்டுபடு பாற்கடல் வருந்திருச் சேடியொடு
கூடப் பிறந்ததோர்ந்தோ
கோமாட்டி யிவணின்னை வம்மெனக் கொம்மெனக்
கூவிடப் பெற்றாயுனக்

கண்டுபடு சீரிதன் றுதலா லிவளுடன்
அம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலீ யாடவாவே. (க)

---

63. அம்பிகை சந்திரனிடம் அன்பு பூணுவதற்குரிய காரணங்கள் சொல்லப்படும்.

(அடி, 1.) கண்டு - கற்கண்டு. படு: உவமவுருபு. அம்பிகையும் சிவபெருமானைப் போலவே எட்டு உருவங்களை யுடையளாதலின் அவ்வுருவங்களில் சந்திரன் ஒருவனென்பது குறித்து அவனை ஒரு கலாபேதமென்றார். முறையிடுவ - முறையிடுதல். கலாநிதி - கலைகளுக்கு இருப்பிடம்; கலை - வித்தை, கிரணம்.

(அடி, 2.) தாதையார் - பாண்டியர். வழிமுதல் - குலமுதல்வன் (71); "செருமாண் டென்னர் குலமுத லாதலின், அந்தி வானத்து வெண்பிறை தோன்றி" (சிலப். ச : 22-3.) எந்தை - சிவபெருமான். கண்ணி - தலையிற் சூடும் மாலை; "மாதர்ப் பிறைக்கண்ணி யானை" (தே.)

(அடி, 3.) குண்டு - ஆழம். திருச்சேடி - திருமகளாகிய தோழி. வம்மென - வாவென (72.) கொம்மென - விரைவாக.

(அடி, 4.) அண்டுபடு - பொருந்தும். ஆணிப்பொன் - உரையாணிப் பொன்,

64. குலத்தோடு தெய்வக் குழாம்பிழிந் தூற்றிக்
குடித்துச் சுவைத்துமிழ்ந்த
கோதென்று மழல்விடங் கொப்புளிக் கின்றவிரு
கோளினுச் சிட்டமென்றும்

கலைத்தோடு மூடிக் களங்கம் பொதிந்திட்ட
கயரோகி யென்றுமொருநாள்
கண்கொண்டு பார்க்கவுங் கடவதன் றெனவும்
கடற்புவி யெடுத்திகழவிட்

புலத்தோடு முடுமீன் கணத்தோடு மோடுநின்
போல்வார்க்கு மாபாதகம்
போக்குமித் தலமலது புகலில்லை காண்மிசைப்
பொங்குபுனல் கற்பகக்கா

டலைத்தோடு வைகைத் துறைப்படி மடப்பிடியொ
டம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலீ யாடவாவே. (உ)

---

64. சந்திரனுடைய குறைகள் நீங்குமென்பது கூறப்படும்.

(அடி, 1.) தெய்வக்குழாம் - தேவர்களின் தொகுதி; தேவர்கள் சந்திர கிரணத்தை உண்பரென்றல் மரபு; "பிறைவளர் நிறைமதி யுண்டி, அணி மணிப் பைம்பூ ணமரர்க்கு", "உலகுபயம் பகர வோங்குபெரும் பக்கம், வழியது பக்கத் தமர ருண்டி, மதி" (பரி. க : 52-3, கக : 34-6.) கோது - சக்கை. இருகோள் - இராகு கேதுக்கள். உச்சிட்டம் - எச்சில்.

(அடி, 2.) கலைத்தோடு - கலைத்தொகுதி; ஆடையின் தொகுதியென்பது வேறு பொருள்; கலை : சிலேடை (66.) களங்கம் - சந்திரனிடத்துள்ள கறுப்பு. கயரோகி - க்ஷயரோகத்தை யுடையவன்; என்றது உடல் தேய்வது கருதிக் கூறியது. ஒருநாள் - விநாயக சதுர்த்தி; அன்று சந்திரனைப் பார்த்தல் கூடாதென்பர்; "சிங்கமா மதியிடைச் சேர்முன் பக்கத்துத், தங்குநஞ் சதுர்த்தியிற் றன்னைக் காணற்க, மங்குல்வான் முன்புபோன் மற்றை நாளெலாம், அங்கவ னுருவினை யாருங் காண்கவே." (விநாயக. சந்திரன் அனுட்டித்த. 21.)

(அடி, 3.) ஒருவனுடைய மாபாதகத்தை ஸ்ரீ சோமசுந்தரக்கடவுள் இங்கே போக்கியருளினர்; இதனை மாபாதகம் தீர்த்த திருவிளையாடலால் உணரலாகும். புகல் - அடைக்கலத் தானம்.

65. கீற்றுமதி யெனநிலவு தோற்றுபருவத்திலொளி
கிளிர்நுதற் செவ்விவவ்விக்
கெண்டைத் தடங்கணு ரெருவிட் டிறைஞ்சக்
கிடந்தது முடைந்தமுதம்விண்

டூற்றுபுது வெண்கலை யுடுத்துமுழு மதியென
உதித்தவம யத்துமம்மை
ஒண்முகத் தொழுகுதிரு வழகைக் கவர்ந்துகொண்
டோடினது நிற்கமற்றை

மாற்றவ ளொடுங்கேள்வர் மௌலியி லுறைந்ததும்
மறந்துனை யழைத்தபொழுதே
மற்றிவள் பெருங்கருணை சொற்றிடக் கடவதோ
மண்முழுதும் விம்முபுயம்வைத்

தாற்றுமுடி யரசுதவு மரசிளங் குமரியுடன்
அம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலி யாடவாவே. (ரு)

66. விண்டலம் பொலியப் பொலிந்திடுதி யேலுனது
வெம்பணிப் பகைவிழுங்கி
விக்கிடக் கக்கிடத் தொக்கிடர்ப் படுதிவெயில்
விரியுஞ் சுடர்ப்பருதியின்

---

65. சந்திரனிடத்து அம்பிகைக்குக் கோபம் உண்டாதற்குரிய காரணங்கள் சில கூறப்படும்.

(அடி, 1.) கீற்றுமதி - பிறை. ஸஸ்யாதிபதியென்று மதி கூறப்படுமாதலின் அவனை எருவிட்டிறைஞ்சுதல் மரபென்பர் (189.)

(அடி, 2.) கலை - கிரணம், ஆடை; சிலேடை.

(அடி, 3.) மாற்றவள் - கங்கை.

(அடி, 4.) ஆற்று - தாங்கும். முடியரசு - மலயத்துவச பாண்டியன்.

66. சந்திரன் அடையும் துன்பங்கள் சில கூறப்படும்.

(அடி, 1,2.) வெம்பணிப்பகை - வெவ்விய பாம்புகளாகிய பகை; இராகு கேதுக்கள் (65) தொக்கு - சேர்ந்து. அமாவாசையில் சூரியனும் சந்திரனும் சேர்தலை நினைந்து, சூரிய மண்டலம் புக்க காலையில் ஒளி மழுங்குமென்றூர்; "இந்துவோ டிரவி கூட்ட மமாவாசை" (சூடா. தெய்வப்.) எந்தை - சிவபெருமான். மாசுணம் - அவர் திருமுடியிலணிந்த பாம்பு.

மண்டலம் புக்கனை யிருத்தியெனி னுள்ளொளி
மழுங்கிட வழுங்கிடுதிபொன்
வளர்சடைக் காட்டெந்தை வைத்திடப் பெறுதியேல்
மாசுணஞ் சுற்றவச்சம்

கொண்டுகண் டுஞ்சா திருப்பது மருப்பொங்கு
கோதையிவள் சீறடிகணின்
குடர்குழம் பிடவே குமைப்பதும் பெறுதியெங்
கோமாட்டி பாலடைந்தால்

அண்டபகி ரண்டமு மகண்டமும் பெறுதியால்
அம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலீ யாடவாவே. (௬)

67. எண்ணில்பல புவனப் பெருந்தட்டை யூடுருவி
இவள்பெரும் புகழ்நெடுநிலா
எங்கணு நிறைந்திடுவ தங்கதனின் மெள்ளநீ
எள்ளளவு மொண்டுகொண்டு

வெண்ணிலவு பொழிவது கிடைத்தனை மடுத்திவள்
விழிக்கடை கொழித்தகருணை
வெள்ளந் திளைத்தாடு பெற்றியாற் றண்ணளி
விளைப்பதும் பெற்றனைகொலாம்

மண்ணிலொண் பைங்கூழ் வளர்ப்பது னிடத்தம்மை
வைத்திடுஞ் சத்தியேகாண்
மற்றொருசுதந்தர நினக்கென விலைக்கலை
மதிக்கடவு ணீயுமுணர்வாய்

(அடி, 3.) குமைப்பது - உதைப்பது ; இஃது ஊடற்கட் செயல். துஞ்சா திருப்பதும் குமைப்பதும் பெறுதி.

(அடி, 4.) அண்டமும் பகிரண்டமுமாகிய அகண்டமும்; அகண்டம் - முழுவதும்.

67. (அடி, 1.) தட்டு - அடுக்கு.

(அடி, 3.) பைங்கூழ் - பசிய பயிர். சந்திரன் ஸஸ்யாதிபதியாதலின் பைங்கூழை வளர்ப்பதாகக் கூறினர் (71.)

அண்ணலங் களியானை யரசர்கோ மகளுடன்
அம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலீ யாடவாவே. (ரு)

68. முன்பும்ப ரரசுசெய் பெரும்பாவ முங்கோவ
மூரிமாத் தொடர்சாவமும்
மும்மைத் தமிழ்ச்செழியன் வெப்பொடு கொடுங்கூனும்
மோசித்த வித்தலத்தின்

தன்பெருந் தன்மையை யுணர்ந்திலைகொல் சிவராச
தானியாய்ச் சீவன்முத்தித்
தலமுமாய்த் துவாதசாந் தத்தலமு மானதித்
தலமித் தலத்தடைதியேல்

மன்பெருங் குரவற் பிழைத்தபா வமுமற்றை
மாமடிக ளிடுசாவமும்
வளரிளம் பருவத்து நரைதிரையு முதிர்கூனும்
மாற்றிடப் பெறுதிகண்டாய்

அன்பரென் புருகக் கசிந்திடு பசுந்தேனொ
டம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலீ யாடவாவே. (சு)

---

68. மதுரையின் சிறப்பும் அதனை அடைந்தால் சந்திரன் அடையும் பேறுகளும் கூறப்படும்.

(அடி, 1.) உம்பர் அரசு - இந்திரன். (பி - ம்) 'முன்பெரும் பாவி செய்' மூரிமா-வலியையுடைய யானையாகிய ஐராவதம். சாவம் - சாபம். (பி - ம்.) 'சாபமும்' மும்மைத் தமிழ் - முத்தமிழ். செழியன் - கூன் பாண்டியன். வெப்பு - சுரம். மோசித்த - நீக்கிய (கந்தர்கலி : கஉ0.)

(அடி, 2.) சிவராசதானி: "சீர்கொண்ட கூடற் சிவராச தானி", "திருமதுரை, தானே சிவராச தானி" (தமிழ்விடு. 1,265-6) சீவன் முத்தித் தலம், துவாதசாந்தத்தலம் : திருவிளை. தலவிசேடப். 21.

(அடி, 3.) குரவன் - பிரகஸ்பதி. மாமடிகள் - மாமனார் (548.) தக்கன் இடு சாபம் : சந்திரன் உரோகிணியிடத்து மிக்க விருப்புடையவனாகியிருந்து மற்ற மனைவியரைப் புறக்கணித்தமையின், கலை குறைகவென்று தக்கன் சாபமிட்டானென்பது வரலாறு (கந்த். சந்திரசாபப்.)

(அடி, 4) அன்பர் என்புருகக் கசிந்திடு தேன் : 76.

69. கும்பஞ் சுமந்தமத வெள்ளிநீர் கொட்டும்
கொடுங்களி றிடும்போர்வையான்
குடிலகோ டீரத் திருந்துகொண் டங்கலார்
கொய்தளிர்க் கைவருடவும்

செம்பஞ் சுறுத்தவும் பதைபதைத் தாரழற்
சிகையெனக் கொப்புளிக்கும்
சீறடிகள் கன்றிச் சிவந்திடச் செய்வதும்
திருவுளத் தடையாதுபொற்

றம்பஞ் சுமந்தீன்ற மானிட விலங்கின்
தனிப்புதல்வ னுக்குவட்டத்
தண்குடை நிழற்றுநினை வம்மென வழைத்தனள்
தழைத்திடு கழைக்கரும்பொன்

றம்பஞ் சுடன்கொண்ட மகரக் கொடிக்கொடியொ
டம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலீ யாடவாவே. (எ)

70. துளிதூங்கு தெள்ளமுத வெள்ளருவி பொழியுநின்
தொன்மரபு தழையவந்து
தோன்றிடுங் கௌரியர் குலக்கொழுந் தைக்கண்டு
துணைவிழியு மனமுநின்று

---

69. அம்பிகை சந்திரன்பாற் சினங்கொள்ளுதற்குரிய ஏதுக்கள் இருப்பவும் அவள் அவற்றை மறந்து அழைத்தனளென்ற செய்தி சொல்லப்படும்.

(அடி, 1.) போர்வையான் - சிவபிரான். குடிலகோடீரம் - வட்டமான சடை.

(அடி, 1-2.) அங்கலார் - தேவியின் தோழிகள். இருந்துகொண்டு செய்வதும் என்க. அடையாது - கொள்ளாமல்.

(அடி, 3.) மானிட விலங்கு - நரசிங்கம். புதல்வன் - காமன்.

(அடி, 3-4.) கரும்புவில்லும் பஞ்சபாணமும் அம்பிகைக்கு உரியன (75.)

70. சந்திரனுடைய இழிவு கூறப்படும்.

(அடி, 1.) கௌரியர் - பாண்டியருடைய; குலக்கொழுந்து - அம்பிகை.

களி தூங்க வளவளாய் வாழாம லுண்ணமுது
கலையொடு மிழந்துவெறுமட்
கலத்திடு புதுக்கூழி னுக்கிரவு பூண்டொரு
களங்கம்வைத் தாயிதுவலால்

ஒளி தூங்கு தெளிவிசும் பினினின்னொ டொத்தவன்
ஒருத்தன் கரத்தின்வாரி
உண்டொதுக் கியமிச்சி னள்ளிருளி லள்ளியுண்
டோடுகின் றாயென்செய்தாய்

அளி தூங்கு ஞிமிறெழுந் தார்க்குங் குழற்றிருவொ
டம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலீ யாடவாவே. (அ)

71. மழைக்கொந் தளக்கோதை வம்மென்ற வளவினீ
வந்திலை யெனக்கடுகலும்
வாண்முகச் செல்விக் குடைந்தொதுங் கினவனெதிர்
வரவொல்கி யோபணிகள்கோள்

இழைக்குங்கொல் பின்றொடர்ந் தெனவஞ்சி யோதாழ்த்
திருந்தனன் போலுமெனயாம்
இத்துணையு மொருவாறு தப்புவித் தேம்வெகுளின்
இனியொரு பிழைப்பில்லைகாண்

(அடி, 2.) அமுது கலையொடும் இழந்து - அமிர்தத்தைக் கிரணங்களோடு இழந்து; உணவையும் உடையையும் இழந்தென்பது வேறுபொருள். மட்கலத்திடு புதுக்கூழினுக்கு இரவு பூண்டு - பூமியில் உண்டாகின்ற புதிய பயிர்களின் பொருட்டு இராக்காலத்தின் தலைமையைப் பூண்டு; மண்பாண்டத்தில் இடும் புதிய கூழுணவின் பொருட்டு இரத்தலை மேற்கொண்டென்பது வேறு பொருள். களங்கம் - கறுப்பு, வசை. (பி - ம்.) 'வைத்தாயிதல்லால்"

(அடி, 3.) ஒருத்தன் - சூரியன். கரம் - கிரணம், கை. நள்ளிருள் - இரவு. சூரியனிடத்திலிருந்து பெற்றுச் சந்திரன் ஒளியை வீசுகின்றானென்பராதலின் இங்ஙனம் கூறினர்.

(அடி, 4.) அளியும் ஞிமிறும் ஆர்க்கும்.

71. (அடி, 1.) கொந்தளக் கோதை - கூந்தலையுடைய அம்பிகை; கோதை - மாலைபோல்வாள்; உவமவாகுபெயர். (பி - ம்.) 'வம்மினென்றளவினீ' கடுகல் - கோபித்தல். ஒல்கியோ - தளர்ந்தோ. பணிகள் - இராகு கேதுக்கள்.

(அடி, 2.) பிழைப்பு - தப்பும் வகை.

தழைக்குந் துகிற்கொடி முகிற்கொடி திரைத்துமேற்
றலம்வளர் நகிற்கொடிகளைத்
தாழ்குழலு நீவிநுதல் வெயர்வுந் துடைத்தம்மை
சமயமிது வென்றலுவலிட்
டழைக்குந் தடம்புரிசை மதுரைத் துரைப்பெணுடன்
அம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலீ யாடவாவே. (கூ)

72. ஏடகத் தெழுதாத வேதச் சிரத்தர
சிருக்குமிவள் சீறடிகணின்
இதயத் தடத்தும் பொலிந்தவா திருவுளத்
தெண்ணியன் றேகபடமா
நாடகத் தைந்தொழி னடத்தும் பிரான்றெய்வ
நதியொடு முடித்தல்பெற்றாய்
நங்கையிவ டிருவுள மகிழ்ச்சிபெறி னிதுபோலொர்
நற்றவப் பேறில்லைகாண்

(அடி, 3.) துகிற்கொடி : எழுவாய். முகிற்கொடி - மேகத்தின் ஒழுங்கினை. திரைத்து - சுருட்டி. மேற்றலம் - விண்ணுலகம். நகிற் கொடிகள் - தெய்வ மகளிர். அம்மை சமயம் - அம்பிகை தரிசனம் அளித்தற்குரிய செவ்வி. அலுவலிட்டு - வேலையில் ஏவி.

(அடி, 4.) துரைப் பெண் : 29.

72. (அடி, 1.) வேதச்சிரம் - உபநிடதம். சந்திரனிடத்து அம்பிகை எழுந்தருளியிருப்பதாக நூல்கள் கூறும்; "மதி மண்டலத் தமுதமய மாயம்மை தோன்றுகின்றதும்" (95); 'சந்த்ரமண்டல மத்யகா' என்பது லலிதா ஸஹஸ்ர நாமம் (240.)

(அடி, 1-2.) கபடமா நாடகத்து ஐந்தொழில் நடத்தும் பிரான் - புறத்தார்க்குப் புலப்படாத உட்கருத்தையுடைய தன் நடனத்தில் ஆக்கல் முதலிய ஐந்தொழிலையும் புரியும் சிவபெருமான்; நாடகம் - கூத்தென்னும் துணையாய் நின்றது. சிவபிரானது திருநடனக்கோலம் ஐந்தொழிலையும் நடத்துதற்குரிய அடையாளமாக நிலவுவதென்பது **உண்மை விளக்கம்** முதலிய நூல்களால் அறியப்படும். (**பி - ம்.**) 'ஐந்தொழி னடிக்கும்பிரான்'

மாடகக் கடைதிரித் தின்னரம் பார்த்துகிர்
வடிம்புதை வருமங்கலார்
மகரயாழ் மழலைக்கு மரவங்க ணுண்டுகில்
வழங்கக் கொழுங்கோங்கு தூங்
காடகப் பொற்கிழி யவிழ்க்குமது ரைத்திருவொ
டம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலீ யாடவாவே. (கூ0)

அ. அம்மானைப் பருவம்

73. கரைக்குங் கடாமிரு கவுட்குட முடைந்தூற்று
களிறுபெரு வயிறுதூர்ப்பக்
கவளந் திரட்டிக் கொடுப்பதென வுஞ்சூழ்ந்தொர்
கலைமதிக் கலசவமுதுக்

கிரைக்கும் பெருந்தேவர் புன்கண் டுடைத்திட
எடுத்தமுத கலசம்வெவ்வே
றீந்திடுவ தெனவுமுழு முத்திட் டிழைத்திட்ட
எறிபந்தி னிரையென்னவும்

(அடி, 3.) மாடகம் - முறுக்காணி. திரித்து - முறுக்கி. உகிர் - நகம். யாழ்மழலைக்கு-யாழ்ப்பாட்டாகிய மழலைக்கு. மரவம்-வெண்கடம்பு; அதன் மலர் துகில்போல்வது (சீவக. 1558.)

(அடி, 3-4.) கோங்கின் மலருக்குப் பொன் உவமை. ஆடகப் பொற் கிழி - பொன் முடிப்பு.

73. (அடி, 1.) கரைக்கும் - ஒழுகவிடும். கவுளாகிய குடம்; கவுள் - கன்னம். (பி - ம்.) 'உடைத்தூற்றும்' களிறு: விநாயகர். தூர்ப்ப-நிறைப்ப. மதியாகிய கலசம்.

(அடி, 2.) இரைக்கும் - மோகமுறும் (தக்க. 129, உரை.) புன்கண் - துன்பத்தை. ஒரு கலசத்தை விரும்புபவர்களுக்கு வெவ்வேறு கலசம் ஈந்தி டுவதென்பது ஒரு நயம். பந்தின் நிரை - பந்தின் வரிசை.

விரைக்குந் தளிர்க்கைக் கொழுந்தா மரைத்துஞ்சி
மீதெழுந் தார்த்தபிள்ளை
வெள்ளோ திமத்திரளி தெனவுங் கரும்பாறை
மீமிசைச் செஞ்சாந்துவைத்

தரைக்குந் திரைக்கைவெள் ளருவிவை கைத்துறைவி
அம்மானை யாடியருளே
ஆகங் கலந்தொருவர் பாகம் பகுந்தபெண்
அம்மானை யாடியருளே. (க)

74. திங்கட் கொழுந்தைக் கொழுந்துபடு படர்சடைச்
செருகுதிரு மணவாளன்மேற்
செழுமணப் பந்தரி லெடுத்தெறியு மமுதவெண்
திரளையிற் புரளுமறுகாற்

பைங்கட் சுரும்பென விசும்பிற் படர்ந்தெழும்
பனிமதி மிசைத்தாவிடும்
பருவமட மானெனவெ னம்மனைமி னம்மனைப்
படைவிழிக் கயல்பாய்ந்தெழ

வெங்கட் கடுங்கொலைய வேழக்கு ழாமிதென
மேகக் குழாத்தைமுட்டி
விளையாடு மழகளிறு கடைவாய் குதட்டமுகை
விண்டவம் பைந்துகோத்த

(அடி, 3.) விரைக்கும் - மணம் வீசும். கையாகிய தாமரைமலரில் துஞ்சி. ஓதிமத்திரள் - அன்னத்தின் தொகுதி. அம்பிகை அன்னத்தை வளர்த்தல் : 83.

(அடி, 1-3.) அம்மானைக்குச் சோற்றுருண்டையும் அமுதகலசமும் முத்துப்பந்தும் அன்னமும் உவமைகள்.

(அடி, 4.) திரைக்கை - அலையாகிய கை. அருவியென்றது இங்கே நீரோட்டத்தை. (பி - ம்.) 'பாகம் புகுந்த', 'பாகம் பகிர்ந்த'

74. (அடி, 1-2.) அம்பிகை அம்மானை விளையாடும்போது அவ்வம் மானைகளின்மேல் திருவிழிகள் பாய்தலுக்குச் சில உவமைகள் கூறப்படும்.

அமுதவெண்டிரளை - சோற்றுருண்டை. (பி - ம்.) 'படர்ந்தவெண்பனி மதி' அம்மனை-தாய், அம்மானை. அம்மானைக்குச் சோற்றுருண்டையும் மதியும், அதிற் பாய்கின்ற அம்பிகையின் திருவிழிக்கு வண்டும் மானும் உவமைகள்.

(அடி, 3.) மேகக்குழாத்தை யானைக்கூட்டமென்றெண்ணி. இது : தொகுதி யொருமை. மழகளிறு - விநாயகக் கடவுள்.

அங்கட் கரும்பேந்து மபிடேக வல்லிதிரு
அம்மானை யாடியருளே
ஆகங் கலந்தொருவர் பாகம் பகுந்தபெண்
அம்மானை யாடியருளே. (உ)

75. கள்ளூறு கஞ்சக் கரத்தூறு சேயொளி
கலப்பச் சிவப்பூறியும்
கருணைப் பெருக்கூற வமுதூறு பார்வைக்
கடைக்கட் கறுப்பூறியும்
நள்ளூறு மறுவூ றகற்றுமுக மதியில்வெண்
ணகையூறு நிலவூறியும்
நற்றாள் வம்மனையொர் சிற்குணத் தினைமூன்று
நற்குணங் கதுவல்காட்ட
உள்ளூறு களிதுளும் பக்குரவ ரிருவீரும்
உற்றிடு துவாதசாந்தத்
தொருபெரு வெளிக்கே விழித்துறங் குந்தொண்டர்
உழுவலன் பென்புருகநெக்
கள்ளூற வுள்ளே கசிந்தூறு பைந்தேறல்
அம்மானை யாடியருளே
ஆகங் கலந்தொருவர் பாகம் பகுந்தபெண்
அம்மானை யாடியருளே. (ங)

(அடி, 3-4.) அம்பு ஐந்தும் கரும்புவில்லும் அம்பிகைக்கு உரியன; 70. அக்கரும்பைக் கண்டு விநாயகர் வாய் குதட்ட. குதட்ட ஏந்தும் என்க.

75. அம்பிகையின் கரம், நகை என்பவற்றால் அம்மானையின் நிறம் வேறுபடுதல் கூறப்படும்.

(அடி, 1-2.) பார்வைக்கடைக்கண் கறுப்பு-பார்வையையுடைய கடைக் கண்ணின் கறுப்பு. நள் ஊறு-நடுவிலே அமைந்த. மறுவாகிய ஊறு. சிற் குணம் - சித்தினது குணம்; சித்து - ஆன்மா. மூன்று நற்குணம் - சத்துவ ராஜஸ தாமஸ குணங்கள். அம்மானை பலநிறம் தோய்தல் : 82.

(அடி, 3.) விழித்துறங்கும் தொண்டர் : "விழித்துறங்கும், உபாயந் தெரிவீர்" (பாசவதைப். 29); "விழித்த கண்குரு டாத்திரி வீரரும் பலரால்" (திருவிளை. ௫அ : 38.)

(அடி, 3-4.) தொண்டர் என்புருக ஊறு தேறல் : 69.

76. குலைபட்ட காந்தட் டளிர்க்கையிற் செம்மணி
குயின்றவம் மனைநித்திலம்
கோத்தவம் மனைமுன் செலப்பின் செலுந்தன்மை
கோகனக மனையாட்டிபாற்

கலைபட்ட வெண்சுடர்க் கடவுடோய்ந் தேகவது
கண்டுகொண் டேபுழுங்கும்
காய்கதிர்க் கடவுளும் பின்றொடர்வ தேய்ப்பக்
கறங்கருவி தூங்கவோங்கும்

மலைபட்ட வாரமும் வயிரமும் பிறவுமா
மாமணித் திரளைவாரி
மறிதிரைக் கையா லெடுத்தெறிய நாற்கோட்டு
மதகளிறு பிளிறியோடும்

அலைபட்ட வைகைத் துறைச்சிறை யனப்பேடை
அம்மானை யாடியருளே
ஆகங் கலந்தொருவர் பாகம் பகுந்தபெண்
அம்மானை யாடியருளே. (சு)

---

76. அம்பிகை மாணிக்க அம்மானையும் முத்திழைத்த அம்மானையும் ஆடுதல் கூறப்படும்.

(அடி, 1.) குலைபட்ட காந்தள்-குலையாகப் பூத்த காந்தண் மலர். காந்தட் கை, தளிர்க்கை யென்க. செம்மணி குயின்ற-மாணிக்கம் பதித்த. செம்மணி குயின்ற அம்மனை முத்தாலாகிய அம்மனைக்குப் பின்னே சென்றது. கோகனக மனையாட்டி - தாமரைமலராகிய மனைவி.

(அடி, 2.) வெண்சுடர்க் கடவுள் - சந்திரன். காய்கதிர்க் கடவுள் - சூரியன். ஏய்ப்ப - ஒப்ப.

(அடி, 1-2.) அம்பிகையின் திருக்கரத்திற்குத் தாமரையும், மாணிக்க வம்மானைக்குச் சூரியனும், முத்திழைத்த அம்மானைக்குச் சந்திரனும் உவமைகள்.

(அடி, 3.) மலை பட்ட ஆரம் - மலையில் உண்டான முத்து. (பி - ம்.) 'பிறவுமா மணித்திரளை வாரி வாரி' நாற்கோட்டு மதகளிறு - ஐராவதம். (பி - ம்.) 'மழகளிறு'

(அடி, 4.) அனப்பேடை : விளி.

(முடிபு.) ஏய்ப்ப ஆடியருள் என்க.

77. தமரான நின்றுணைச் சேடியரி லொருசிலர்
தடக்கையி னெடுத்தாடுநின்
தரளவம் மனைபிடித் தெதிர்வீசி வீசியிட
சாரிவல சாரிதிரியா

நிமிராமு னம்மனையொ ராயிர மெடுத்தெறிய
நிரைநிரைய வாய்க்ககனமேல்
நிற்கின்ற தம்மைநீ பெற்றவகி லாண்டமும்
நிரைத்துவைத் ததுகடுப்ப

இமிரா வரிச்சுரும் பார்த்தெழப் பொழிலூ
டெழுந்தபைந் தாதுலகெலாம்
இருள்செயச் செய்துநின் சேனைபராகமெனும்
ஏக்கமள காபுரிக்கும்

அமரா பதிக்குஞ்செய் மதுரா புரித்தலைவி
அம்மானை யாடியருளே
ஆகங் கலந்தொருவர் பாகம் பகுந்தபெண்
அம்மானை யாடியருளே. (ரு)

78. உயிரா யிருக்கின்ற சேடியரின் மலர்மீ
துதித்தவ ளெதிர்த்துநின்னோ
டொட்டியெட் டிப்பிடித் திட்டவம் மனைதேடி
ஓடியா டித்திரியநீ

---

77. அம்பிகை சேடியரோடு அம்மானையாடுதல் கூறப்படும்.

(அடி, 1.) சிலர் பிடித்து வீசி வீசித் திரியா ; திரியா - திரிந்து.

(அடி, 2.) நிரை - வரிசை. நிற்கின்றது - நிற்கும் காட்சி. நிரைத்து வைத்தது - வரிசைப்படுத்தி வைத்த செயலை,

(அடி, 3.) இமிரா - ஒலித்து. (பி - ம்.) 'ஆர்த்தெழும்' அம்பிகை பல அம்மானைகளை வீசி ஆடியதனால் வண்டுகள் அஞ்சி ஆர்த்தெழுந்தன ; அவை யெழவே அவற்றின்மேற் படிந்திருந்த பூந்தாது எங்கும் பரந்து செறிந்தது. சேனைபராகம்-சேனையின் புழுதி. (பி - ம்.) 'எக்கரளகாபுரிக்கும்'

(அடி, 3 - 4.) பூந்தாதின் செறிவை அம்பிகை திக்குவிசயம் செய்த காலத்தில் அவள் சேனைக்குமுன் எழுந்த தூளிப்படலம் போன்றதெனக் கருதி அளகாபுரியினரும் அமராபதியினரும் அஞ்சினர்.

78. அம்பிகை அம்மனையாடுதலைக் கண்டு சிவபிரான் களித்தல் கூறப்படும்.

(அடி, 1.) மலர் மீது உதித்தவள் - திருமகள். ஒட்டி - பந்தயம் கூறி. உதித்தவள் திரிய.

பெயரா திருந்துவிளை யாடுவது கண்டெந்தை
பிறைமுடி துளக்கமுடிமேற்
பெருகுசுர கங்கைநுரை பொங்கலம் மானைய்ப்
பெண்கொடியு மாடன்மான
வெயரா மனம்புழுங் கிடுமமரர் தச்சனும்
வியப்பச் செயுந்தவளமா
மேடையுந் தண்டரள மாடமுந் தெண்ணிலா
வீசத் திசைக்களிறெலாம்
அயிரா பதத்தினை நிகர்க்குமது ரைத்தலைவி
அம்மானை யாடியருளே
ஆகங் கலந்தொருவர் பாகம் பகுந்தபெண்
அம்மானை யாடியருளே. (சு)

(வேறு)

79. முத்தம முத்திய வம்மனை கைம்மலர்
முளரிம ணங்கமழ
மொய்குழல் வண்டுநின் மைவிழி வண்டின்
முயங்கி மயங்கியிடக்
கொத்து மணித்திர ளிற்செயு மம்மனை
குயிலின்மி ழற்றியநின்
குழலினி சைக்குரு கிப்பனி தூங்கு
குறுந்துளி சிந்தியிட

(அடி, 2.) எந்தை - சிவபிரான். துளக்க - அசைக்க. சிவபெருமான் முடிதுளக்கியதால் அவர் சிரத்தின்மேலுள்ள கங்கையில் நுரைபொங்கியது; அந்நுரை அம்மானை போலத் தோற்றுதலின் கங்கையும் அம்மானையாடும் தோற்றத்தை அளித்தது. அப்பெண்கொடி-கங்கை. (பி - ம்.) 'பொங்குவ தம்மனையையப்பெண்'

(அடி, 3.) தவளம் - வெண்மை.

79. முத்து, மாணிக்கம், பவளம் என்பவற்றால் இயற்றிய அம்மனைகளை அம்பிகை ஆடுதல் கூறப்படும்.

(அடி, 1.) கையிலிருந்து சென்ற அம்மானை தாமரையின் மணத்தை வீச அதன்மேல் அந்த மணம் பற்றி வண்டு மொய்த்தது. அம்பிகையின் திருக்கரம் தாமரையின் நறுமணத்தை யுடையதென்றபடி. "மைவிழி வண்டின் - கரியவிழியாகிய வண்டைப்போல; கண்கள் அம்மனையை நோக்கினவாதலின் இங்ஙனம் கூறினர்.

(அடி, 2.) மணி-மாணிக்கம். குழலினிசை-வேய்ங்குழல் போன்ற இசை. அம்மனையாடுவார் அதற்குரிய இசைப்பாட்டுப் பாடுவர்; "கருந்தடங்கண்

வித்துரு மத்திலி ழைத்தவு நின்கை
விரற்பவ ளத்தளிரின்
விளைதரு மொள்ளொளி திருடப் போவது
மீள்வது மாய்த்திரிய
அத்தன் மனத்தெழு தியவுயி ரோவியம்
ஆடுக வம்மனையே
அழகு தழைந்தகல் யாண சவுந்தரி
ஆடுக வம்மனையே. (எ)

80. விளரிமி ழற்றளி குமுறுகு ழற்கொடி
வீசிய வம்மனைபோய்
விண்ணி னிரைத்தெழு வதுகக னந்திரு
மேனிய தானவருக்
கிளநில வுமிழ்பரு முத்தின் கோவை
யெடுத்தவர் திருமார்புக்
கிடுவ கடுப்பவு மப்பரி சேபல
மணியி னியற்றியிடும்

ணூர்கழல்பந் தம்மானைப் பாட்டயருங் கழுமலமே" (தே. திருஞா.) அம்பிகை பாடும் பாட்டுக்கு மாணிக்கப்பந்து உருகியதென்றபடி. இசைக்குக் கல்லுருகு மென்பதுபற்றி இச்செய்தியை யமைத்தார்; "வாழொப்பி லாதவன் சேயொப்பி லாத மழவதிரை, ஆழிக் கடல்விட்டு நீபாடுங் காலத் தரிசெலுங் கால், நீழற் கவுத்துவ நீத்துச்செல் வானந்த நீண்மணிதான், காழொப் பினுநின் னிசைகேட்குங் காற்கரைந் தேகுமென்றே" (தமிழ்நா.); "சுருக்கா விசையின் மணிகரைந்து சோர்ந்து, திருக்கா தரவுகனந் தீர" (திருக்கழுக் குன்றத்து உலா, 102.)

(அடி, 3.) வித்துருமம் - பவளம். (பி - ம்.) 'போயது மீள்வதுமாய்த்' (அடி, 4.) உயிரோவியம் : 62.

80. அம்பிகை முத்தினாலும் பலநிறமணிகளாலும் செய்த அம்மனை களை ஆடுதல் கூறப்படும்.

(அடி, 1.) விளரி - ஒரு பண். குமுறுதல் - ஒலித்தல். கொடியாகிய நீ. வீசிய அம்மனை யென்றது இங்கே முத்தினாலாகிய அம்மனைகளை. நிரைத் தெழுவது - வரிசையாகி எழுதல். (பி - ம்.) 'விண்ணிளிரைத்திடுவது.' ககனம் திருமேனியதானவர் - ஆகாசமே திருமேனியாக உள்ள சிவபெருமான்; அது : பகுதிப்பொருள் விகுதி (83); "வேத மொழிவிசும்பு மேனி" (திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம், 2.)

வளரொளி விம்மிய வம்மனை செல்வது
வானவி லொத்திடவும்
மனனெக் குருகப் பரமானந்த
மடுத்த திருத்தொண்டர்க்.

களிகனி யத்திரு வருள்கனி யுங்கனி
ஆடுக வம்மனையே
அழகு தழைந்தகல் யாண சவுந்தரி
ஆடுக வம்மனையே. (அ)

81. கைம்மல ரிற்பொலி கதிர்முத் தம்மனை
நகைமுத் தொளிதோயக்
கண்டவர் நிற்கப் பிறர்சிலர் செங்கைக்
கமலச் சுடர்கதுவச்

செம்மணி யிற்செய் திழைத்தனவெனவும்
சிற்சிலர் கட்கடையின்
செவ்வியை வவ்விய பின்கரு மணியிற்
செய்தன கொல்லெனவும்

தம்மன மொப்ப வுரைப்பன மற்றைச்
சமயத் தமைவுபெறூர்
தத்தமி னின்று பிதற்றுவ பொருவத்
தனிமுதல் யாமென்பார்க்

(அடி, 2-3.) பலமணி - பல நிறமணிகள். பல நிறமணிகளாகிய அம்மனைகள் மேலே செல்லுகையில் வானவில்லின் தோற்றத்தை உண்டாக்கின.

(அடி, 4.) அம்பிகையைக் கனியென்றல் : 113.

81. அம்பிகை முத்தாலாகிய அம்மனையாடும்போது அவள் நகை, கை, கண் ஆகியவற்றின் ஒளி தோய்கையில் அது நிறம்மாறிக் காட்டுதலால் பிறருக்கு உண்டாகும் மயக்கம் கூறப்படும்.

(அடி, 1.) நகையாகிய முத்தின் ஒளியை. நிற்க - ஒன்றும் கூறுமல் நிற்ப.

(அடி, 1-3.) கையின் செந்நிறம் பாய்ந்து சிவப்பாகத் தோற்றக் கண்டார் அவ்வம்மனைகள் மாணிக்கத்தாற் செய்யப்பட்டன வெனவும், கண்ணின் கருநிறம் பாய்ந்து கரியனவாகத் தோற்றக் கண்டார் நீலமணியாலாயின வெனவும் கூறினர். அங்ஙனம் கூறுவார் கூற்றுக்கள் புறச்சமயத்திலுள்ளார் தத்தம் சமயக் கொள்கைகளே சிறந்தனவென்று கூறுவதை ஒத்தன ; " தத்தங் கருத்துக் கமைந்தபடி சாற்றிச் சாற்றி முழுமாயச்

கம்மனை யாயவர் தம்மனை யானவள்
ஆடுக வம்மனையே
அழகு தழைந்தகல் யாண சவுந்தரி
ஆடுக வம்மனையே. (கூ)

82. ஒள்ளொளி மரகத மும்முழு நீலமும்
ஒண்டர ளத்திரளும்
ஒழுகொளி பொங்க விழைத்திடு மம்மனை
ஒருமுன் றடைவிலெடாக்
கள்ளவிழ் கோதை விசும்புற வீசுவ
கண்ணுதல் பாற்செலநின்
கையில் வளர்த்த பசுங்கிளி யும்வளர்
காமர் கருங்குயிலும்
பிள்ளைவெ ளோதிம மும்முறை முறையாற்
பெருகிய காதலைமேற்
பேச விடுப்ப கடுப்ப வணைத்தொரு
பெடையோ டரசவனம்

சலதி மூழ்கித் தடுமாறுஞ் சமயத்தவர்போற் றலைமயங்கும்" (406); "சமய வாதிக டத்த மதங்களே, அமைவ தாக வரற்றி மலைந்தனர்" (திருவா.)

(அடி, 3-4.) தனிமுதல் யாமென்பார் - சிவபிரான். அம்மனை - தாய். சத்திதத்துவத்தினின்றும் சதாசிவதத்துவம் தோன்றுதலின் அம்பிகையைச் சிவபிரானுக்குத் தாயாகக் கூறினர்; "கனக மார் கவின்செய் மன்றில், அனக நாட கற்கெம் மன்னை, மனைவிதாய் தங்கை மகள்" (514); "இமவான் மகட்குத், தன்னுடைக் கேள்வன் மகன் றகப்பன்"(திருவா. திருப்பொற். 13); "தவளத்த நீறணி யுந்தடந் தோளண்ண றன்னொருபால், அவளத்த னாமக னுந்தில்லையான்" (திருச்சிற். 112); "சத்தி யீன்ற சதாசிவம்" (திருமந்திரமாலை); "சத்திதான் சிவத்தை யீன்றும்" (சிவஞா. சித்தி.) அம்மனையாய்ப் பின் அவர் தம்மனை ஆனவள்; தம்மனை - மனைவி; "அம்மனை தம்மனையா" (634.)

82. மரகதம், நீலம், முத்து என்பவற்றாலாகிய அம்மனைகளை அம்பிகை வானில் வீசி ஆடுதல் சிவபிரானிடத்துக் கிளியையும் குயிலையும் அன்னத்தையும் தூது விடுப்பதை ஒக்குமென்பர்.

(அடி, 1.) ஒள்ளொளி - மிக்க ஒளி. அடைவில் - முறையாக. எடா - எடுத்து.

(அடி, 2.) கோதையாகிய நீ. விசும்பு இறைவன் திருமேனியாதலின் அங்கே வீசும் அம்மனைகள் அவன்பால் தூது செல்வன போன்றன.

(அடி, 1-3.) மரகத அம்மனைக்குக் கிளியும், நீலமணியாலாகிய அம்மனைக்குக் குயிலும், முத்தாலாகிய அம்மனைக்கு அன்னமும் உவமைகள்.

அள்ளல் வயற்றுயின் மதுரைத் துரைமகள்
ஆடுக வம்மனையே
அழகு தழைந்தகல் யாண சவுந்தரி
ஆடுக வம்மனையே. (கூ०)

கூ நீராடற் பருவம்

(ஆசிரிய விருத்தம்)

83. வளையாடு வண்கைப் பொலன்சங் கொடும்பொங்கு
மறிதிரைச் சங்கோலிட
மதரரிக் கட்கயல் வரிக்கய லொடும்புரள
மகரந்த முண்டுவண்டின்

கிளையாடு நின்றிருக் கேசபா ரத்திெனடு
கிளர்சைவ லக்கொத்தெழக்
கிடையாத புதுவிருந் ததிர்கொண்டு தத்தமிற்
கேளிர்க டழீஇக்கொண்டெனத்

தளையாடு கறையடிச் சிறுகட் பெருங்கைத்
தடங்களி றெடுத்துமத்தத்
தவளக் களிற்றிெனடு முட்டவிட் டெட்டுமத
தந்தியும் பந்தடித்து

பேச - பேசுதற்கு. விடுப்ப - விடுத்தல். (பி - ம்.) ‘முறை முறையா’; ‘பேசி விடுப்ப’ அம்பிகை அம்மனை யாடுதல் தூது பேச விடுப்பதை யொத்தது.

(அடி, 4.) அள்ளல் - சேறு. துரைமகள் - அரசி.

(முடிபு.) பேச விடுப்ப கடுப்ப ஆடியருள் என்க.

83. (அடி, 1.) வளை - கையிலுள்ள சங்க ரேகை. பொலன் சங்கு - ான் வளையல். ஒலிட - முழங்க. கட்கயல் - கண்ணுகிய கயல். வரிக்கயல்: நரில் உள்ளது. மகரந்தம் - தேன்.

(அடி, 2.) கேச பாரம் - கூந்தற் ெறுகுதியாகிய சுமை. (பி - ம்) ‘கேச பாசம்’ சைவலக்கொத்து-கொடிப்பாசியின் தொகுதி. கேளிர்கள்-உறவினர்.

(அடி, 3.) தளை - சங்கிலி. கறை அடி - உரல்போன்ற அடி. (பி - ம்.) ‘மற்றத் தவளக் களிற்றிெனடு’ தவளக் களிறு - ஐராவதம். எட்டு மததந்தி- அட்ட திக்கயங்கள்.

விளையாடு வைகைத் தடந்துறை குடைந்துபுது
வெள்ளநீ ராடியருளே
விடைக்கொடி யவர்க்கொரு கயற்கொடி கொடுத்தகொடி
வெள்ளநீ ராடியருளே. (௯)

84. நிரைபொங் கிடுஞ்செங்கை வெள்வளை கலிப்பநகை
நிலவுவிரி பவளம்வெளிற
நீலக் கருங்குவளை செங்குவளை பூப்பவறல்
நெறிகுழற் கற்றைசரியத்
திரைபொங்கு தண்ணந் துறைக்குடைந் தாடுவ
செழுந்தரங் கக்கங்கைநுண்
சிறுதிவலை யாப்பொங்கு மானந்த மாக்கடல்
திளைத்தாடு கின்றதேய்ப்பக்
கரைபொங்கு மறிதிரைக் கையாற் றடம்பணைக்
கழனியிற் கன்னியர்முலைக்
களபக் குழம்பைக் கரைத்துவிட் டள்ளற்
கருஞ்சேறு செஞ்சேறதாய்

(அடி, 4.) சிவபெருமான் சுந்தரபாண்டியராகிய பொழுது அம்பிகை தன் அரசையும் கயற்கொடியையும் அவருக்கு அளித்தனள்.

84. நீராடுதலால் அம்பிகையின் உறுப்புக்களில் உண்டாகும் வேறுபாடுகள் கூறப்படும்.

(அடி, 1.) கலிப்ப - ஒலிக்க. பவளம் - வாயிதழ். நீலக் கருங்குவளை செங்குவளை பூப்ப - கரிய கண்கள் செந்நிறத்தைபடைய ; 505. அறல் - கருமணல்.

(அடி, 2.) ஆடுவ - ஆடுதல். சிவபிரானது அளவை நோக்குகையில் கங்கை சிறுதிவலையாகு மென்க. ஆனந்த மாக்கடல் - சிவபெருமான். அவர் திருச்சடையில் கங்கை ஒரு திவலைபோல் அடங்கியதாதலின் இங்ஙனம் கூறினர் ; "புன்னு னித்தரு பனியென வரநதி புனிதன், சென்னி யிற்கரந் தொளிதா" (கம்ப. அகலிகைப். 56.) (பி - ம்.) 'சிறு துவலை'

(அடி, 1-2.) அம்பிகை வையைத் துறையில் ஆடுதலால் உண்டான வேறுபாடுகள் சிவபெருமானோடு அளவளாவுங் காலத்து உண்டானவற்றை ஒத்தன ; "செய்ய வாய்வெளுப் பக்கண் சிவப்புற, நெய்ய ராக மழியத் துகினெகத், தொய்யின் மாமுலை மங்கையர் தோய்தலால், பொய்கை காதற் கொழுநரும் பொன்றதே" (கம்ப. நீர்விளையாட்டுப். 19.) நதித்துறையில் ஆடுதல் கடலில் ஆடியதை ஒத்ததென்றது ஒரு நயம்.

(அடி, 3.) பணையாகிய கழனி.

விரைபொங் கிடத்துங்க வேகவதி பொங்குபுது
வெள்ளநீ ராடியருளே
விடைக்கொடி யவர்க்கொரு கயற்கொடி கொடுத்தகொடி
வெள்ளநீ ராடியருளே. (உ)

85. பண்ணுறு கிளிமொழிப் பாவைநின் றிருமேனி
பாசொளி விரிப்பவந்தண்
பவளக் கொடிக்காமர் பச்சிளங் கொடியதாய்ப்
பருமுத்த மரகதமதாய்த்
தண்ணுறு மல்லற் றுறைச்சிறை யனங்களி
தழைக்குங் கலாமஞ்ஞையாய்ச்
சகலமு நின்றிருச் சொருபமென் றோலிடும்
சதுர்மறைப் பொருள்வெளியிடக்
கண்ணுறு குழலியர் குடக்கொங்கை பொங்குசெங்
களபமுங் கத்தூரியும்
கப்புரமு மொக்கக் கரைத்தோடி வாணியும்
காளிந்தி யுங்கங்கையாம்
விண்ணுறு மளவலாய் விளையாடு புதுவைகை
வெள்ளநீ ராடியருளே
விடைக்கொடி யவர்க்கொரு கயற்கொடி கொடுத்தகொடி
வெள்ளநீ ராடியருளே. (௩)

(அடி, 4.) வேகவதி - வைகையாறு.

85. (அடி, 1-2.) அம்பிகையினது திருமேனியின் மரகதச்சோதியால் எல்லாப் பொருள்களும் பச்சைநிறம் பெற்றன வென்பர்.

பாசொளி - பச்சை ஒளி. (பி - ம்.) 'பாசொளி பரப்பு' பவளக்கொடி நீராடுந் துறையிலுள்ளது. கலாமஞ்ஞை : 7. தேவியின் பச்சையொளியால் யாவும் பசிய நிறம் அடைதல் (தக்க. 166.) 'ஸர்வம் சக்திமயம்' என்பது வேதத்தின் கூற்றென்பர்; "அனைத்துந்தன் மயமெனுஞ் சுருதிகரி யாவைத் தும்" (362); தக்க. 116, உரையையும், குறிப்பையும் பார்க்க.

(அடி, 3-4.) குடம்போன்ற கொங்கை. செங்களபம் - செஞ்சந்தனக் குழம்பு. கத்தூரி கருநிறமுடையது. கப்புரம்-பச்சைக் கருப்பூரம்; "கப்புரப் பசுந்திரை" (சீவக. 197.) வாணி - சரஸ்வதி நதி; இது செந்நிற முடையது. காளிந்தி - யமுனே; இது கருநிறமுடையது. கங்கை வெண்ணிறமுடையது. அளவலாய் - கலந்ததை ஒத்து. (பி-ம்.) 'அளவளாய்' வைகை செஞ்சந்தனக்

86. தூங்குசிறை யறுகா லுறங்குகுழ னின்றுணைத்
தோழியர்கண் மேற்குங்குமம்
தோயும் பனித்துறைச் சிவிறிவீ சக்குறுந்
துளியெம் மருங்குமோடி
வாங்குமலை வில்லியார் விண்ணுரு நனைத்தவர்
வனைந்திடு திகம்பரஞ்செவ்
வண்ணமாச் செய்வதச் செவ்வான வண்ணரொடு
மஞ்சள்விளை யாடலேய்ப்பத்
தேங்குமலை யருவிநெடு நீத்தத்து மாசுணத்
திரள்புறஞ் சுற்றியீர்ப்பச்
சினவேழ மொன்றொரு சுழிச்சுழலன் மந்தரம்
திரைகடன் மதித்தன்மானும்
வீங்குபுனல் வைகைத் தடந்துறை குடைந்துபுது
வெள்ளநீ ராடியருளே
விடைக்கொடி யவர்க்கொரு கயற்கொடி கொடுத்தகொடி
வெள்ளநீ ராடியருளே. (௬)

87. துளிக்கும் பனித்திவலை சிதறக் குடைந்தாடு
துறையிற் றுறைத்தமிழொடும்
தொன்மறை தெளிக்குங் கலைக்கொடி யெனுந்துணைத்
தோழிமூழ் கிப்புனன்மடுத்

குழம்பால் வாணிநதியையும், கத்தூரியால் யமுனையையும், பச்சைக் கருப்புரத்தால் கங்கையையும் ஒத்தது. புதுவைகை: புதுமை, நீருக்கு அடை. (பி - ம்.) 'வைகைபுது வெள்ள நீர்''

86. (அடி, 1.) தூங்கு சிறை - செறிந்த சிறகுகள்; "தூங்கிருள்" (சீவக. 310.) அறுகால் - வண்டு. குழல் - குழலையுடைய நீ. குங்குமம் - குங்குமம் கலந்த நீரை; பெருங். க. 41 : 17 - 8. துறையிற் சிவிறியால் வீச; சிவிறி - நெடுந்துருத்தி யென்னும் நீர்வீசு கருவி.

(அடி, 2.) மலை வில்லியார் - சிவபெருமான். விண்ணுரு - ஆகாய மாகிய திருவுருவம் (81, 83, 89.) திகம்பரம் = திக் அம்பரம் - திசையாகிய ஆடை. அது நனைதலாவது வெளிமுழுவதும் நீர்த்துளி செறிதல். மஞ்சள் விளையாடல் - திருமணக் காலத்தில் ஒருவர்மேல் ஒருவர் மஞ்சள்நீரை வீசி விளையாடுதல்.

(அடி, 3.) (பி - ம்.) 'மழை யருவி' மாசுணம் - பெரும்பாம்பு. ஒரு சுழிச் சுழல்வ - ஒரு சுழியின்கண் சுழலுதல். திரைகின்ற கடலை. யானைக்கு மந்தரமலை உவமை.

87. (அடி, 1.) துறைத் தமிழ் : 62. கலைக் கொடி - கலைமகள். புனல் மடுத்து - நீரிற் புகுந்து.

தொளிக்கும் பதத்துமற் றவளென வனப்பெடையை
ஓடிப் பிடிப்பதம்மை
ஒண்பரி புரத்தொனியு மடநடையும் வெளவின
துணர்ந்துபின் றொடர்வதேய்ப்ப

நெளிக்குந் தரங்கப் பெருங்கங்கை யுடனொட்டி
நித்திலப் பந்தாடவும்
நிரைமணித் திரளின் கழங்காட வுந்தன்
நெடுந்திரைக் கையெடுத்து

விளிக்கும் பெருந்தண் டுறைக்கடவுள் வைகைநெடு
வெள்ளநீ ராடியருளே
விடைக்கொடி யவர்க்கொரு கயற்கொடி கொடுத்தகொடி
வெள்ளநீ ராடியருளே. (ரு)

(வேறு)

88. துங்க முலைப்பொற் குடங்கொண்டு
தூநீர் நீந்தி விளையாடும்
துணைச்சே டியர்கண் மேற்பசும்பொற்
சுண்ண மெறிய வறச்சேந்த

அங்கண் விசும்பி னின்குழற்காட்
டறுகாற் சுரும்ப ரெழுந்தார்ப்ப
தையன் றிருமே னியிலம்மை
அருட்கட் சுரும்பார்த் தெழன்மானச்

(அடி, 2.) பதத்து - சமயத்தில். மற்று: அசைநிலை. அவளென - அக் கலைமகளென்று எண்ணி. அனப்பெடையைப் பிடிப்பது; பிடிப்பவள் அம் பிகை. (பி - ம்.) 'அனப்பேடை யோடிப்' பரிபுரத் தொனி - சிலம்பொலி. அன்னத்தின் ஒலி அம்பிகையின் சிலம்பொலிக்கும், அதன் நடை அவள் நடைக்கும் உவமை (53.)

(அடி, 3.) (பி - ம்.) 'தரங்கத் தடங்கங்கை' ஒட்டி - பந்தயங் கூறி. திரையாகிய கை.

(அடி, 3-4.) கங்கையை விளிக்கும்.

88. (அடி, 1.) நகிலாகிய குடம். குடத்தைத் தழுவிக்கொண்டு நீந்து தல் வழக்கம் (100.) எறிய - அம்பிகை எறிய. அறச் சேந்த - முற்றும் சிவந்த.

(அடி, 2.) ஐயன் திருமேனி - ஆகாயம் (81, 83, 87.)

செங்க ணிளைஞர் களிக்காமத்
தீமூண் டிடக்கண் டிளமகளிர்
செழுமென் குழற்கூட் டகிற்புகையாற்
றிரள்காய்க் கதலி பழுத்துநறை
பொங்கு மதுரைப் பெருமாட்டி
புதுநீ ராடி யருளுகவே
பொருநைத் துறைவன் பொற்பாவாய்
புதுநீ ராடி யருளுகவே. (சு)

89. இழியும் புனற்றண் டுறைமுன்றில்
இதுவெம் பெருமான் மண்சுமந்த
இடமென் றலர்வெண் கமலப்பெண்
இசைப்பக் கசிந்துள் ளுருகியிரு
விழியுஞ் சிவப்ப வானந்த
வெள்ளம் பொழிந்து நின்றனையால்
மீண்டும் பெருக விடுத்தவற்கோர்
வேலை யிடுதன் மிகையன்றே
பிழியு நறைக்கற் பகமலர்ந்த
பிரச மலர்ப்பூந் துகண்மூழ்கும்
பிறைக்கோட் டயிரா பதங்கூந்தற்
பிடியோ டாடத் தேனருவி

(அடி, 3.) காய்க் கதலி - கதலிக்காய். வாழைக்காயைப் புகையூட்டிப் பழுக்கவைத்தல் வழக்கம்; இதுபோன்ற பல விஷயங்கள் **உத்பலபரிமளம்** என்னும் வடநூலிற் கூறப்பட்டுள்ளன என்பர். நறை - தேன்.

(அடி, 4.) பொருநை - தாமிரபன்னி.

89. (அடி, 1.) துறைமுன்றில் இது - துறைப்பரப்பாகிய இது. வெண் கமலப் பெண் - கலைமகள். இசைப்ப - நினக்குச் சொல்ல.

(அடி, 2) ஆனந்த வெள்ளம் - உவகைக் கண்ணீர்ப் பெருக்கு. மீண்டும் பெருக விடுத்து - மறுப்டியும் நின் கண்ணீரால் வையைநதி பெருகும்படி செய்து. அவற்கு - சோமசுந்தரக் கடவுளுக்கு. ஓர் வேலை யென்றது மண் சுமத்தலை; வேலை - தொழில் (691.) மிகையன்றே - மிகையல்லவா.

(அடி, 3.) (பி - ம்.) 'அயிராவதம்' துகளில் மூழ்கிய யானை அதுபோக அருவியாடுதல் இயல்பு.

பொழியும் பொழிற்கூ டலிற்பொலிவாய்
புதுநீ ராடி யருளுகவே
பொருநைத் துறைவன் பொற்பாவாய்
புதுநீ ராடி யருளுகவே. (எ)

90. மறிக்குந் திரைத்தண் புனல்வைகை
விண்ட லிடுமண் கூடைகட்டி
வாரிச் சுமந்தோ ரம்மைதுணை
மணிப்பொற் குடத்திற் கரைத்தூற்றும்
வெறிக்குங் குமச்சே றெக்கரிடும்
விரைப்பூந் துறைமண் பெறினொருத்தி
வெண்பிட் டிடவு மடித்தொருவன்
வேலை கொளவும் வேண்டுமெனக்
குறிக்கு மிடத்திற் றடந்தூநீர்
குடையப் பெறினக் கங்கைதிருக்
கோடீ ரத்துக் குடியிருப்பும்
கூடா போலும் பொலன்குவட்டுப்
பொறிக்குஞ் சுறவக் கொடியுயர்த்தாய்
புதுநீ ராடி யருளுகவே
பொருநைத் துறைவன் பொற்பாவாய்
புதுநீ ராடி யருளுகவே. (அ)

---

90. (1-3.) அம்பிகை நீராடுங்கால் அவள் நகிலிலுள்ள குங்குமக் குழம்பு கரைந்து கரையிற் படிதலால் அந்த வண்டல்மண்ணைச் சுமப்ப தற்குச் சிவபெருமான் விரும்புவாரென்பதும், அடிக்கடி அம்பிகை நீராடின் சிவபெருமான் அடுத்தடுத்துச் சுமக்க நேருமென்பதும், அதனுல் கங்கைக்கு வருத்தமுண்டாமாதலின் அவர் திருமுடிமேல் இருத்தலை அவள் விரும்பா ளென்பதும் இங்கே கூறப்படும் கருத்துக்கள்.

(அடி, 1) சுமந்தோர் - சோமசுந்தரக் கடவுள்; எழுவாய். (பி - ம்.) 'வாரிச் சுமந்தோர்க்கம்மை' குடம் - நகில்.

(அடி, 2.) வெறி - நறுமணம். (பி - ம்.) 'எக்கலிடும்'; 'போலொருத்தி' ஒருத்தி - செம்மனச் செல்வி யென்னும் பிட்டு வாணிச்சி. ஒருவன் - அரிமர்த் தன பாண்டியன். வேலை கொள்ளுதல் - உடைப்பை அடைக்க ஏவுதல். பெறின் வேண்டுமென இயைக்க.

(அடி, 2 - 3.) என குறிக்கும் இடம் - என்று (சிவபெருமான்) கருதும் இடம். (பி - ம்.) 'குறிக்கு மிடத்தித் தடநதி நீர்' கோடீரம் - சடை. பொலன் குவடு - மேரு மலை.

(அடி, 4.) (பி - ம்.) 'சுறவுக் கொடி'

(வேறு)

91. சொற்கொடி யோடு மலர்க்கொடி கொய்து
தொடுத்த விரைத்தொடையும்
சுந்தரி தீட்டிய சிந்துர மும்மிரு
துங்கக் கொங்கைகளின்

விற்கொடி கோட்டிய குங்கும முங்குடை
வெள்ளங் கொள்ளைகொள
வெளியே கண்டுநின் வடிவழ கையன்
விழிக்கு விருந்துசெய

இற்கொடி யோடு கயற்கொடி வீரன்
எடுத்த கருப்புவிலும்
இந்திர தனுவும் வணங்க வணங்கும்
இணைப்புரு வக்கொடிசேர்

பொற்கொடி யிமய மடக்கொடி வைகைப்
புதுநீ ராடுகவே
பொருநைத் துறையொடு குமரித் துறையவள்
புதுநீ ராடுகவே. (கூ)

92. கொள்ளைவெ ளருவி படிந்திடு மிமயக்
கூந்தன் மடப்பிடிபோற்
கொற்கைத் துறையிற் சிறைவிரி யப்புனல்
குடையு மனப்பெடைபோல்

---

91. (அடி, 1.) சொற்கொடி - கலைமகள். மலர்க் கொடி - திருமகள். தொடை - மாலை. சுந்தரி - இந்திராணி.

(அடி, 2.) விற்கொடி கோட்டிய - துர்க்கை எழுதிய. வடிவழகு - இயற்கை யழகு.

(அடி, 3.) இற்கொடி - மனைவி; இங்கே இரதி. கயற்கொடி வீரன் - காமன். காமன் மனைவியொடு வில்லெடுத்தல்: 55. இந்திர தனு - வான வில். இரதியின் வில்லும் காமன் வில்லுமாகிய இரண்டு விற்களும், இந்திர தனுக்கள் இரண்டும் புருவங்களுக்கு உவமை; இந்திரதனு இரண்டென்பது, "எழிலியும், தனிதனித்திரு தனுவெடுத்தன" (தக்க. 159) என்பதனாலும் அதன் குறிப்புரையாலும் உணரப்படும்.

92. (அடி, 1.) கொள்ளை - மிகுதி. இமயக் கூந்தல் மடப்பிடி: 62, 376. மடப்பிடி முதலியன அம்பிகைக்கு உவமை.

தெள்ளமு தக்கட னடுவிற் றேன்று
செழுங்கம லக்குயில்போல்
தெய்வக் கங்கைத் திரையூ டெழுமொரு
செம்பவ ளக்கொடிபோற்.

கள்ளவிழ் கோதையர் குழலிற் குழலிசை
கற்றுப் பொற்றருவிற்
களிநற வுண்ட யடப்பெடை யோடு
கலந்து முயங்கிவரிப்

புள்ளுறை பூம்பொழின் மதுரைத் துறைமகள்
புதுநீ ராடுகவே
பொருநைத் துறையொடு குமரித் துறையவள்
புதுநீ ராடுகவே. (௯௦)

---

௯௦. ஊசற்பருவம்

93. ஒள்ளொளிய பவளக் கொழுங்கான் மிசைப்பொங்கும்
ஒழுகொளிய வயிரவிட்டத்
தூற்றுஞ் செழுந்தண் ணிலாக்கால் விழுந்தனைய
ஒண்டரள வடம்வீக்கியே

அள்ளிட வழிந்துசே யொளிதுளும் புங்கிரண
அருணரத் நப்பலகைபுக்
காடுநின் றேற்றமப் பருதிமண் டலம்வளர்
அரும்பெருஞ் சுடரையேய்ப்பத்

(அடி, 2.) அமுதக் கடல் - பாற்கடல்; அமுதம் - பால். கமலக் குயில்: திருமகள்.

(அடி, 3.) குழல் - கூந்தல். குழலிசை - வேய்ங்குழலிசை. பொற்றரு - கற்பகம்.

(அடி, 3-4.) வரிப்புள் - கீற்றுக்களையுடைய ஆண்வண்டு.

93. அம்பிகை மாணிக்கவூசல் ஆடுதல் கூறப்படும்.

(அடி, 1.) கால் - தூண். வயிரத்தாலாகிய விட்டம். கால் விழுந்தனைய - ஒழுகின்றபோன்ற. தரளவடம் - முத்துவடம். (பி - ம்.) 'வீக்கிடும்.'

(அடி, 2.) அள்ளிட - அள்ளிக் கொள்ளும்படி. (பி - ம்.) 'செற்றொளி.' அருணரத்நப் பலகை - மாணிக்கப் பலகை; அருணம் - சிவப்பு. சிவபெருமான் சூரியமண்டலத்தில் எழுந்தருளியிருப்பர்.

தெள்ளுசுவை யமுதங் கனிந்தவா னந்தத்
திரைக்கடன் மடுத்துழக்கும்
செல்வச் செருக்கர்கண் மனக்கமல நெக்கபூஞ்
சேக்கையிற் பழையபாடற்
புள்ளொலி யெழக்குடி புகுந்தசுந் தரவல்லி
பொன்னூச லாடியருளே
புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி
பொன்னூச லாடியருளே. (க)

94. விற்பொலிய நிலவுபொழி வெண்ணித் திலம்பூண்டு
விழுதுபட மழகதிர்விடும்
வெண்டரள வூசலின் மிசைப்பொலிவ புண்டரிக
வீட்டிற் பொலிந்துமதுரச்
சொற்பொலி பழம்பாடல் சொல்லுகின் றவளுநின்
சொருபமென் பதுமிளநிலாத்
தோற்றுமதி மண்டலத் தமுதமய மாயம்மை
தோன்றுகின் றதும்விரிப்ப
எற்பொலிய வொழுகுமுழு மாணிக்க மணிமுகப்
பேறிமறை முகிறவழ்வதவ்
வெறிசுடர்க் கடவுடிரு மடியிலவன் மடமகள்
இருந்துவிளை யாடலேய்க்கும்

(அடி, 3.) ஆனந்தமாகிய கடல். செல்வம் - சிவஞானமாகிய செல்வம். செருக்கர்கள் - இறுமாப்புடையவர்கள்; "இருங்களி யாயின்றி யானிறு மாப்பவின் பம்பணிவோர், மருங்களி யாவன லாடவல் லோன்" (திருச்சிற். 52) என்பதில் இறுமாப்புக் கூறியது காண்க. மனக் கமலமாகிய சேக்கை; பூ - பொலிவு. பழைய பாடல் - வேதம்.

(அடி, 4.) புள் - வண்டு. கமலமென்றதற்கேற்பப் புள்ளொலி கூறப் பட்டது. புழுகுநெய்ச் சொக்கர்: 157.

(அடி, 3-4.) சேக்கையிற் புகுந்த வென்க.

94. அம்பிகை முத்தாலாகிய ஊசலை ஆடுதல் கூறப்படும்.

(அடி, 1.) பொலிவ - விளங்குதல். புண்டரிகம் - வெண்டாமரை. (பி - ம்.) 'வீட்டுப்'

(அடி, 2.) சொல்லுகின்றவள் - கலைமகள். கலைமகளை அம்பிகையின் ஒரு கூறென்பர். (பி - ம்.) 'தூற்றுமதி மண்டலத் தமுதமாயம்மை நீ' அம்பிகை சந்திரமண்டலத்தில் இருத்தல்: 73.

(அடி, 3.) எல் - ஒளி. மாணிக்க மணிமுகப்பு - மாணிக்கம் பதித்த அழகிய வாயில்மாடம். சுடர்க்கடவுள் - சூரியன். மடமகள் - யமுனைநதி;

பொற்புரிசை மதுரா புரிப்பொலி திருப்பாவை
பொன்னூச லாடியருளே
புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி
பொன்னூச லாடியருளே. (உ)

95. உருகிய பசும்பொன் னசும்பவெயில் வீசுபொன்
னூசலை யுதைந்தாடலும்
ஒண்டளி ரடிச்சுவ டுறப்பெறு மசோகுநற
வொழுகுமலர் பூத்துதிர்வதுன்
திருமுனுரு வங்கரந் தெந்தையார் நிற்பது
தெரிந்திட நமக்கிதுவெனுச்
செஞ்சிலைக் கள்வனொரு வன்றொடை மடக்காது
தெரிகணைகள் சொரிவதேய்ப்ப
எரிமணி குயின்றபொற் செய்குன்று மழகதிர்
எறிப்பவெழு செஞ்சோதியூ
டிளமதி யிமைப்பதுன் றிருமுகச் செவ்விவேட்
டெழுநாத் தலைத்தவமவன்
புரிவது கடுக்குமது ராபுரி மடக்கிள்ளை
பொன்னூச லாடியருளே
புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி
பொன்னூச லாடியருளே. (ங)

அது நீலநிறமுடையது. மாணிக்கமாடத்துக்குச் சூரியனும் அதில் தவழு மேகத்துக்கு யமுனையும் உவமைகள்.

95. அம்பிகை பொன்னூசல் ஆடுதல் கூறப்படும்.

(அடி, 1.) அசும்ப - துளிப்ப. மகளிர் உதைத்தலால் அசோகு மலரு மென்பர்; "ஏடவிழ் மகிழ்சு வைக்க வெழிற்பாலை நண்பு கூடப், பாடல நிந்திக் கத்தேம் படிமுல்லை நகைக்கப் புன்னை, ஆடநீள் குரவ ணைக்க வசோகுதைத் திடவா சந்தி, பாடமாப் பார்க்க வார்சண் பகநிழல் படத்த ளிர்க்கும்" (சூடா. 12-ஆம். 95.) அசோக மரத்தில் தொடுத்த ஊசலாதலின் இங்ஙனம் கூறினர்; "ஒண்டளிர்ச் செயலை, ஓங்குசினைத் தொடுத்த வூசல்" (அகநா. சூஅ : 5-6); "செந்தளிர்ப் பிண்டிச் சினைதொறுந் தொடுத்த......... ஊக்கமை யூசல்" (பெருங். க. 46 : 176-9.)

(அடி, 2.) தெரிந்து இடம் நமக்கு இது எனு; இடம் - சமயம்; "இடனறிந் தூடி" (நாலடி. 384.) கள்வன் - மன்மதன்.

(அடி, 1-2.) அசோகமலரும் மன்மதன் அம்புகளில் ஒன்றாதலின் இங்ஙனம் கூறினர்.

(அடி, 3.) எரிமணி - நெருப்பைப்போன்ற மாணிக்கம் (25.) குயின்ற - பதித்த. இமைப்பது - விளங்குவது. எழுநாத்தலை - அக்கினியில். அவன் - சந்திரன்.

96\. கங்கைமுடி மகிழ்நர்திரு வுளமசைந் தாடக்
கலந்தாடு பொன்னூசலக்
கடவுடிரு நோக்கத்து நெக்குருகி யிடநின்
கடைக்கணைக் கத்துமற்றச்
செங்கண்விடை யவர்மனமு மொக்கக் கரைந்துருகு
செய்கையவர் சித்தமேபொற்
றிருவூச லாவிருந் தாடுகின் றுயெனும்
செய்தியை யெடுத்துரைப்ப
அங்கணெடு நிலம்விடர் படக்கிழித் தோடுவேர்
அடியிற் பழுத்தபலவின்
அளிபொற் சுளைக்குடக் கனியுடைந் தூற்றுதேன்
அருவிபில மேழுமுட்டிப்
பொங்கிவரு பொழின்மதுர மதுரைநா யகிதிருப்
பொன்னூச லாடியருளே
புழுகுநெய்ச் செக்கர்திரு வழகினுக் கொத்தகொடி
பொன்னூச லாடியருளே. (ச)

97\. சேர்க்குஞ் சுவைப்பாட லமுதொழுக வொழுகுபொற்
றிருவூசல் பாடியாடச்
சிவபிரான் றிருமுடி யசைப்பமுடி மேற்பொங்கு
செங்கணர வரசகிலம்வைத்
தார்க்கும் பணடவி யசைப்பச் சராசரமும்
அசைகின்ற தம்மனையசைந்
தாடலா லண்டமு மகண்டபகி ரண்டமும்
அசைந்தாடு கின்றதேய்ப்பக்

96\. அம்பிகையாடும் ஊசலுக்கும் சிவபெருமான் திருவுள்ளத்திற்கும் ஒப்புமை கூறப்படும்.

(அடி, 1.) நோக்கத்து - பார்வையினால்; அவர் கண்களுள் ஒன்று அக்கினியாதலின் அதனாற் பொன்னூசல் உருகிற்றென்றார்.

(அடி, 3) விடர் - பிளப்பு. வேரடியிற் பழுத்த பலவு: 52, 56. அளி - மிகக்கனிந்த. பொற்சுளை - பொன்போன்ற சுளை. பிலம் ஏழும் - கீழுலகங்கள் ஏழினையும்.

(அடி, 4.) (பி - ம்.) 'மதுரை மதுரநாயகி'

97\. (அடி, 1.) பாடலைப்பாடி ஊசலை ஆட என்க. மகிழ்ச்சியால் சிவபிரான் தலையசைத்தனர் (79.) அரவரசு - ஆதிசேடன். அகிலம் - உலகம்.

(அடி, 2) பணடவி - படங்களின் தொகுதி (6.) அம்மனை - தாயாகிய நீ. அகண்ட பகிரண்டமும் - பிளவுபடாத வெளியிலுள்ள அண்டங்கள் முழுவதும்.

கார்க்கொந் தளக்கோதை மடவியர் குழற்கூட்டு
கமழ்நறும் புகைவிண்மிசைக்
கைபரந் தெழுவதுரு மாறிரவி மண்டலம்
கைக்கொள விருட்படலம்வான்
போர்க்கின்ற தொக்குமது ராபுரி மடக்கிள்ளை
பொன்னூச லாடியருளே
புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி
பொன்னூச லாடியருளே. (ரு)

98. தேர்க்கோல மொடுநின் றிருக்கோல முங்கண்டு
சிந்தனை புழுங்குகோபத்
தீயவிய மூண்டெழுங் காமா னலங்கனற்
சிகையென வெழுந்துபொங்கத்
தார்க்கோல வேணியர்த முள்ளமென வேபொற்
றடஞ்சிலையு முருகியோடத்
தண்மதி முடித்ததும் வெள்விடைக் கொண்மணி
தரித்ததும் விருத்தமாகக்
கார்க்கோல நீலக் கருங்களத் தோடொருவர்
செங்களத் தேற்றலுமலர்க்
கட்கணை துரக்குங் கரும்புருவ வில்லொடொரு
கைவிற் குனித்துநின்ற

(அடி, 3.) கொந்தளக் கோதை மடவியர்-கூந்தலில் மாலையை அணிந்த மகளிர்; கோதை - மாலை. ரவிமண்டலம் - சூரிய மண்டலத்தை. இருட் படலம் - இருளின் பரப்பு. புகைக்கு இருட்படலம் உவமை.

98. அம்பிகை திக்குவிசயம் செய்த காலத்துக் கைலைக்குச் சென்ற போது சிவபெருமான் முன் நின்றதும், அவர் அம்பிகையின்பாற் காதல் பூண்டதும் கூறப்படும்.

(அடி, 1.) கோபம், கைலைமேற் படையெடுத்து வந்தமை கருதி உண் டாயது. (பி - ம்.) 'தீயணைய' கோபத்தீ அவியக் காமத்தீ எழுந்ததென்றது ஒரு நயம். வெகுளியைக் காமம் வென்றது. (பி - ம்.) 'காமானலங் கான்ற சிகையென வெழுந்து பொங்கும்', 'சிகையெழ'

(அடி, 2.) தாரை அணிந்த கோலத்தையுடைய வேணி; வேணி - சடை. காமாக்கினியால் சிவபிரானுள்ளமும் மேருமலையும் ஒருங்கே உருகின. தடஞ் சிலை-பெரிய வில்லாகிய மேருமலை. காமமயக்கம் உடையவர்களுக்குச் சந்திர னும் விடை மணியோசையும் துன்பத்தை மிகுவிப்பனவாதலின் அவ்விரண் டும் விருத்தமாயின; விருத்தம் - பொருந்தாதன; பகையென்றபடி.

(அடி, 3) நீலக் கருங்களம்-கருங்குவளை மலரைப்போன்ற கரிய கழுத்து; "குவளைக் களத்தம் பலவன்" (திருச்சிற். 33.) ஒருவர்-சிவபெருமான். ஏற்ற

போர்க்கோல மேதிரு மணக்கோல மானபெண்
பொன்னூச லாடியருளே
புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி
பொன்னூச லாடியருளே. (௬)

99. குழியும் பசுங்கண் முசுக்கலை வெரீஇச்சிறு
குறும்பலவி னெடியபாரக்
கொம்பொடி படத்தூங்கு முட்புறக் கனியின்
குடங்கொண்டு நீந்தமடைவாய்

வழியுங் கொழுந்தே னுவட்டெழு தடங்காவின்
வள்ளுகிர்க் கருவிரற்கூன்
மந்திக ளிரிந்தேகும் விசையினில் விசைத்தெழு
மரக்கோடு பாயவயிறு

கிழியுங் கலைத்திங்க ளமுதருவி தூங்குவ
கிளைத்தவண் டுழுபைந்துழாய்க்
கேசவன் கால்வீச வண்டகோ ளகைமுகடு
கீண்டுவெள் ளருவிபொங்கிப்

பொழியுந் திறத்தினை நிகர்க்குமது ரைத்தலைவி
பொன்னூச லாடியருளே
புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி
பொன்னூச லாடியருளே. (௭)

லும்-எதிர்த்தவுடன். மலர்க்கட்கணை துரக்கும் கரும்புருவ வில்-மலர்போன்ற கண்ணாகிய கணையைச் செலுத்தும் கரிய புருவமாகிய வில்; மலராகிய தேனையுடைய அம்பைச் செலுத்தும் கரும்பின் உருவமாகிய வில். புருவ வில்லையும் கைவில்லையும் வளைத்து. (பி - ம்.) 'ஏற்றலமரக்'; 'கருப்புருவ வில்'

99. குரங்குகளின் செயல்கள் கூறப்படும்.

(அடி, 1.) பொழிலில் உண்டாகும் தேன்வெள்ளத்திற் பலாப்பழத்தைக் குடமாகக்கொண்டு முசுக்கலை நீந்தியது; வெரீஇ - அஞ்சி. முட்புறக் கனி - பலாப்பழம். கனியாகிய குடம்; கனியின்; இன்: வேண்டா வழிச் சாரியை. (பி - ம்.) 'மடல் வாய்'

(அடி, 2.) உவட்டெழு - பெருக்கெடுக்கின்ற. வள் உகிர் - கூரிய நகம். மந்தி-பெண்குரங்கு. இரிந்து ஏகும்-கெட்டு ஓடுகின்ற. (பி - ம்.) 'இருந்தேகும்.'

(அடி, 3.) தூங்குவ - ஒழுகுதல். அண்டகோளகைமுகடு - வானத்தின் உச்சி. கீண்டு - பிளந்து; "கீள்வது செய்த கிழவோன்" (திருச்சிற். 247.) வெள்ளருவி - இங்கே, கங்கை.

100. ஒல்குங் கொடிச்சிறு மருங்கிற் கிரங்கிமெல்
லோதிவண் டார்த்தெழப்பொன்
ஊசலை யுதைந்தாடு மளவின்மலர் மகளம்மை
உள்ளடிக் கூன்பிறைதழீஇ

மல்குஞ் சுவட்டினை வலம்புரிக் கீற்றிதுகொல்
வாணியென் றசதியாடி
மணிமுறுவல் கோட்டநின் வணங்கா முடிக்கொரு
வணக்கநெடு நாண்வழங்கப்

பில்குங் குறும்பனிக் கூதிர்க் குடைந்தெனப்
பிரசநா றைம்பாற்கிளம்
பேதையர்க ளூட்டுங் கொழும்புகை மடுத்துமென்
பெடையொடு வரிச்சுரும்பர்

புல்குந் தடம்பணை யுடுத்தமது ரைத்தலைவி
பொன்னூச லாடியருளே
புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி
பொன்னூச லாடியருளே. (அ)

101. கொன்செய்த செழுமணித் திருவூச லரமகளிர்
கொண்டாட வாடுந்தொறும்
குறுமுறுவ னெடுநில வருந்துஞ் சகோரமாய்க்
கூந்தலங் கற்றைசுற்றும்

---

101. (அடி, 1.) ஒல்கும் - தளர்கின்ற. (பி - ம்.) 'சிறு மருங்குற்கு' ஓதி - கூந்தல். எழ - எழும்படி.

(அடி, 1-2.) உள்ளடிக் கூன்பிறை தழீஇ மல்கும் சுவடு-உள்ளங்காலில் உள்ள வளைந்த பிறையின் சுவடு; இது சிவபெருமான் அம்பிகையின் ஊடலை நீக்கும்பொருட்டுப் பணிந்த காலத்து அமைந்தது. வலம்புரிக் கீற்று-சங்கரேகை. வாணி: விளி. அசதியாடல் - பரிகாசம் செய்தல்; சீவக. 1871. முறுவல் கோட்ட - நகைப்ப: (பி - ம்.) 'முறுவல் கோட்ல்' திருமகள் அசதியாடி நகைத்தவினுல் அம்பிகை நாணமடைந்து தலை வணங்கினுள். வணக்கத்தை நெடிய நாணம் உண்டாக்க.

(அடி, 3.) கூதிர்க்கு உடைந்தென - கூதிர்ப்பருவத்திற்கு மெலிவுற்றதாக. பிரசம் - தேன். ஐம்பாற்கு - கூந்தலுக்கு. கூதிர்க்குளிரால் வருந்திய வண்டு புகையின்கண் சென்று குளிர்காய்ந்தது.

(அடி, 4.) தடம் பணை - பெரிய வயல்கள்.

101. (அடி, 1.) கொன் - பெருமை. அரமகளிர் - தெய்வப்பெண்கள். முறுவலாகிய நிலவை. சகோரம் - நிலவை உண்ணும் பறவை.

தென்செய்த மழலைச் சுரும்பராய் மங்கைநின்
செங்கைப் பசுங்கிள்ளையாய்த்
தேவதே வன்பொலிவ தெவ்வுருவு மாமவன்
திருவுருவின் முறைதெரிப்ப

மின்செய்த சாயலவர் மேற்றலத் தாடிய
விரைப்புனலி னருவிகுடையும்
வெள்ளானை குங்குமச் செஞ்சேறு நாறமட
மென்பிடியை யஞ்சிநிற்கும்

பொன்செய்த மாடமலி கூடற் பெருஞ்செல்வி
பொன்னூச லாடியருளே
புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி
பொன்னூச லாடியருளே. (கூ)

102\. இருபதமு மென்குரற் கிண்கிணியு முறையிட்
டிரைத்திடு மரிச்சிலம்பும்
இறுமிறு மருங்கென் றிரங்குமே கலையும்பொன்
எழுதுசெம் பட்டுவீக்கும்

(அடி, 2.) (பி - ம்.) 'நங்கைநின்' அம்பிகை தன் திருக்கையில் கிளியை ஏந்துவள். தேவதேவன் - சிவபெருமான். (பி - ம்.) 'தேவர் தேவன்'

(அடி, 1-2.) சிவபெருமான் அம்பிகையின் முறுவல் முதலியவற்றாற் சிறந்த இன்பத்தை அடைய வேண்டிச் சகோரப்பறவையாகவும் வண்டாகவும் கிளியாகவும் ஆயினர். அச்செயல் உலகிலுள்ள எல்லாவுருவமும் அவரது வடிவமே யென்னும் இயல்பை வெளிப்படுத்தியது.

(அடி, 3.) மேற்றலத்து - மேன்மாடத்தில். மகளிர் மேன்மாடத்தில் நீர் ஆட அந்நீர் கீழே வந்து வெள்ளானையை ஆட்டியது. இதனால் மாடங்களின் உயர்வு கூறப்பட்டது. வெள்ளானை தன்னுடைய வேற்றுநாற்றத்தை அறிந்து பிடி ஊடுமென்று அஞ்சி நின்றது.

102\. அம்பிகையின் பாதாதிகேசம் கூறப்படும். தெய்வங்களைப் பாதாதிகேசமாக வருணித்தல் மரபென்பர்.

(அடி, 1.) அரிச் சிலம்பு - உள்ளிடு பரலையுடைய சிலம்பு. (பி. - ம்.) 'மறைச்சிலம்பும்' இறும் - ஒடியும். வீக்கும் - கட்டிய.

திருவிடையு முடைதார மும்மொட்டி யாணமும்
செங்கைப் பசுங்கிள்ளையும்
திருமுலைத் தரளவுத் தரியமும் மங்கலத்
திருநாணு மழகொழுகவின்

றருள்பொழியு மதிமுகமு முகமதியி னெடுநில
வரும்புகுறு நகையுஞான
ஆனந்த மாக்கடல் குடைந்துகுழை மகரத்தொ
டமராடு மோடரிக்கட்

பொருகயலும் வடிவழகு பூத்தசுந் தரவல்லி
பொன்னூச லாடியருளே
புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி
பொன்னூச லாடியருளே. (க0)

மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ்
முற்றிற்று.

(அடி, 2.) உடைதாரம், ஒட்டியாணம் : இடையிலணியும் ஆபரணங்கள். தரள உத்தரியம் - முத்தாலாகிய மேலாடை. (பி. - ம்.) 'தரளமு முத்தரிகமும்'

(அடி, 3.) குழையாகிய மகரம்.

(அடி, 4.) கயலுமாகிய வடிவழகு என்க.

3 AUG 1947 MADRAS

செய்யுள் முதற்குறிப்பகராதி

எண்—செய்யுளெண்

அஞ்சிலம்பு, 53
அமரர்க்கதிபதி, 30
அமரில் வெங்கிடு, 12
இருபதமும், 102
இழியும் புனல், 89
உண்ணிலா, 14
உயிராயிருக்கின்ற, 78
உருகிய பசும்பொன், 95
உருகி யுருகி, 44
ஊன்றுங்கரடக், 26
எண்ணில் பல, 67
ஏடகத்தெழு, 72
ஒல்குங்கொடி, 100
ஒழுகிய கருணை, 41
ஒள்ளொளி மர, 82
ஒள்ளொளிய, 93
ஓடும் படலை, 25
கங்கைமுடி, 96
கடகளிறு, 11
கண்டுபடு, 63
கரைக்குங்கடா, 73
கள்ளூறு, 11
கார்கொண்ட, 1
காரிற் பொழி, 28
காலத்தொடு, 43
கீற்றுமதி, 65
குண்டுபடு, 54
கும்பஞ்சுமந்த, 69
குருமணி, 21
குலத்தோடு, 64
குலைபட்ட, 76
குழியும் பசுங்கண், 99
கைத்தலமோ, 4
கைம்மலர், 81
கொழுதிமதர், 45
கொள்ளை வெள், 92
கொன் செய்த, 101
கோடுங்குவடும், 47
சங்குகிடந்த, 22
சங்கோலிடுங், 50
சமரிற்பிறகிடு, 39
சிகரவட வரை, 3
சுண்ணந்திமிர்ந்து, 59
சுழியுங்கருங்கட், 7
சுற்று நெடு, 15
செழுமறை, 42
சென்றிடுவாளி, 40
சேர்க்குஞ் சுவை, 97
சேலாட்டு, 37
சேனைத்தலைவர், 29
சொற் கொடி, 91
தகரக்கரிய, 32
தகரக்குழலின், 60
தசைந்திடு, 19
தமரான, 77
திங்கட்கொழுந்து, 74
துங்கமுலைப்பொற், 88
துளிக்கும் பனி, 87
துளி தூங்கு, 70
தூங்குசிறை, 86
தென்னந்தமிழ், 23
தேர்க்கோல, 98
தேனெழுகு, 57
தொடுக்குங்கடவுட், 61
நாளவட்டத், 33
நிரைபொங்கிடும், 84
நீராட்டி, 13
பண்ணரு, 17
பண்ணுறுகிளிமொழி, 85
பமரமடுப்பக், 5
பரிமள, 20
பருவரை, 51
பின்னற்றிரை, 49
புதையிருள், 52
பூமருவெடி, 35
பெருந்தேன், 62
பைவைத்த, 48
பொய்வந்த, 34
மங்குல்படு, 16
மணிகொண்ட, 2
மத்தமதமா, 46
மழைக் கொந்தள, 71
மறிக்குந்திரை, 90
முகமதியூடெழு, 18
முத்தமழுத்திய, 79
முது சொற், 31
முயல்பாய், 55
முன்பும்பர், 58
மேகப் பசுங்குழவி, 6
வடக்குங்கும, 58
வடம்பட்ட, 56
வடிபட்ட, 16
வளையாடு, 83
வார்க்குன்று, 27
வானத்தரு, 38
விண்டலம், 66
விண்ணளிக்கும், 36
விளரிமிழ, 80
விற்பொலிய, 94
வீக்குஞ்சிறு, 24
வெஞ்சூட்டு, 8
வெள்ளித்தகட்டு, 9

Printed at KABEER PRINTING WORKS, Madras MS 524
and Published by S. Kalyanasundara Iyer, Paper Issue Card No. Ms. 376